

கல்கி
KALKI
28.3.2004
ரூ.6.00
நட்சத்திரப் பிரசார
அபாயங்கள்!
தேர்தல் மூடில்
சூர்யா!
ஆயுர்வேதம்
-இலவச இணைப்பு

உள்ளே...

ஹலோ நீங்க சுகமா?
மார்க் வாங்கலாம் வாங்க!
அடுத்த வாரம்



கல்கி

28.3.2004

ஏப்ரல் - மே மாதங்களில், கிராமப் புறங்களில் இருந்து வேலை தேடி நகரங்களுக்குக் குடி பெயரும் தொழிலாளர்கள், லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். ஓரிசாவைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளர், மும்பையில் இருப்பார். ராய்ப்பூரில் ரிக்ஷா ஓட்டுபவர், விஜயநகரத்து செங்கல் சூளைகளில் வேலை பார்ப்பார். இப்படி கிட்டத்தட்ட இருபது லட்சம் பேர் வோட்டுப் போட முடியாத நிலை, ஒரிசா மாநிலத்தில் மட்டும் நிலவுகிறது.

கிராமப்புறத் தொழிலாளர்கள் விட்டார்களாம். ஏப்ரல் - மே என்றால், இது இன்னும் அதிகமாகும் என்பதில் சந்தேகமே வேண்டாம். இவர்கள் எப்படி வோட்டுப் போடுவார்கள்?

சென்ற வருடம் இதே நாளில் தெலுங்கானாவின் மெஹபூப் நகரிலிருந்து மும்பை செல்லும் பஸ்ஸில், பிழைப்புத் தேடியும், பட்டினியிலிருந்து தப்பிக்கவும் செல்லும் மக்களோடு நானும் பயணம் செய்தேன். ஐம்பத்தியெட்டுப் பேர் இருக்கை கொண்ட பஸ்ஸில், நூறு பேர் இருந்தார்கள். ஒவ்வொரு பஸ்ஸிலும் இப்படித்தான். கிராமப்புறங்களில் மூன்றில் இரண்டு பங்கு இப்படி ஊரை விட்டே போய்விடுகிறபோது, இவர்கள் எப்படி ஜனநாயக முறையில் நடைபெறும் தேர்தலில் பங்கு பெறுவதாகக் கூற முடியும்?

வாக்களிக்காத 20 லட்சம் பேர்!



குறித்த தேசியக் கமிஷன், 1991லேயே ஏப்ரல் - மே மாதங்களில் ஒரு கோடி பேர் ஊர் விட்டு ஊர் போய் விடுவதைக் கணக்கெடுத்திருக்கிறது. (இதில் சுமார் நாற்பத்தைந்து லட்சம் பேர், ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்துக்குப் போய் விடுபவர்கள்; சுமார் அறுபது லட்சம் பேர், மாநிலத்துக்குள்ளேயே புலம் பெயரும் தொழிலாளர்கள்) இப்போது இன்னும் அதிகம்!

இவர்களுக்குத் தபால் வோட்டுப் போடக் கூட வழி வகை கிடையாது!


ஆயிரக்கணக்கான ஆதிவாசிகள், போலங்கிர் மாவட்டத்திலிருந்து பிழைப்புத் தேடி, பிப்ரவரி மாதமே புறப்பட்டு

இந்த ஆண்டு மட்டும், மூன்று லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் குண்டூருக்கும், கடப்பாவுக்கும், ஹைதரா

பாதுக்கும் வேலை தேடிப் போயிருக்கிறார்கள். இதுவும் பிப்ரவரி மாதப் புள்ளி விவரம் தான். ஏப்ரல் மாதத்தில் எப்படி இருக்கும் என்று பாருங்கள். ராமநாதபுரத்திலிருந்து, தமிழ்நாட்டின் பிற நகரங்களுக்கு, ஏப்ரல் - மே மாதங்களில் வேலை தேடிப் போகிறார்கள். பலர் மாநிலத்தை விட்டே புலம் பெயர்கிறார்கள். இந்த இரண்டு வகையினருமே வோட்டுப் போட முடியாது.

உத்தரப்பிரதேசத்திலுள்ள கஸியாபூரில் மலாரி கிராமத்தில், 1998ல் எல்லோருமே வோட்டுப் போட விரும்பினர். தலித்துகள் மட்டும் போட முடியவில்லை. அவர்களுக்கு





நான்கு கி.மீ தூரத்தில் வோட்டுச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது. சைக்கிள் உட்பட எந்த வாகனப் போக்குவரத்தும் கூடாது என்று தேர்தலன்று தடை செய்யப்பட்டிருந்தது. இது வேண்டுமென்றே அவர்களை வோட்டுப் போட விடாமல் தடுக்கிற வேலை அல்லாமல் வேறு என்ன?

பள்ளிக்கூடத் தேர்வுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தேர்தல் தேதிகளைக் குறிக்கும்போது, லட்சக்கணக்கான கிராமப்புற மக்கள், வோட்டுப் போட வசதியாகவும் அல்லவா தேர்தல் நாட்கள் இருக்க வேண்டும்? இதற்கு வகை செய்யவில்லை என்றால், அப்புறம் என்ன ஜனநாயகம் அது?

- பி. சாய்நாத்

தமிழில் : சாருகேசி

(நன்றி: த ஹிந்து)

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு


நஜ்மா ஹெப்துல்லா, ஆரிப் முகமதுகான் போன்ற முஸ்லிம் தலைவர்கள் இப்போது பா.ஜ.க பக்கம் சாய்ந்திருக்கிறார்கள். 'இந்துத்வா' கட்சி என்று முத்திரை குத்தப்பட்டிருக்கும் பா.ஜ.க.வுக்கு, இது போன்ற முஸ்லிம் பிரபலங்களின் வருகையால் முஸ்லிம் வாக்காளர்களின் ஆதரவு கூடுமா? இது பற்றி தி.மு.க எம்.எல்.ஏ உசேனும், பா.ஜ.க மகளிரணித் தலைவரான லலிதா சுபாஷும் விவாதிக்கிறார்கள்.

உசேன்: தேசிய ஜனநாயக் கூட்டணியிலிருந்து தி.மு.க வெளியேறியதைத் தொடர்ந்து, 'நல்ல முடிவு; இப்போதுதான் இந்த முடிவை எடுக்கத் தோன்றியதா? என்று பல இஸ்லாமிய சமூகத்தினர் பாராட்டினார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் சேர நேர்ந்த பின்னணியை ஜமாத் கூட்டங்களில், விளக்கி எடுத்துச் சொன்ன காரணங்களையெல்லாம், முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.



லலிதா சுபாஷ்: நீங்கள் சொல்வது தவறு. முஸ்லிம்களை, மைனாரிட்டி வோட்டு வங்கியாகப் பார்த்த காங்கிரஸ், உங்களைத் திருப்திப்படுத்துவதற்காகப் பல காரியங்களைச் செய்தது. ஆனால் முஸ்லிம் சமுதாயத்தின் உண்மையான முன்னேற்றத்தில் அவர்களுக்கு அக்கறை இல்லை. இதை பல முஸ்லிம்கள் புரிந்து கொண்டு இப்போது பி.ஜே.பி.யை ஆதரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் மயங்கி ஏமாறமாட்டார்கள்!



உசேன்: இப்போது பா.ஜ.க செய்வது மட்டும் என்னவாம்? மெஜாரிடி மக்களின் வாக்கைப் பெற்று ஆட்சியைப் பிடிக்கத் திட்டமிட்டீர்கள். ஆட்சிக்கு வந்தவுடன், மைனாரிடி மக்கள் உங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால், மறுபடி ஆட்சிக்கு வருவது கஷ்டம் என்று புரிந்து கொண்டு விட்டீர்கள். முஸ்லிம்களைக் கவர, பல உபாயங்களைக் கையாளுகிறீர்கள். அவற்றில் ஒன்று, முஸ்லிம் தலைவர்களைக் கட்சியில் சேர்த்துக் கொள்ளுவது. ஆனால், அதற்கெல்லாம் முஸ்லிம்கள் மயங்கி, ஏமாந்து போய்விட மாட்டார்கள்.

லலிதா: பா.ஜ.க, மைனாரிடிகளுக்கு எதிரான கட்சி என்பது அடிப்படையிலேயே மிகவும் தவறான கருத்து. பா.ஜ.கவின் தாய்க்கட்சி ஜனசங்கம். அதனை, தமிழ்நாட்டில் ஆரம்பித்தவரே ஜான் என்கிற

எல்லா பாய்களுக்கும் பாதுகாப்புத் தருவது வாஜ்பாய்தான்!



கிறிஸ்தவ சகோதரர்தான். அப்படி இருக்கும் போது எங்களை மைனாரிடிக்கு எதிரானவர்கள் என்பது ஓர் அவதூறு பிரசாரம்தான்.

உசேன்: ஜனசங்கத்திலும், பா.ஜ.க விலும் ஒரு சில கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் இருக்கிறார்கள் என்பது ஒரு விளக்கமா! உங்கள் மீது மதச் சார்பின்மை முத்திரையைக் குத்திக் கொள்ளப் பார்க்கிறீர்கள்! உங்கள் தந்திரத்துக்கு நஜ்மா, ஆரிப் முகமது போன்ற சில மைனாரிடி இனத்தைச் சேர்ந்தவர்கள் இரையாகி விடுகிறார்கள். அவரவர் தங்கள் சுயநலத்துக்காக முடிவெடுக்கிறார்களே தவிர கொள்கைப் பிடிப்பினால் அல்ல!



லலிதா: பி.ஜே.பிக்கு ஒருவர் வந்தால் அதைச் சுயநலத்தில் எடுத்த முடிவு என்று குறை சொல்லுவது தவறு!

உசேன்: பின்னே என்ன? இருபத்தைந்து வருடம் காங்கிரஸ் கட்சி சார்பில் பெரிய பதவியில் இருந்துவிட்டு, இப்போது இன்னும் பெரிய பதவி(ஐ.நா.சபையில்)யை எதிர்பார்த்துதானே பா.ஜ.வை நஜ்மா ஆதரிக்கிறார். நஜ்மா, ஆரிப் இவர்கள் எல்லாம், முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த தனிநபர்கள். அவ்வளவுதான். இவர்களுக்குப் பின்னால் பெரிய அளவில் தொண்டர்கள் கிடையாது. டி.வி, பத்திரிகைகளில் பேட்டி தந்து, தங்களுக்கு விளம்பரம் தேடிக் கொள்ளலாம். கட்சிக்கு இவர்களால், முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுத் தர முடியாது.

லலிதா: பா.ஜ.க பதிமூன்று நாள் ஆண்டபோதும், பதிமூன்று மாதங்கள் ஆண்டபோதும் சரி, அடுத்து முழுமையான இந்த ஆட்சியின் போதும், சரி, தேசிய ஜனநாயகக் கூட்டணிதான் முன்னிலைப்படுத்தப்பட்டது. இதன் கன்வீனர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஒரு கிறிஸ்தவர்தான். நீங்களே சொல்லுங்கள். இந்த நாட்டில் மைனாரிடி சமூகத்துக்குப் பாதுகாப்பு இன்மை நிலவினால், அந்தச் சமூகத்தைச் சேர்ந்த பெர்னாண்டஸ் தே.ஜ. கூட்டணியின் கன்வீனர் பொறுப்பில் தொடர்ந்திருப்பாரா?

உசேன்: பா.ஜ.க, சில சென்சிடிவ் விஷயங்களை நேரடியாகக் கையாளுவதில்லை. சங்பரிவாரின் பிற அமைப்புகள் மூலம் செய்துவிட்டு, அவை தனி அமைப்பு, அவற்றின் சுதந்திரத்தில் எங்களால் தலையிட முடியாது என்று சால்ஜாப்புச் சொல்லி, திசை திருப்பி விடுகிறது. பெர்னாண்டஸ் உட்பட அனைவரது வாயையும் மூடிவிடுகிறீர்கள். குஜராத்தில் நடந்த கலவரங்களுக்குப் பின், முஸ்லிம்கள், பி.ஜே.பிக்கு எப்படி வாக்களிப்பார்கள்?

லலிதா: கோத்ரா சம்பவத்துக்கு யார் காரணம்? அதன் ரியாக்ஷன்தானே குஜராத் நிகழ்வுகள்? உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும்? தேர்தலில் மோடிக்குத்தானே மக்கள் வாக்களித்தார்கள்?

உசேன்: குஜராத்தில் எப்படி தேர்தல் நடத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்? முஸ்லிம்கள், கலவரத்துக்குப் பயந்து, வோட்டுப் போட வெளியில் வரவில்லையே! குற்றவாளிகள் தப்பிக்க ஏதுவாக கேஸ்களை நீர்த்துப் போக வைத்தவர்

மோடி! இதை உச்சநீதிமன்றமே கண்டிக்க வில்லையா?

நிருபர்: விவாதம் சற்று திசை மாறிப் போவது போல இருக்கிறது. சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள், இரண்டு பேரும்.

லலிதா : உசைன் பாய், நஸீர்பாய் என்று இந்தியாவில் இருக்கும் அத்தனை பாய்களுக்கும் முழுமையான பாதுகாப்பும், சுதந்திரமும் தரும் ஒரே பாய், வாஜ்பாய்தான்.

உசேன்: கேட்க நல்லாத்தான் அம்மா இருக்கு! நிஜம் அது இல்லை என்பதுதானே பிரச்னை! உங்களுக்கு இப்போது முஸ்லிம் வோட்டுகளும் வேணும் என்று நினைக்கிறீர்கள்; நீங்கள் முஸ்லிம்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்று ஓர் இமேஜை உருவாக்க முயல்கிறீர்கள். அதன் வெளிப்பாடுதான் மேடைகளில் முஸ்லிம்களுக்கு அனுசரணையாகப் பேசுவதும், முஸ்லிம் பிரபலங்களை கட்சிக்குள் இழுப்பதும்.

லலிதா: பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்த வாஜ்பாய் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து முஸ்லிம்கள் சந்தோஷப்படுகிறார்கள். தாங்கள் பா.ஜ.க பற்றி கொண்டுள்ள கருத்து தவறு என்று உணர ஆரம்பித்து விட்டார்கள். பா.ஜ.கவை ஆதரிக்கிறார்கள்.

உசைன்: நான் உங்களை ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். பா.ஜ.க. முஸ்லிம்களுக்கு எதிரான கட்சி இல்லை என்றால், வாணியம்பாடி இடைத் தேர்தலில், உங்கள் கூட்டணிக் கட்சியான தி.மு.க நிறுத்திய வேட்பாளர் நாகூர் அனீபாவை ஆதரிக்காமல், அதிமுக வேட்பாளரை ஆதரித்தீர்கள். அதற்கு என்ன காரணம் சொன்னீர்கள்? இந்து என்பதற்காக ஆதரிக்கிறோம் என்று சொன்னீர்கள். இது போதுமே உங்கள் நிஜ முகம் என்ன என்பதைக் காட்டுவதற்கு!

லலிதா: கூட்டணியில் இருந்த எங்களிடம் நீங்கள் ஆதரவு கேட்கவில்லை; காங்கிரஸ் கட்சியிடம் ஆதரவு கேட்டீர்களே... அது எப்படி சரி?

நிருபர்: மறுபடியும் பழைய கதையைக் கிளறிக் கொண்டிருக்கிறீர்களே!

உசைன்: முஸ்லிம்களைக் கவர்ந்து, வோட்டுக் களைப் பெற நீங்கள் நடத்தும் நஜ்மா நாடகமோ, மற்ற நாடகங்களோ பலன் தரப்போவதில்லை.

லலிதா: தேர்தல் முடிவுகள் வரட்டும். நீங்களே புரிந்து கொள்ளுவீர்கள்.

தொகுப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **ஸ்ரீஹரி**

நடக்குமென் பார்; நடக்கும்!



நடிகை கோபிகாவுக்கு (மேஷம்) முக்கியமானத் திருப்பம் இருக்குதாமே!

மேஷம்: வாழ்வில் மிக முக்கியமான திருப்பத்தைச் சந்திக்க இருக்கிறீர்கள். அதன் பலனாக, குடும்பத்திலும் உற்சாகமான சூழ் நிலை உண்டாகும். வாழ்க்கை வசதி கூடும். சொத்து விவகாரம் அனுகூலமாகும்.

ரிஷபம்: எதிர்பாராத பண வரவு வந்தால், ரொம்ப சந்தோஷப்படுங்க; பெண்கள் பொன், பொருள்னு கேட்பாங்க; வாங்கிக் கொடுங்க. கலைத் துறைக்காரங்க உசந்த நிலைக்குப் போவாங்க.

மிதுனம்: சுய தொழில் செய்றவங்களுக்கு மேன்மை உண்டாகும். அதே போல, அரசுப் பணியாளர்களுக்கும் ரொம்ப நல்ல நேரம். மாணவர்கள் புதிய முயற்சியிலே இறங்க லாம். உத்தியோகக் கோரிக்கைகள் சுலபமா நிறைவேறும்.

கடகம்: பதவி உயர்வு, சம்பள உயர்வுன்னு தூள் கிளப்பப் போறீங்க. தெய்வபலம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தில் எல்லாம் வெற்றிக் கொடி கட்டப் போறீங்க. தான, தருமம் அமைதி தரும்.

சிம்மம்: உத்தியோகம் சம்பந்தமா நீங்க போற பயணமெல்லாம் சக்ஸஸ் ஆகப் போகுது. பிரபு தனவான்களின் ஆதரவு கிடைக்கும். பிரிஞ்சவங்க ஒண்ணு சேருவாங்க. பெண்களுக்கு லக் அடிக்கப் போகுது.

கன்னி: சுப மங்கள காரியங்கள் சூப்பரா நடக்கப் போகுது. காசு செலவாகும்தான்; ஆனா சுபச் செலவு ஆச்சுங்களே! சந்தோஷமா கொண்டாடுங்க. உடன் பிறந்தவங்க ஆதரவு கிடைக்கும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும்.

துலாம்: செலவினங்கள் கூடிப் போய், பட்ஜெட் கையைக் கடிக்கும். சிக்கனமா இருந்தால், தப்பிக்கலாம். மாணவர்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் காத்திருக்கு. ஏற்றுமதி - இறக்குமதி ஆதாயம் தரும்.

விருச்சிகம்: போக்குவரத்து சம்பந்தப்பட்ட தொழிலில் லாப மழை பொழியும். பூர்வீகச் சொத்து, வழக்கு, வியாஜ்யம் அனுகூலமாகும். எதிர்பாராத தன லாபம் கிடைக்கலாம். மாணவர்களின் திறமை கூடும்.

தனுசு: குரு பலம் பூர்ணமாக இருக்கிறது. புதிய முயற்சிகள், சுபமங்களக் காரியங்கள் நிறைவேறும். சட்டம், இராணுவம், காவல் துறைகளுக்கு முன்னேற்றமான காலம். பெண்கள் நினைச்சது நடக்கும்.

மகரம்: மாணவர்கள் அனுகூலமான பலன்கள் பெறுவார்கள். நீண்ட காலமாக தள்ளிப் போன குலதெய்வப் பிரார்த்தனை நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும்.

கும்பம்: குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். சொத்து சேர்க்கை நிகழும். பெண்களுக்குத் தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். கூட்டுத் தொழிலில் முன்னேற்றம் உண்டு.

மீனம்: வெளிநாட்டு வர்த்தகம் செய்யறீங்களா? உங்கபாடு ஜாலிதான். மனை, நிலம், ரியல் எஸ்டேட் இனங்கள் முன்னேற்றமான சிக்னலையே காட்டுது. சரளமான பண வசதியிருக்கும். உற்சாகமா இருப்பீங்க!

அக்னிசர்மா பக்கம்

மார்ச் 24 முதல் 30 வரை

"ஸலாம் அலைக்கும்!"

'செம்பியனா! நீ எப்படி இங்க வந்து சேர்ந்தே, இத்தனை பாதுகாப்பையும் மீறி?'

"கிரிக்கெட் அணி வந்தா பின்னோடு பத்திரிகையாளர் படையும் வருமே.."

'நீ ஸ்போர்ட்ஸ் எழுதறியா, என்ன?" என்று கேட்டார் முஷாரஃப்.

'ஸ்போர்ட்டிவ்வா எழுதுவேன்!"

"நான்கூட எவ்வளவு ஸ்போர்ட்டிவ்வா இந்திய கிரிக்கெட் அணியை ஜனாதிபதி மாளிகைக்கு அழைச்சு, விருந்து கொடுத்து, பேசி, பழகி.."



• மாயாவதி

"ராவல்பிண்டி இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் இந்திய அணி ஜெயிச்சிருந்தா, இதே அளவுக்கு ஸ்போர்ட்டிவ்வா இருந்திருப்பீங்களா?"

"நிச்சயமா.. ஒரு சின்ன உல்டா தான் இருந்திருக்கும்... சச்சினைக் கிண்டல் பண்ணி, இன்ஸமாமை நேரடியா பாராட்டி இருப்பேன்!"

"இதே ஸ்போர்ட்டிவ் ஸ்பிரிட்டை அரசியலிலும் கொஞ்சம் காட்டலாமே?"

"எனக்கா உபதேசம் பண்ணறே... ஸ்போர்ட்டிவ்வா நடந்துக்கணும்னு அத்வானி கிட்டே போய்ச் சொல்லு!"

"என்ன திடீர்னு அத்வானி பேரு அடிபடுது?"

"உங்க அயலுறவுத்துறை இந்தோ - பாக். நல்லுறவுக்குப் பாடுபட்டாலும், உள்துறை முட்டுக்கட்டை போடுதே, அதனால்தான்... சரி, இப்ப நீ கிளம்பு.. நான் காலின் பவலை சந்திக்க ஒத்திகை பார்த்துக்கணும்."

"ஆமாமாம், அவரிடமும் நீங்க ஸ்போர்ட்டிவ்வா நடந்துக்கிறதா நடிச்சாகணுமே, ஒத்திகை தேவைதான்" என்று கூறி முஷாரஃப் தடியை எடுப்பதற்குள் தலை தெறிக்க ஓட்டம் பிடித்தேன்.

பெங்களூர் வந்துதான் நின்றேன்! ஒரே கோலாகலம்! எஸ்.எம். கிருஷ்ணா, அத்வானிக்குப் போட்டியாக தமது 'விஜயதுந்துபி யாத்திரை' கிளம்பிக் கொண்டிருந்தார்.

"உங்க ரதம் மாடர்னா, அல்லது அத்வானி ரதம் அதி நவீனமா?"


"அத்வானி ரதம் மாடர்னா இருக்கலாம்; ஆனா இது, ஹை டெக் நகரமான பெங்களூரில் தயாரான ஹை டெக் ரதம்! நானும் ஹைடெக் முதல்வர். தொடர்ச்சியா பல தடவை 'பெஸ்ட் முதல்வர்' பட்டம் வாங்கியிருக்கேன்!"

"டில்லியிலே பி.ஜே.பி. ஆட்சிக்கு மாறுதலைக் கேட்கறீங்க; அதே மாதிரி கர்நாடகாவிலும் ஆட்சி மாறணும்னு மக்கள் நினைச்சுட்டா, என்ன பண்ணறது...?"

"அங்கே அலங்கோல ஆட்சி; இங்கே கிருஷ்ணா ஆட்சி! பி.ஜே.பி. கட்சிக்காரங்க விதான் சௌதா பக்கம் வந்து ஆசையோடு பார்த்து ஜொள்ளு விட்டிருக்காங்க. ஆனா ஆட்சியைப் பிடிக்க முடியாது!"

"ஒரே கல்லில் ரெண்டு மாங்காய் அடிக்கப் பார்க்கறீங்க..!"

'நிச்சயம் ரெட்டை மாம்பழம் கிடைக்கும். விதான் சௌதாவிலும் காங்கிரஸ் ஆட்சி; டில்லி பார்லிமெண்டிலும் காங்கிரஸ் பெரும்பான்மை!"



• எஸ்.எம். கிருஷ்ணா

செய்திகள்,



"ஓவர் கான்ஃபிடன்ஸ் கூட தப்புத்தாங்க..."

"இது ஓவர் கான்ஃபிடன்ஸ் இல்லே, ஸெல்ஃப் கான்ஃபிடன்ஸ்!" என்று கூறி சங்கை எடுத்தார்; "பூம் பூம்பூம்" என்று ஊதினார். "குருக்ஷேத்திரப் போர்க் களத்தில் கண்ணன் ஊதினான்; இங்கே கிருஷ்ணா ஊதறேன்! நிச்சயம் வெற்றி!" என்றார்.

ரதம் நகர்ந்ததும் அங்கிருந்தே மாயாவதிக்கு ஒரு ஈ-மெயில் அனுப்பினேன்:

"டீ-பார்ட்டி கொடுத்தவங் களுக்கெல்லாம் இப்படி டிமிக்கி கொடுத்திட்டீங்களே; தனிச்சு நின்னு என்ன சாதிக்கப் போறீங்க...?"

பதில்: "பார்த்துக்கிட்டே இரு; கணிசமான வெற்றி இல்லேன்னாலும், தேவையான அளவு வெற்றி கிடைக்கும். அப்புறம் பி.ஜே.பியோ, காங்கிரஸோ, எது மத்தியில் ஆட்சி அமைக்கணும்னாலும் என் தயவு வேண்டியிருக்கும். அப்ப கவனிச்சுக்க மாட்டேன்?"

கேள்வி: " 'வழக்குகள் வாபஸ்' முதல் நிபந்தனையா இருக்கும்?"

பதில்: "ஏன், உங்க ஜெயலலிதா மட்டும் தான் அப்படியெல்லாம் ரகசிய நிபந்தனை போடலாமா? நான் போடக் கூடாதா?" என்று மாயாவதி கேட்டு மாயமானார்.

ஈ-மெயில் தொடர்புக்கு முற்றுப்புள்ளி விழவே, தமிழகம் திரும்பினேன். சேலத்தில் வெங்கய்யா நாயுடு!

"ஜெயலலிதா பிரசாரம் பாஸிடிவ்வா இருக்குன்றீங்க; ஸோனியாவை இத்தாலிக் காரின்னு பழிப்பது பாஸிடிவ் பிரசாரமா?"

"அதை போயஸ் தோட்டத்திலே போய்க் கேளு" என்றார் நாயுடு.

"அப்புறம், விநய் கத்தியார் வேற ஸோனியாவை 'ஹெலன் ஆஃப் ட்ராய்', 'காந்தாரி' அப்படின்னெல்லாம் பழிக்கிறார்... அதுவும் பிரதமரை மேடையிலே வைச்சுக்கிட்டே இப்படிப் பேசறார்..."

"இத பாரு, 'காந்தாரி', 'இத்தாலிக்காரி' என்றெல்லாம் சொல்லாமல் இருந்தா, ஸோனியா பிறப்பால் இந்தியராகி விடுவாரா?"

"பாருங்க மிஸ்டர் நாயுடு, ரொம்ப டீப்பா போய் ஸோனியாவைப் பழிக்காதீங்க. அதுவே அவர் பக்கம் அனுதாப அலையாக மாறிடும், ஜாக்கிரதை!" என்று எச்சரித்து விட்டு, ஸூப்பர் மேனிடம் இரவல் வாங்கிய அங்கி அணிந்து போயஸ் தோட்டத்தில் வந்து குதித்தேன்!

"தி.மு.க. தனி வேட்பாளர்களிடமிருந்து தலா ரூ.60 லட்சம் வாங்கியது குறித்து, தேர்தல் கமிஷன் விசாரணை நடத்தணும்னு அறிக்கை விட்டிருக்கீங்க..."

"ஆமா, அதுக்கென்ன?" என்றார் ஜெயலலிதா.

"அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து இத்தனை குறுகிய காலத்தில் அந்தக் கட்சிக்கு எப்படி, எவ்வளவு பணம் வந்து சேர்ந்தது என்பதற்கு ஒரு ஸி.பி.ஐ. விசாரணை வைக்கலாமா?" என்றேன்.

"நான்சென்ஸ்! இந்த ஆளை யாரு உள்ளே விட்டது?" என்று 'ஜெ' கர்ஜிக்கவும், ஸூப்பர் மேன் அங்கி விரிய, டாடா கூறிப் பறந்து அவர் கண்ணிலிருந்து மறைந்தேன்.

தீர்ப்பது செம்பியன்

புத்திசாலிகள் வெற்றி கொள்ளும் வழி!

சில விஷயங்கள் என்றும் நம் நினைவில் நிலைத்து நிற்கின்றன. அவைகள் நம் வாழ்வின் மிகச் சிறந்த தருணங்களை நமக்கு அடிக்கடி நினைவூட்டுகின்றன. அவை பருவகால மாற்றங்களையும் அவ்வப்போது மாறும் சூழ்நிலைகளையும் வென்று, நிலையாக நிற்பவை.




புத்திசாலிகள் போற்றும் முதலீடு: திட்டமிட்டு வெற்றி பெறும் புத்திசாலிகள் தேர்ந்தெடுப்பது, ஆபத்து இல்லாத, அதிக லாபம் தரும் முதலீட்டு முறையே.

ஏல உச்ச வரம்பு **40%**

ஸ்ரீராம் சீட்டுத் திட்டம்: சேமிக்கவும், அதிலிருந்தே கடன் பெறவும் வகை செய்யும் இருவழி சேமிப்பு முதலீட்டுத் திட்டம். சீட்டு ஏல உச்ச வரம்பு 40% ஆனதால் ஈவுத் தொகை (Dividend) உயர்ந்து வருகிறது.

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்: • 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டி • ரூ.12,000 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா • பலருக்கு வேலை வாய்ப்பு • தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.



புதுமைப் பொலிவு பெறுங்கள்: தாரண தமிழ்ப் புத்தாண்டை வரவேற்க ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். சிறுகச் சேமித்து செழிப்படையும் கலையையும், எளிதாகக் கடன் பெறும் நுட்பத்தையும் அறிந்து, புதுமைப் பொலிவு பெறுங்கள்.

தாலி பாக்கியம்!

என் அம்மாவிற்கு பணம் சேமிக்க வேண்டும் என்று தோன்றிய பொழுது ஸ்ரீராம் சிட்ஸில் ரூ.10,000 சீட்டில் சேர்ந்தார். இரண்டு வருடம் முன்பு என்னுடைய கடைசி தம்பிக்கு கல்யாணம் நிச்சயம் ஆனது. பிள்ளை வீட்டின் சார்பாக திருமாங்கல்யம் செய்யும் சமயத்தில் பணம் போதவில்லை. தக்க சமயத்தில் வந்த சீட்டுப் பணத்தை அம்மா கொடுத்த போது அப்பாவிற்கு ஆனந்த கண்ணீரே வந்து விட்டது. நாங்கள் எல்லோரும் ஸ்ரீராம் சிட்ஸில் உறுப்பினர்களாகி பயன் அடைந்து கொண்டு இருக்கிறோம்.


-என்.ரவி, மதுரை

ஸ்ரீராம் சிட்ஸ்

தமிழ்நாடு (பி) லிமிடெட்

சுப்ரமணியன் பில்டிங், 1 கிளப் ஹவுஸ் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 002. போன்: 5201 1833

WORDCRAFTS



ஒளிரும் இந்தியா; ஒடுங்கும் விவசாயி!

“இந்தியா ஒளிரவில்லை; சும்மாவேனும் ஊரை ஏமாற்ற இப்படியொரு பிரசார யுக்தியை பா.ஜ.க. மேற்கொண்டிருக்கிறது” என்பது காங்கிரஸ் தரப்பு வாதம்.

“பா.ஜ.க. ஆட்சிக் காலத்தில் பொருளாதார நிர்வாகம் மிக மோசமாக இருந்திருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அறிமுகமானபோது (1992-97), பொருளாதார வளர்ச்சி ஏழு சதவிகிதத்தைத் தொட்டது. அதே வேகத்தில் சென்றிருந்தால், பன்னிரண்டு சதவிகித வளர்ச்சியை இன்று நாம் எட்டியிருக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க. இதைச் சாதிக்கத் தவறி விட்டது. இன்றைய வளர்ச்சி விகிதம் ஐந்து சதவிகிதம்தான்!” என்கிறார் அர்ஜுன் சென்குப்தா. இவர் அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொருளாதாரப் பிரிவுத் தலைவர்.

குறிப்பாக, விவசாயத் துறையில் வளர்ச்சி விகிதம் வீழ்ச்சியுற்றிருப்பதையும் சுட்டிக்காட்டுகிறார் சென்குப்தா. ‘90களின் ஆரம்பத்தில் 3-4 சதவிகிதமாக இருந்த விவசாயத் துறை வளர்ச்சி, இரண்டு சதவிகிதத்துக்கும் கீழே சரிந்து விட்டது. இத் துறையில் வேலை வாய்ப்புப் பெருக்கமோ, மூன்று சதவிகிதத்திலிருந்து குறைந்து, தற்போது பூஜ்யம் சதவிகிதமாகியிருக்கிறது! நாட்டின் ஒட்டுமொத்தமான வேலை வாய்ப்புப் பெருக்கமும் இதே சரிவைத்தான் சந்தித்துள்ளது. - இதையெல்லாம் எடுத்துச் சொல்லி, நிலைமையைச் சீராக்க, காங்கிரஸ் கட்சியின் எதிர்




கல்கி

2004 மார்ச் 28
சுபானு பங்குனி 15
மலர் : 62
இதழ் : 35



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



காலத் திட்டம் ஒன்று பதிப்பிக்கப்படும் என்றும் சென்குப்தா சொல்லியிருக்கிறார்.

'சென்குப்தா காங்கிரஸ் கட்சிக்காரர். அவர் பா.ஜ.க.வின் வெற்றிகளை நிராகரிக்காமல் என்ன செய்வார்?' என்று கேட்கலாம். ஆனால், சென்குப்தாவின் அறிக்கைக்கு முன்னதாகவே, கட்சி சார்பே அற்ற மாணவர்கள் விவாதங்கள் நடத்தி, தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அவை சென்குப்தாவின் கருத்துகளையொட்டியே அமைந்துள்ளன! இம் மாணவர்கள் தங்கள் கவலைகளை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்துள்ளார்கள்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில், டாக்டர் ஜாகிர் ஹுசைன் ஆய்வு மையத்தில், 'இந்தியா ஒளிர்கிறதா?' என்ற விவாதம் நடைபெற்றிருக்கிறது.

- 2002-03 இல் மிக அதிகமாகப் பொருளாதார வளர்ச்சி கண்டிருக்கிறோம்.
- 23 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் அன்னியச் செலாவணி கையிருப்பு சிறந்த நிலையில் உள்ளது.
- ஏற்றுமதி வளர்ச்சி இருபது சதவிகிதத்தைத் தாண்டியிருக்கிறது.
- அயல்நாடுகளில் இந்தியப் பொருள்களுக்கு வரவேற்பும் மதிப்பும் இருக்கின்றன.


- இவ்வாறு பேராசிரியர்கள் நமது நாட்டின் முன்னேற்றத்தைப் பட்டியலிட, மாணவர்கள் நெற்றியடியாகப் பதில் பட்டியலிட்டிருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள், ஏழைகளின் வாழ்வில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தும்?

விவசாயத் துறை ஆண்டாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவது பற்றி யாராவது கவலைப்படுகிறார்களா...?

உணவு, உடை, இருக்க வீடு, கல்வி, குடிநீர், மருத்துவம், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் பெறாமல் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள்!

இவ்வாறு ஏழ்மையில் உழலும் பெரும்பான்மையினரின் துயர் தீராத வரையில், இந்தியா ஒளிர்கிறது என்று நாம் பெருமையடித்துக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது!



• இவ்வாறு ஆசிரியர்களையே எதிர்த்து வாதிட்ட மாணவர்கள், வரவிருக்கும் தேர்தலில் முதல் முறையாக வாக்களிக்கவிருக்கிறார்கள். பெரும்பாலும் கிராமப் பகுதிகளிலிருந்து மதுரை நகருக்குக் கல்வி பயில வந்தவர்கள் இவர்கள்.

எந்த கட்சியின் அரசாங்கமானாலும் ஓரளவு வளர்ச்சி இராமல் போகாது. ஆட்சி அமைவதே அதற்காகத்தான். பா.ஜ.க. ஆட்சியிலும் வளர்ச்சி அடைந்திருக்கிறோம். ஆனால், வளர்ச்சி எந்தத் திக்கில், அதனால் யார் பயனடைந்திருக்கிறார்கள் என்பது முக்கியம்.

ஏற்றுமதியிலும் அன்னியச் செலாவணி கையிருப்பிலும் நாம் கண்டுள்ள முன்னேற்றம், தகவல் தொழில்நுட்பத் துறையின் திடீர் வளர்ச்சி காரணமாக விளைந்தது. மத்தியதர, உயர் மத்தியதர மக்களுக்கு, இதன் மூலமாக வாழ்க்கைத் தரம் ஓரளவு மேம்பட்டிருக் கிறது; வரிச் சுமைகள், தொழில் வர்த்தகக் கட்டுப்பாடுகள் குறைந்துள்ளன. ஆனால், ஏழை இந்தியாவும் கிராமங்களும் இந்த முன்னேற்றங்கள் காரணமாகப் பயனடைந்து விடவில்லை. இந்த உண்மையைச் சுட்டிக்காட்டி, புள்ளிவிவரங்களை வெளியிட்டிருக்கிறது, அமெரிக்கப் பத்திரிகையான 'நியூஸ்வீக்'. இன்னொரு மிகப் பெரிய அச்சுறுத்தலையும் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கிறது நியூஸ்வீக்.

தொழில்நுட்பப் பெருக்கம், கம்ப்யூட்டர் மயமாதல் காரணமாக, எதிர்காலத்தில் வேலை வாய்ப்புகள் பெருகுவதற்குப் பதிலாகக் குறையப் போகின்றன. குறிப்பாக, விவசாயத் துறையின் புறக்கணிப்பு காரணமாக, அத்துறையை நம்பி பிழைப்பு நடத்தும் விவசாயிகளும், விவசாயக் கூலிகளும் வேலையின்றி அவதியுறுவார்கள். அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும். உடனடி யாகக் கவனித்து ஆவன செய்யப்படாவிட்டால், புரட்சியே வெடிக்கும்' என்பது அப்பத்திரிகையின் கணிப்பு!

இந்த யதார்த்தத்தை மறைத்து விட்டு, மறந்து விட்டு, 'இந்தியா ஒளிர்கிறது' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கும் பா.ஜ.க., வாக்காளர்களை மட்டும் அல்ல, தன்னைத்தானேயும் ஏமாற்றிக் கொள்கிறது. ○



திருவல்லிக்கேணி மனோகரன்!

தொழில் : சலவைக்கூடம்.

குடும்பம் : மனைவி, ஒரு மகள்.

கட்சிப்பணி : 1983ல் இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான கூட்டம் நடத்த மனைவி தூங்கும்போது அவரது செயினை வெட்டி எடுத்து அடமானம் வைத்து மீட்டிங் போட்டது.

சொத்து: வட்ட, பகுதி கழக மினிட் புத்தகங்கள். அதில் உள்ள எம்.ஜி.ஆர், ஜெ. கையெழுத்து பொக்கிஷங்கள்.

இழந்தது : கட்சிப் பணிக்காக செலவு செய்ததில் இருசய்ய கிராமணி தெரு சொந்த வீடு. இப்போது ராயப்பேட்டை மாவடி விநாயகர் கோயில் தெருவில், சந்தில், மாட்டுக் கொட்டகை போன்ற குடிசையில் வாசம்.

நினைத்தாலே இனிப்பது : 1986ம் ஆண்டு அம்மாவைச் சந்தித்துப் பேசியது. (அதற்கப்புறம் பார்க்க முடிந்ததே தவிர, பேச முடியவில்லை).

மறக்க முடியாதது : 1. 1980ல் ஆட்சி கலைக்கப்பட்டபோது "வாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் உங்களோடுதான்" என்று 300 பேரிடம் ரத்தத்தில் கையெழுத்து வாங்கி புரட்சித் தலைவரிடத்தில் கொடுத்தது.

2. சட்டப் பேரவையில் புரட்சித்தலைவி தாக்கப்பட்டபோது, போயஸ் தோட்டத்தில் மூன்று நாட்கள் செக்யூரிட்டி வேலை பார்த்தது.

சமீபத்திய சந்தோஷம் : கொளப்பாக்கம், நேர்காணலின்போது அம்மாவால் அடையாளம் காணப்பட்டு இப்போது பகுதி அவைத்தலைவர்.

சந்திப்பு: கௌசி
படங்கள்: ராஜன்





நாகேஷ்

சிவாஜியை சமாளிப்பது எப்படி?

சினிமாவில் பிஸியான பின்னர், ஒருநாள் வித்தியாசமான ஆசை ஒன்று ஏற்பட்டது. நான் கஷ்டப்பட்ட காலகட்டத்தில், எனக்குச் சோறு போட்ட அகில இந்திய வானொலி நிலையத்துக்குப் போக வேண்டும் போல இருந்தது. ஷூட்டிங்கிலிருந்து புறப்பட்டு, நேரே ரேடியோ ஸ்டேஷனுக்குப் போனேன். வரவேற்புப் பகுதியில் இருந்தவர்களுக்குத் தங்கள் கண்களை நம்ப முடியவில்லை. நேரே டியூட்டி ஆபீசரின் அறைக்குப் போய், "கூத்தபிரான் இருக்கிறாரா?" என்றேன். "கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க" என்று சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் கூத்தபிரான் வந்தார். "என்ன நாகேஷ்! ஏதாவது புரோகிராம் ரெக்கார்டிங்கா?" என்று கேட்டார்.

"திடீர்னு, வரணும்னு தோணுச்சு! ஷூட்டிங்கிலேயிருந்து நேரே வந்திட்டேன்."

"சொல்லுங்க! நான் என்ன பண்ணணும்?"

"நான் முதன் முதல்ல ரேடியோ நாடகத்துல நடிச்சப்போ, உங்க ரெக்கார்டிங் ஸ்டுடியோ ஒன்னுல ரெக்கார்டிங் நடந்துச்சு! அந்த ரெக்கார்டிங் ஸ்டுடியோவைப் பார்க்கணும்."

"ஓ! தாராளமா! வாங்க போகலாம்!"

என்னை அழைத்துக் கொண்டு போனார். ஒரு ரெக்கார்டிங் தியேட்டருக்குள் போனதும், "இதுதான் அந்த ஸ்டுடியோ!" என்றார். நான் சில நிமிடங்கள், அமைதியாக அங்கே நின்று கொண்டிருந்தேன்.

"அப்போ நான் பேசினேனே, அதே மைக்தானா இது?" அந்த ஸ்டுடியோவில் இருந்த



மைக்கை சுட்டிக் காட்டிக் கேட்டேன்.

"ஆமாம்!" என்றார் கூத்தபிரான்.

அந்த மைக்கைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். அடுத்த விநாடி அந்த மைக் முன்பு நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினேன். கூத்தபிரானுக்கு ஒன்றும் புரியவில்லை.

என்னைப் பிடித்து எழுப்பினார். கண்கள் கலங்கி இருந்தன. "என்னமோ தெரியலை! திடீர்னு, நான் முதன் முதலா பேசின மைக்கைப் பார்க்கணும்னு தோணிச்சு!" என்றேன். அதன்பின் கூத்தபிரானிடம் கொஞ்ச நேரம் பேசி விட்டுப் புறப்பட்டேன்.

இன்றைக்குக் கூட ஏதாவது நிகழ்ச்சியின் போது கூத்தபிரானைப் பார்த்தால், நான் மைக்கை வணங்கின சம்பவத்தை நினைவுகூர்வார்.

அறுபத்து மூன்று, அறுபத்து நான்காம் வருஷங்களிலிருந்து சினிமாவைப் பொறுத்தவரை, அதிர்ஷ்டக்காற்று என் பக்கம் பலமாக வீசத் தொடங்கியது என்று சொல்ல வேண்டும். அப்போது தான், பல திரைப்படக் கம்பெனிகளும் தங்கள் படங்களில் நாகேஷுக்கும் ஒரு ரோல் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்கள். வாய்ப்புகள் நிறைய வர ஆரம்பித்தன.

சினிமா உலகில், ஹீரோவாக நடிப்பது என்பது தனி. படத்திற்கு அவர்கள் தான் முக்கியம் என்பதால், அவர்களிடம் கால்ஷீட் வாங்கி வைத்துக் கொண்டு விடுவார்கள். மற்ற கேரக்டர்களில் நடிப்பவர்களின் கால்ஷீட்களை, ஹீரோ கால்ஷீட்டுகளுக்கு ஏற்ப அட்ஜஸ்ட் செய்து தரும்படிக் கேட்பார்கள்.

நான் பிஸியான காலகட்டத்தில், அப்போதைய திரையுலக ஜாம்பவான்களான எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவரது படங்களிலும் வாய்ப்புகள் வந்தன. இரண்டு பேரது படங்களின் படப்பிடிப்பும், ஒரே நேரத்தில் வெவ்வேறு இடங்களில் நடக்கும்.

பொதுவாக ஒன்றுக்கொன்று சிக்கல் ஏதும் வராதபடிதான் கால்ஷீட் அட்ஜஸ்ட் செய்து கொடுப்பேன். என்றாலும் கூட, சில சமயங்களில் ஒரே நாளில் இரண்டு பேரது ஷூட்டிங்கிற்கும் போக வேண்டியதாகி விடும். அப்போது என் பாடு திண்டாட்டம்தான்.

காலை ஏழு மணிக்கு ஷூட்டிங் என்றால், ஆறே முக்கால் மணிக்கே மேக்-அப் போட்டுக் கொண்டு தயாராக ஸ்டுடியோவுக்கு வந்து விடுகிற சிவாஜியின் நேரம் தவறாமை பற்றி உலகமே அறியும். அதே போலத்தான், எம்.ஜி.ஆருக்கும் தாமதம் என்பது பிடிக்காத விஷயம்.

ஒருநாள் சிவாஜி பட ஷூட்டிங். அவர் சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுத்து முடிக்கப்பட்டு விட்டன. அவரோடு நான் சேர்ந்து நடிக்க வேண்டிய காட்சிகளை எடுப்பதற்காக, செட்டில் எல்லோரும் காத்துக் கொண்டிருந்தார்கள். எனக்கோ முந்தைய ஷூட்டிங்கில் காலதாமதமாகிக் கொண்டே இருந்தது.

அங்கே, கால் மணி நேரமாச்சு; அரைமணி நேரமாச்சு. 'இதோ நாகேஷ் வந்திடுவார்! வந்தவுடன் ஷாட் எடுத்திடலாம். எல்லாம் ரெடி!'

"கஜானா காலின்னு தெரிந்தும் மன்னர் தெம்பாக நடமாடுகிறாரே... எப்படி?"

"பத்து கிரெடிட்கார்டு வைத்திருக்கிறாரே... போதாதா?"

- ராஜிராதா





''வெளிநாட்டுப் பயணிகள் விமானத்திலிருந்து இறங்கும் போதே கூலிங் கிளாஸ் போட்டிருக்காங்களே...''
''இந்தியா ரொம்ப ஒளிர்கிறதாம்!''
- எஸ். மோகன்

என்று சொல்லி சிவாஜியை சமாதானப் படுத்திக் கொண்டு இருந்தார்கள். ஒருவழியாக நான், சிவாஜி செட்டுக்குள் நுழைந்தபோது, ஏறத்தாழ ஒரு மணி நேரம் போல அவர் காத்துக் கொண்டிருக்கும்படி ஆகிவிட்டது. எனக்கோ குற்ற உணர்வு. தவிர, உள்ளூர இலேசான பயம் ஏற்பட்டு விட்டது.

'எப்படி சிவாஜியை சமாளிப்பது?' என்ற ஆழ்ந்த யோசனையுடன் சிவாஜி உட்கார்ந்து கொண்டிருந்த இடத்தை நெருங்கினேன். யாரும் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

சிவாஜியின் முன்னால் போய் நின்றேன். முகத்தில் அப்பாவிக் களை சொட்ட, "ஸாரி சார்! லேட்டாயிடுச்சு! அங்கே என்ன ஆச்சுன்னா..." நான் முடிப்பதற்குள்ளே, "என்ன ஸார்! உன் விளக்கம் எதுவும் எனக்குத் தேவையில்லை" என்று தன் கண்களை உருட்டி என்னை நேரடியாக ஒரு பார்வை பார்த்தார்.

நானும் அவரது முகத்தை நேருக்கு நேர் பார்த்தேன். சட்டென்று, அப்போது தான் எதையோ கவனித்தது போன்ற ஒரு முகபாவனையைக் காட்டியபடி, "சார்!" என்றவன், சட்டென்று எனக்குள்ளாகவே... "ஊகூம்... வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டேன். இலேசாகக் குழப்பம் ஏற்பட்டு விட்டது அவருக்கு.

"என்ன வேண்டாம்?" என்றார் அவர்.

"இல்லை... உங்க முகத்துல கம்பீரமா மீசை ஒட்டியிருக்கீங்க. நல்லாத்தான் இருக்கு. ஆனா, என் வேண்டாத வேளை... அதைக் கிட்டத்தில் பார்த்து விட்டேன். ஒரு பக்க மீசை, இன்னொரு பக்க மீசையை விடக் கொஞ்சம் கீழே இறங்கி இருப்பது போலத் தெரிஞ்சுது. அதான்..."

நான் பேசியதைக் கேட்டவர், டச் அப் செய்பவரை நோக்கித் தனது பார்வையைத் திருப்பினார். அவர் கண்ணாடியை எடுத்து வந்து, சிவாஜியின் முகத்துக்கு முன்னால் காட்ட, இப்படியும், அப்படியுமாக முகத்தைத் திருப்பித் திருப்பி மீசையை அந்தக் கண்ணாடியில் உற்றுப் பார்த்தார் சிவாஜி.

அடுத்து மேக்-அப்மேனைக் கூப்பிட்டார். "இவன் சொல்றது சரிதான்!" தன் மீசையின் ஒரு பக்கத்தின் மீது விரலை வைத்து, "இந்தப் பக்கம் இலேசாகக் கீழே இறங்கி இருக்குத் தெரியுதா?" என்றார்.

''ஆமாண்ணே! இதோ நான் சரி பண்ணிடறேன்'' என்றார் மேக்-அப்மேன்.

மீசை சரிசெய்யப்பட்டு, மேக்-அப் அறையிலிருந்து வந்த சிவாஜி, "என்ன நாகேஷ்! இப்போ சரியா இருக்குல்ல?" என்று கேட்க, நான் "ஓ! இப்பத்தான் நீங்க, உங்க மீசையில பர்ஃபெக்ட்டா இருக்கீங்க" என்றேன்.

"அண்ணே! ஒரு ரிகர்சல் பார்த்திட்டு, ஷாட்டுக்குப் போகலாமா?'' என்று டைரக்டர் கேட்க, செட்டில் மறுபடி பரபரப்பு தொற்றிக் கொண்டது.

என் தாமத வருகை காரணமாக கடும் கோபத்தில் இருந்த சிவாஜியின் கவனத்தைத் திசைதிருப்ப, சரியாக இருந்த அவரது மீசையைக் கொஞ்சம் இறங்கி இருப்பதாக நான் சொன்னேன் என்று சிவாஜிக்குத் தெரியாது! காரணம், அவருக்கு நடிப்பில் அத்தனை ஈடுபாடு!

சிவாஜியின் ஷூட்டிங்கில் இப்படி என்றால், எம்.ஜி.ஆர். பட ஷூட்டிங்கில் ஏற்பட்ட அனுபவங்கள், இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை!

(சிரிப்பு தொடரும்)

"நட்சத்திரப் பிரகாரம்"

"டேய் சின்னா!" என்று இயக்குனர் குரல் கொடுக்கிறார். எஸ்.டி.டி. பூத் நடத்தும் சூர்யா வெளியே எட்டிப் பார்த்து, நீண்ட தெத்துப்பல் தெரிய "என்னா?" என்று கேட்கிறார். மொத்த யூனிட்டும் கொல்லென்று சிரிக்கிறது. தொடர்ந்து பூத்தை விட்டு, கூன் விழுந்த முதுகோடு வெளியே வந்து, தேய்ந்து, ஒருபக்கமாய் சாய்ந்துபோன செருப்பைப் போட்டுக் கொண்டு, காலை அகட்டி வைத்து விந்தி விந்தி நடந்து வர, மீண்டும் சிரிப்பலை. இயக்குனர் 'கட்' சொன்னதும், மொத்த யூனிட்டும் ஓடிப் போய் சூர்யாவுடன் கை குலுக்குகிறது. சூர்யாவை நெருங்கி, 'சின்னா'வைப் பேட்டியெடுக்க வந்தோம் என்றதும் பேச ஆரம்பித்தார்.

'காக்க காக்க', 'பிதாமகன்' என்று அடுத்தடுத்து மெகா வெற்றிகள் கிடைத்திருப்பதில், சூர்யாவின் லைஃப் ஸ்டைல் மாறி இருக்கிறதில்லையா?

லைஃப் ஸ்டைல் என்று சொல்ல முடியாது. ஆனால் குடும்பத்தையும், நண்பர்களையும் ரொம்பவே 'மிஸ்' பண்ணுகிறேன். ஏவி.எம்., மணிரத்னம், மீண்டும் கௌதம் இயக்கம் என்று, சாதனை மனிதர்களோடு அவர்களது வேகத்திற்கு ஓடிக் கொண்டிருக்கிறேன். கொஞ்சமாக மூச்சு முட்டுகிறது என்றாலும், உறுதி செய்யப்பட்ட வெற்றிகள் என்பதால், கால்வலி தெரியவில்லை. ஆனால் அம்மா, அப்பா, அண்ணன், தங்கை என எல்லோருடனும் தொலைபேசி உரையாடல்தான். பிஸியாகாமல் இருந்த சமயங்களில், நண்பர்களோடு ரெஸ்டாரண்ட்களுக்குப் போய் பேசிக் கொண்டே சாப்பிடுவது ரொம்பப் பிடிக்கும். நண்பர்கள் எல்லோரும் பணியாற்றுகிறவர்கள் என்பதால், இப்போது அவர்களும் பிஸி. என்னை எல்லோரும் நம்பிக்கையோடு பார்க்கிறார்கள். எங்கே இருந்தாலும் தேடிக் கொண்டு வந்து விடுகிறார்கள். நிறையப் பேச வேண்டி இருக்கிறது. இரத்தினச் சுருக்கமாகப் பேசுவதுதான் பிடிக்கும். இப்போது அது முடியவில்லை. எந்த ஒரு முடிவென்றாலும், நீளமாய் விவாதித்த பிறகே மனம் தெளிவாகிறது. விளம்பர உலகம் வேறு வரவேற்பதில், நிறைய நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டிய கட்டாயம். சந்தோஷமான அவஸ்தைகள்!





சூர்யா எந்த வேஷம் கொடுத்தாலும் விளாசுவார் என்பது பிதாமகன் சக்திவேல் பாத்திரம் மூலம் நிரூபணம் ஆனது. இந்தப் பாத்திரத்தின் தொடர்ச்சியாகத்தானே பேரழகன் படத்தில் கூன் முதுகுக் கதாநாயகன்?



> இரவு இரண்டு மணிக்குச் சிறுமிகள் மண் சுமப்பதைப் பார்த்திருக்கிறேன். இவர்களுக்கு என்ன பணிப் பாதுகாப்பு இருக்கிறது? இவர்களைப் போல சமூகத்தில் எத்தனை பிரிவு மக்கள் வாழ்க்கையைப் போராட்டமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? இவர்களைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள முடியவில்லை என்றால்... அரசியல் எதற்கு? ஜனநாயகம் எதற்கு?

என்னைத் தலைகீழாகத் திருப்பிப் போட்ட படமென்றால் அது நந்தாதான். நந்தா போல ஒரு பாத்திரத்தை என்னால் பண்ண முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்ததே டைரக்டர் பாலாதான். ஆனால் சக்திவேல் பாத்திரம் என்னுடையது கிடையாது. நிஜத்தில் நந்தாவைப்போல அளந்து அளந்து பேசுபவன். அப்படிப்பட்டவனை சதா பேசிக் கொண்ட இருக்கிற சக்திவேலாக வடித்தார்.

நந்தாவைப் பார்த்துதான் 'காக்க காக்க' படத்திற்கு கௌதம் அழைத்தார். பிதாமகன் சக்திவேலைப் பார்த்துதான் பேரழகனாக, கூன் முதுகுக்காரனாகப் பண்ண முடியும் என்று கூப்பிட்டிருக்கிறார்கள். இந்த கூன் முதுகுக் கதாநாயகனைப் பார்த்துவிட்டு, 'நல்லா

ஆபத்தில் முடியும்!”

பண்ணியிருக்கே சூர்யா' என்று பாலா அண்ணன் சொன்னால், அதுதான் அவார்டு.

கூன் முதுகு நாயகனுக்குச் சிறப்புப்

பயிற்சி உண்டா?

பேரழகனின் மலையாளப் பதிப்பில் நடிகர் திலிப், கூன் இளைஞனாக அமர்க்களம் பண்ணியிருக்கிறார். இந்த கேரக்டருக்காக அவருக்கு தினசரி இரண்டு மணி நேரம் மசாஜ் செய்து விடுவார்களாம். நான் மசாஜ் எதுவும் செய்து கொள்ள இல்லை. ஆனால் ஸ்பெஷல் உடற்பயிற்சிகள் செய்கிறேன். முதுகெலும்பிற்கு வரும் வலியை விரட்ட, வானைப் பார்த்து முதுகுப் பக்கம் திரும்பித் தரையைத் தொடும் உடற்பயிற்சி செய்கிறேன். நடையும் மாறி விடுவதால், கால்களுக்கும் சிறப்புப் பயிற்சி உண்டு. திலிப் பண்ணியது ஒன்றுமில்லை என்று ரசிகர்கள் சொல்ல வேண்டும். மலையாளத்தைவிட பலமடங்கு தரத்தை எதிர்பார்க்கலாம்.

பாத்திரமாக மாறி உடலை வருத்திக் கொண்டு நடிக்க கமல், விக்ரம் போல ஒரு சிலர்தான் என்ற நிலை, இப்போது மாறி வருவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?

இப்போதுதான் நடிகர்கள் மத்தியில் இங்கே விழிப்புணர்வே வந்திருக்கிறது. ஒரு நடிகன் அல்லது நடிகையின் பாத்திரம், அவர்களது வாழ்க்கை முடிந்து போன பிறகும் பல நூறு வருடங்கள் உயிரோடு இருக்கப் போகிறது. இது எத்தனை பெரிய கொடுப்பினை! சினிமா என்பதே வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற விஷயம். இப்படி இருக்கும்போது, பாத்திரத்திற்காக உடலை வருத்திக் கொள்வதும், தோற்றத்தை மாற்றிக் கொள்வதும், நடிகர்களுடைய கடமை. இதற்குப் பாராட்டை எதிர்பார்க்கக் கூடாது.



இப்போது ஒப்பனை போட்டுக் கொள்வதே குறைந்து விட்டது. தோல் கறுப்பாக இருக்க வேண்டும் என்றால், மை பூசிக் கொண்ட காலம் போய், வெயிலில் நின்று உடலைக் கறுக்க வைப்பது இன்னும் யதார்த்தத்தைக் கொடுக்கிறது. உண்மையாக நடிப்பது போல் தான், உண்மையான தோற்றம் கொடுப்பதும். எனக்குத் தரப்படுகிற பாத்திரத்திற்கு எவ்வளவு உண்மையானவனாக இருக்க முடியுமோ, அவ்வளவு உண்மையானவனாக இருக்க விரும்புகிறேன்.

மணிரத்னம் படத்தில் நடித்துத் திரும்பியிருக்கிறீர்கள். அவரது படப்பிடிப்புச் சூழல் எப்படி இருந்தது?

ரொம்பவும் சிஸ்டமேடிக்கான சூழல் நிலவும். மணி சார் முதல், லைட்மேன் வரை, எல்லோரும் தெள்ளத் தெளிவாக இருப்பார்கள். எது ஒன்றையும் மறந்து விட்டு வந்து, படப்பிடிப்பில் தடுமாறிக் கொண்டிருக்க மாட்டார்கள். யாரும் தாமதமாகவும் வரமாட்டார்கள். மிகமிக ஆச்சர்யம்! செட்டில் யாரும் பேசவே மாட்டார்கள். சலசலப்பே இருக்காது. இந்த அபூர்வ அமைதி, நடிகர்களுக்கு ரொம்பப் பயன்படும். பாத்திரத்தின் மனநிலையை நான் முழுவதும் தக்க வைத்துக் கொள்ளப் பேருதவியாக இருக்கும். அவர் காட்சியை ஆரம்பிக்கிற விதமும் சரி, முடிப்பதும் சரி, ரொம்ப நீட்! என்னைச் சுதந்திரமாக நடிக்கச் சொல்வார். எதையும் திணிக்க மாட்டார். அளவு கொஞ்சம் அதிகரித்து விட்டால், "நானே நடிக்க மாட்டேன். என்னையே நடிக்க வைக்காதே'' என்பார். கனவு போலத்தான் இருக்கிறது. நான் நடித்து மணிரத்னம் ஓகே சொல்வது, சந்தோஷமாக இருக்கிறது.

சூப்பர் ஸ்டார் என்றால் ஒருவர் தான் இருக்க முடியும் என்ற கருத்து, இந்தக் கால கட்டத்துக்கு ஒத்து வருமா?

ஒரு சூப்பர் ஸ்டார் கான்செப்ட் இப்போது சாத்தியமில்லை. இதைத் தாண்டி எல்லோரும் சூப்பர் ஸ்டார் ஆனால் ரொம்ப சந்தோஷம் தான். எம்.ஜி.ஆரும், ரஜினி காந்தும் எல்லாப் படங்களிலும் பெயர் வாங்கி, எல்லோரையும் திருப்திப் படுத்தியவர்கள். இந்தக் காலத்தில் இது முடியாது. சிவாஜியும், கமலும் நடிப்பை நேசித்து, சினிமாக் கலையை வளர்த்தவர்கள். இவர்கள் செய்யாத பாத்திரமில்லை. இவர்கள்

போட்ட எலும்புத் துண்டுகளின் மிச்சம் தான், நாங்கள் இப்போது செய்வது. சூப்பர் ஸ்டார் என்ற மாயையில் மாட்டிக் கொள்ளாமல், தமிழ் சினிமாவை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஆட்டோ கிராஃப் போல, சமரசங்களைக் குறைத்துக் கொண்டு, வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சினிமாக்களை எடுக்க வேண்டும். மசாலா திணிப்புக்குச் சாவுமணி அடிக்க வேண்டும்.

தேர்தல் சமயத்தில் நடிகர்கள் அரசியல் கட்சிகளில் சேருவதைப் பற்றி உங்கள் வெளிப்படையான கருத்து?

நடிகர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கும், அபிமானமும் இருக்கிறது. இந்தப் புகழை பயன்படுத்திக் கொள்ள அரசியல் கட்சிகள் தயாராக இருக்கின்றன. எல்லா குடிமகன்களையும் போல, அரசியலில் இறங்கும் உரிமை நடிகர்களுக்கும் இருக்கிறது. இதை விமர்சிக்க முடியாது. இது அவரவர் தனிப்பட்ட விருப்பம். அதே நேரத்தில், தேர்தலின் போது படையெடுத்து கட்சிகளில் சேர்வது நமது நம்பகத் தன்மையை கேள்வி கேட்கத் தூண்டும். எதை எதிர்பார்த்து இவர் வந்திருக்கிறார் என்ற சந்தேகம் மக்களுக்கு வரும். நடிகர்கள் தான் என்றில்லை, அரசியலைத் தேர்ந்து கொள்கிற யாரும், இங்கே வந்த பிறகு, மக்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதைத்தான் பார்க்க வேண்டும். வறுமையை ஒழிக்க இதுவரை நாம் எதுவும் உருப்படியாகச் செய்யவில்லை. படப்பிடிப்பு முடிந்து, நடு இரவில் வீடு திரும்பும்போது, சாலைப் பணிகளில் வேலை செய்யும் தொழிலாளர்களைப் பார்க்கும்போது கண் கலங்குகிறது. இரவு இரண்டு மணிக்குச் சிறுமிகள் மண் சுமப்பதைப் பார்த்திருக்கிறேன். இவர்களுக்கு என்ன பணிப்பாதுகாப்பு இருக்கிறது? இவர்களைப் போல சமூகத்தில் எத்தனை பிரிவு மக்கள் வாழ்க்கையைப் போராட்டமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? இவர்களை சந்தோஷமாக வைத்து கொள்ள முடியவில்லை என்றால், அரசியல் எதற்கு? ஜனநாயகம் எதற்கு?

நட்சத்திரப் பிரசாரம் எடுபடும் என்று நினைக்கிறீர்களா?

நாம் சொன்னால் மக்கள் கேட்பார்கள் என்ற மமதையான எண்ணத்தோடு பிரசாரத்தில் இறங்குவது ஆரோக்கியமாக இருக்காது. எந்த அணிக்காக நாம் களத்தில் இறங்குகிறோம்; அவர்கள் மக்களுக்கு என்ன செய்வார்கள்; என்ன செய்திருக்கிறார்கள் என்று ஆராய்ந்து இறங்க வேண்டும். எந்த ஒரு கட்டத்திலும் மக்களுக்கு என்ன சேவை செய்ய முடியும் என்பதை யோசிக்காமல், எல்லோரும் போகிறார்கள், நாமும் போவோம் என்று போவது, ஏற்கெனவே இருக்கும் செல்வாக்கைச் சரித்துவிடும்.

படித்தவர்கள், பணக்காரர்கள் வாக்களிக்க வருவதில்லை என்ற கோபம் உண்டா?

மூர்க்கத்தனமாக வரும். குறைந்தது இளைஞர்களாவது மாறலாம் இல்லையா? படிப்பது, சினிமா பார்ப்பது, கிரிக்கெட் பார்ப்பது மட்டும் வாழ்க்கையில்லை. இளைஞர்கள் தினசரி செய்தித்தாள் படிக்க வேண்டும். எந்தக் கட்சிக்கு யார் தலைவர், எந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை உண்மையாக இருக்கிறது, என்ன வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். வாக்குகளைப் பதிவு செய்யாமல் விட்டு விட்டு, பிறகு ஒரு மாதம் கழித்து புதிய அரசாங்கத்தைத் திட்டுவது வீண்!

பேட்டி: **ஆர்.சி. ஜெயந்தன்**

படங்கள்: **'ஆய்த எழுத்து', 'பேரழகன்' படங்களிலிருந்து**

அட்டைப்படம் : **சங்கர் சத்தியமூர்த்தி**



''இந்த டாக்டர் டி.வி. சீரியலுக்கு ஃபைனான்ஸ் பண்ணியிருக்கார் போல...''

''எப்படிச் சொல்றே...?''

''மனம் விட்டு அழுதாலே பாதி வியாதிகள் பறந்து போயிடும்னு சொல்றாரே!''

- அம்பை தேவா

அருள்மிகு நெல்லையப்பரும், அன்னை காந்திமதியும் தமிழை அனுபவித்துக் கொண்டு வீற்றிருக்கும் திருநெல்வேலியில், வருகிற ஏப்ரல் மாதத்தில் குடமுழுக்கு நடைபெறவிருக்கிறது. வேணுவனம், சாலிநகர், தாருகாவனம், தென் காஞ்சி என்றெல்லாம் பெயர் கொண்ட இந்த நகரத்தில் நடுநாயகமாக, நெல்லையப்பர் கோவில் கம்பீரமாக நிற்கிறது. பார்வதிதேவி தவம் செய்து ஈசனை அடைந்த புண்ணிய பூமி.

நான்கு வேதங்களும் ஈசனிடம் வரம் பெற்று மூங்கிலாக வளர்ந்தோங்கி, சிவலிங்கத்துக்கு நிழல் தந்தனவாம். அதனால் வேணுவனநாதர் என்று பெயர் பெற்றார். ஒரு சமயம் ராமக்கோனார் என்பவர் வேணுவனம் வழியாகப் போகும் போதெல்லாம், அரசனுக்காக அவர் எடுத்துச் செல்லும் பால்குடம் சாய்ந்து பால் கொட்டிவிடும். அங்கிருந்த மூங்கில்தான் காலை இடறுகிறது என்று நினைத்த கோனார், தடுக்கிய அந்த முனையைக் கோடாலியால் வெட்ட, இராமபாண்டியனை, சிவபெருமான், "நீ முழுதுங் கண்ட ராமன்" என்று வாழ்த்தினாராம்.

மூங்கிலிலிருந்து முத்துப் போல் தோன்றியதால், வேய்முத்தர் என்று பெயர் பெற்றார் ஈசன்.

வேதசர்மா என்பவர் ஈசனுக்கு தினமும் சம்பா அரிசியைச் சமைத்து அன்னம் நிவேதித்து வந்தார். கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. ஈசனுக்குப் படைக்க நெல் கிடைப்பதே அரிதாயிற்று. மழை பொழிய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டே, கிடைத்த நெல்லை வெயிலில் உலர்த்தி விட்டு, ஸ்நானம் செய்ய ஆற்றுக்குப் போனார் வேத சர்மா. திடீரென்று மழை! "உலர்த்திய நெல் நனைந்திருக்குமே! ஈசனுக்கு இன்று எப்படி நைவேத்யம் செய்வது?" ஓடி வந்தார் வேத சர்மா. வந்தவர் திகைத்து நின்றார். சுற்றிலும் மழை பெய்கிறது. நெல் மட்டும் காய்கிறது. பெய்யும் மழை, வேலி போல நாலு

வேய்முத்தரும் வழவண்ணமயும்

திடீரென்று குருதி பெருகியது! பயந்து போன அவர் ஓடிப்போய் அரசனிடம் தெரிவிக்க, அரசர் உடனே வந்து பார்த்தபோது, சுயம்புவாய் சிவலிங்கம் இருப்பதைக் கண்டு கோவில் கட்ட ஏற்பாடு செய்தார். லிங்கத்துக்கு ஆவுடையார் செய்து சாத்தினால், லிங்கம் வளர்ந்தது! இன்னொன்று சாத்தியவுடன் இன்னும் வளர்ந்தது! இப்படி ஒரு ஆவுடையார் மீது ஒன்றாக இருபத்தொரு பீடங்கள் அமைத்த பிறகு, சிவபக்தனான அரசன் "வளர்ந்தது போதும்" என்று வணங்கி வேண்டிக் கொண்டாராம்! இப்படி ஈசனை சோதியாக வளரக்கண்ட பக்கமும் காணப்பட்டது. மழையே நெல்லுக்கு வேலியாக அமைந்ததால், திருநெல்வேலி என்று பெயர் பெற்றது. நெல்லை நனையாமல் காத்த ஈசன் நெல்லையப்பர் ஆனார்.

கோவிலின் அழகு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. குடமுழுக்கு நடப்பதற்காகக் கோவிலின் எல்லா இடங்களிலும் சுத்தம் செய்து வருவதால், ஒரே புழுதியும் தூசுமாக இருந்தாலும், ஆங்காங்கே பலகைகளும் கட்டைகளும் கிடந்தாலும், கயிறு கட்டித் தடுத்திருந்தாலும், கோவிலின் கம்பீரமான பொலிவு குன்ற



• காந்திமதியம்மை

வில்லை.

எவ்வளவு நீண்ட பிராகாரம்! நெல்லையப்பர் சந்நிதியில் அடியார் கூட்டம். முக மண்டபத்தில் சற்று நிற்கிறோம். "இவை இசைத் தூண்கள்" என்று சொல்கிறார் அங்கே இருந்த ஒருவர். நின்ற சீர் நெடுமாறன் என்று சிறப்பிக்கப்பட்ட பாண்டிய மன்னன் காலத்தில், இந்த மண்டபமும், நந்தியும், மதிலும் கட்டப் பெற்றனவாம். "மானின் நேர் விழி மாதராய்!" என்று ஞானசம்பந்தரால் புகழப் பட்ட மங்கையர்க்கரசியின் கணவர் இவர். சமணர்களின் சூழ்ச்சி வலையில் அகப்பட்டிருந்த நெடுமாறனை, சைவ சமயத்தை மேற்கொள்ளச் செய்த சிவ பக்தை மங்கையர்க்கரசி. அருள்மிகு நெல்லையப்பரைத் தரிசித்துக் கொண்டே, "நாட்டில் மழை பெய்து வரப்புயர, நீருயர, நெல்லுயரக் குடி உயர்க் கோன் உயர அருள் புரிய வேண்டும்" என்று வேண்டுகிறோம்.

பிராகாரத்தில் மூலநாதர் சந்நிதி இருக்கிறது. சற்றுத் தூரம் நடந்தால், அனவரதர் சந்நிதி இருக்கிறது. இதைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான கதை. அன்வருதீன் என்ற முஸ்லிம் பெரியார் இருந்தார். கடுமையான நோயால் கஷ்டப்பட்டார். நெல்லையப்பரின் கருணையால் வியாதி குணமாயிற்று. தன் சொத்துக்களை நெல்லையப்பருக்கே கொடுத்து விட்டார். இவருடைய நினைவாக இன்றும், நெல்லையப்பருக்கு ரொட்டியும், வெண்ணெயும் நிவேதனம் செய்யப்படுகிறது. அன்வருதீன் அதிஷ்டானமே, அனவரதர் சந்நிதியாகி விட்டது. இப்படி எம்மதமும் சம்மதமாக இருந்த நாடு, இன்று எப்படி ஆகிவிட்டது?

நடராஜப் பெருமான் தாண்டவமாடும் தாமிரசபையைக் கண்டு மகிழ்கிறோம். இங்கே சந்தன சபாபதியைத் தரிசிக்கலாம்.

"கௌரீ கல்யாண வைபோகமே" என்று பாடிக் கொண்டே வடிவம்மை என்றும், காந்திமதி அம்மை என்றும் பெயர் கொண்ட தேவியின் சந்நிதியை அடைந்தால், அங்கே வட நாட்டுப் பெண்கள் கூட்டம். அவர்கள் அரற்றுவதும், மெய்மறந்து சாய்ந்து சாய்ந்து ஆடுவதும், கண்களில் நீர் வழிய விம்முவதும், பக்திப் பெருக்கினால், 'மாதாஜி', 'மாதாஜி' என்று குழறுவதும் மனமுருகச் செய்கின்றன. அன்னைக்கு அணிவித்த புஷ்பத்தை என்னிடம் தந்தார் அர்ச்சகர். முன்னாலிருந்தவர் பூ கேட்டதை அவர் கவனிக்கவில்லை. என் கையிலிருந்த மாலையைக் கொடுத்தேன்.

பெற்றுக் கொண்ட அந்தப் பெண்மணி புளகாங்கிதம் அடைந்து, "ஜெய் பவானி! ஜெய் பவானி!" என்று குரல் கொடுக்க, "பவானி மாதாக்கி ஜே!" என்று இன்னொரு பக்கம் இருந்த பெண்மணிகள் உரத்த குரலில் தேவியை வாழ்த்த, அதே சமயம் மணி அடித்தது. உண்மையாகவே அந்த உணர்ச்சி நமக்கும் தொற்றிக் கொள்கிறது. அந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியே வரவே மனமில்லாமல், அன்னையின் திருமுக மண்டலத்தைப் பார்த்துக் கொண்டே நிற்கிறோம். செண்டு தாங்கிய கரமும், வடிவேல் விழிகளும், மதிவாள் நுதலும், மணியால் இழைத்த பணிகளும், பட்டுச்சேலையும், செய்ய கனிவாயில் புன்னகையுமாக பூத்த புது மலர் போல காட்சி தருகிறாள் வடிவம்மை.



"வீடு கோவில் மாதிரி இருக்குன்னு தலைவர்கிட்ட சொன்னது தப்பாப் போச்சு!"
"ஏன்... என்னாச்சு?"
"வாசல்ல உண்டியல் வெச்சுட்டாரு!"
- இரா. புதுப்பட்டி ஜி.ஆர். விஜய்

"ஸ்ரீகாந்தி மதீம் சங்கரயுவதீம்
ஸ்ரீ குருகுஹ ஜனனீம் வந்தே"

என்று ஹேமவதி ராகத்தில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய அழகிய பாடலை மனத்தில் பாடிக் கொண்டே நிற்கும் போது, வடிவம்மையின் அழகில் மனம் விகசிக்கிறது.

ரசிகமணி டி.கே.சியின் நினைவு வராமலிருக்க முடியுமா? அவர் ரசித்து ரசித்துப் பாடிய அழகிய சொக்கநாதப் புலவர் இயற்றிய காந்திமதியம்மை பிள்ளைத் தமிழும், நெல்லையப்பப் பிள்ளை என்ற சிவபக்தர் எழுதிய தல புராணமும் உண்டு. வடமொழி நூலும் இருக்கிறது. இலக்கியச் சிறப்பு வாய்ந்த கோவில். மதுரைக் கோவிலைவிடப் பெரிய கோவிலாம் இது.

சொக்கநாதப் புலவர் வடிவம்மையைத் தம் மகவாகப் பார்த்தவர். உரிமையும் வாஞ்சையுமாக அன்னையை ஆராதித்தவர். விவாகமான புது மணப் பெண்ணை பரிகாசம் செய்வது போல, காந்திமதியைப் பார்த்துப் பேசுகிறார். தென்பாண்டி நாடு நல்முத்துக்குப் பெயர் பெற்ற நாடு. திரும்பத்திரும்ப முத்து என்று சொல்லை புலவர் கையாண்டிருக்கும் விதம், உவகையூட்டுகிறது. "பேசினா வாய்முத்து உதிர்ந்துவிடுமோ?" என்று கேலி செய்கிறோமே, அது போல அம்பிகையையே கேட்கிறார் புலவர்,

ஆய் முத்துப் பந்தரின் மெல்லணை
மீது உன் அருகிருந்து
நீ முத்தம் தா என்று அவர் கொஞ்சும்
வேளையில் நித்த நித்தம்
வேய் முத்தரோடு என் குறைகள்
எல்லாம் மெல்ல மெல்லச்
சொன்னால்
வாய் முத்தம் சிந்தி விடுமோ
நெல்வேலி வடிவம்மையே!

நமது தெய்வங்கள் எல்லாம் தூரத்திலிருந்து பயந்து கொண்டு அணுகும் தெய்வங்கள் அல்ல. நம்மோடு மனம் கலந்து உறவாடும் அன்புத் தெய்வங்கள். நம்முடைய சுகதுக்கங்களில் பங்கேற்கும் தெய்வங்கள். நம் குறைகளைக் காது கொடுத்துக் கேட்டு, மனம் அமைதி பெறச் செய்யும் தெய்வங்கள்.

"வாய் முத்தம் சிந்தி விடுமோ நெல்வேலி வடிவம்மையே!" என்று கவிதை வரியைச் சொல்லும் போதே, காந்திமதி அம்மையை, புது மணப் பெண்ணாகவும், காதலியாகவும், நம் வீட்டுக் குழந்தையாகவே பாவிக்கும்போது, பாசம் நம் நெஞ்சில் பெருகுகிறது.

(தொடரும்)

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் "ஆன்மீகம்" தெய்வீக மாதஇதழும்

ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களும் இணைந்து நடத்தும்,

அன்பர்கள் இஷ்டப்படும் ஹோம பூஜையில், நேரிலேயே கலந்து கொள்ளும் வாய்ப்பு !

பேரன்புடையீர், வணக்கம் ! எடுத்த முயற்சிகள் வெற்றியடையவும், சங்கடங்களின்றி சந்தோஷமாக வாழவும், செய்தொழிலில் லாபம் பெறவும், மகப்பேறு பெற்று மகிழவும், திருமணத்தடைகள் நீங்கி, குதூகலம் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், பிள்ளைகள் கல்வியில் முதல் நிலை பெறவும், தீராத நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், நவகிரஹ தோஷங்களிலிருந்து விலகி நலம் பெறவும், பிரிந்த குடும்பத்தினரும், தம்பதியினரும் ஒன்று சேரவும், உத்தியோகம் மற்றும் அயல்நாடு செல்லவும் நினைக்கும் ஒவ்வொருவருக்காகவும், **மாதா மாதம் பௌர்ணமி அன்று திருவல்லிக்கேணியில் சகல நன்மைகளும் கிடைக்கவேண்டி, காலை 06.00 முதல் 10.00 வரை "ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ்** சார்பாக கீழ் கண்ட விவரப்படி சிறப்பான ஹோமங்களை நடத்தவிருக்கிறோம்.

05.04.04. திங்கள் - வழக்கு வியாஜயங்களில் வெற்றிகிட்ட - ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்

ஸ்ரீ ஸூக்தம் என்பது திருமகளாகிய லக்ஷ்மி தேவியின் பெருமைகளை [illegible] ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமத்தின் [illegible] லக்ஷ்மி தேவியை [illegible] **ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்** [illegible] **வழக்குகள், வியாஜயங்கள்** [illegible] வழக்குகள், வியாஜயங்களிலிருந்து விடுபட [illegible] **ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமத்தில்** கலந்து கொள்ள [illegible] அழைக்கிறோம்.

பங்குனி	05.04.04	திங்கள்	வழக்கு வியாஜயங்களில் வெற்றிகிட்ட	ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்
சித்திரை	04.05.04	செவ்வாய்	செய்வினை விலக	ஸ்ரீ ஸுதர்ஸன ஹோமம்
வைகாசி	02.06.04	புதன்	கல்வி செல்வம் உண்டாக	ஸ்ரீ நீல சரஸ்வதி ஹோமம்
ஆனி	02.07.04	வெள்ளி	தடைகள் அனைத்தும் விலக	ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்
ஆடி	31.07.04	சனி	நினைத்தகாரியங்கள் சித்தியாக	ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமம்
ஆவணி	29.08.04	ஞாயிறு	தீராத வியாதிகள் விலக	ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்
புரட்டாசி	28.09.04	செவ்வாய்	சத்ரு பயம் விலக	ஸ்ரீ நரஸிம்ம ஸுதர்சன ஹோமம்
ஐப்பசி	27.10.04	புதன்	செல்வம் பெருக	ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம்
கார்த்திகை	26.11.04	வெள்ளி	நவகிரஹ ப்ரீதி உண்டாக	ஸ்ரீ நவகிரஹ ஜெயாதி ஹோமம்
மார்கழி	26.12.04	ஞாயிறு	சகல காரியம் ஜெயப்ரதம் உண்டாக	ஸ்ரீ மஹாபிம்ப பூஜையும், வாயு ஸூக்த ஹோமமும்
தை	24.01.05	திங்கள்	திருமண பாக்கியம் கை கூடி வர	ஸ்ரீ ஸ்வயம்வரகலா பார்வதி ஹோமம்
மாசி	23.02.05	புதன்	வீடு அலுவலகம் வாஸ்து தோஷங்கள் விலக	ஸ்ரீ வாஸ்து ஹோமம்


ஜோதிட சாஸ்த்திரசிம்மம், வாஸ்து சாஸ்த்திர விற்பன்னர், யோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி பூஜ்யஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களின் தலைமையில், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்ற வித்வான்களைக்கொண்டு, ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் சக்தி பீடம், 177 / 84, வெங்கட்ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5ல் சிறப்பு ஹோமங்கள் மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெற இருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மாதங்களில் நடைபெறும் ஒரு ஹோமத்தில் பங்குபெற கட்டணம் ரூ. 500/- எல்லா ஹோமங்களிலும் பங்கு பெறவும், முன்பதிவு செய்யவும் கட்டணம் ரூ. 4500, செலுத்தி, நேரில் கலந்து கொள்ளலாம். நேரில் கலந்து கொள்ள இயலாதவர்கள் பெயர், நட்சத்திரம், ராசி, கோத்ரம் முதலியவைகளைக் குறிப்பிட்டு, என்ன காரியத்திற்காக ஹோமம் செய்ய வேண்டும் என்பதையும், தங்களது விலாசத்தையும் எழுதி அனுப்பவும். பிரசாதங்கள் தபால்மூலம் அனுப்பப்படும்.

வைகானச தர்ம சாஸ்திரம், ஜோதிடம், வாஸ்து என ஒரு கோடியே 25 லட்சம் கிரந்தங்களை எழுதியவரும் ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரீசி ஆகிய மகரிஷிகளுக்கும் குருவானவருமான 'ஸ்ரீ விகநஸ மஹரிஷி' யின் அபூர்வ புகைப்படத்துடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம், ஹோம பஸ்மம், 3x3 கனத்த செம்புத் தகட்டினாலான யந்திரத்துடன் வெள்ளியால் செய்யப்பட்ட லக்ஷ்மி டாலரும் மஹாஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

ஸ்ரீ விகநஸ மஹரிஷியின் பூஜிக்கப்பட்ட படம், இருக்கும் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ எந்த விதமான தோஷங்களும் அண்டாது என்பது உறுதி.





எடுத்த முயற்சிகளில் வெற்றிகளை உண்டாக்கும் ஹோமத்திற்காக 'Homadharisanam' எனும் பெயரில் ரூ. 500/ அல்லது ரூ. 4500, - Cheque/D.D./M.O. மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

ஹோம தரிசனம்

68, நடுத்தெரு, (ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 4.
Tel : 2461 6466, 52067068. Fax : 044-5206 6525. E-mail:siva siva @ vsnl.net

ஹோமத்தின் மூலம் தெய்வத்தை ப்ரீதி செய்து வேண்டியதை நிறைவேற்றிக் கொள்வதும் ஒரு சிறந்த வழி !



"ஏல தூங்கல? இன்னம் முழிச்சிருக்கவன்?"

"தூங்குவோம்..."

"என்னடா ஒரு வடியாப் பேசுற வன்?"

"கிழக்க ஒரு ஆள் போயி ருக்கு; திரும்பட்டுமுண்டு ஒக்காந்திருக்கேன்."

"கஞ்சித் தண்ணி ஆச்சாடா..."

"அவ, அவுக ஆத்தா வூட்டுக்குப் போயிட்டா..."

"சடவாடா?"

"என்னா சடவு! நாம இப்படி தெக்கவடக்கனு அலையுறது அவளுக்கு ஒத்துக்கல. கௌம்பிட்டா..."

"அம்புட்டுத்தேன்டா... நீக்குப் போக்காப் போயிக்கிடணும்..."

"என்னத்த கையிலெ காசு கீசு தெரளுமுன்னு தான ராப்பகலா அலைபடுதுக..."

"அதானம்டாப்பா! அவிங்க கெட்ட பயலுகடா; ஜோலி முடிஞ்சுட்டா அவிங்க பாட்டுக்கு ஓடிப் போயிடுவாங்க..."

"அது உள்ளதுதேன் சின்னயா! காலையிலெ புடுச்சு தெக்கவடக்கனு அலைய வெச்சாங்கே; கைச் செலவுக்குனு கைய நீட்டவும் கெழக்க விழுந்து ஓடுறாப்புலெ..."

"பின்னச் சொல்றவன்."

"கப கபண்டு பசி."

"வாடா, நம்ம வூட்டுக்கு. இருக்குறதத் திம்பே!"

"ந்தா வாறேனுட்டுப் போயிருக்காப்புல."

"இனிப் பொறவு வந்து..."

"ஒரு ஆளப் பாத்ததும் வாறேனுட்டுப் போனாப்புல; ரெண்டு பொராட்டாவ வாங்கித் திங்களாம்னுதான்..."

"யாரு சுப்பு பண்டாரம் மவனா?"

"இல்லெ! செவலெ."

"இந்த வாட்டி அவனாக்கும்!"

"போன தேர்தலுக்கும் அவரு தான காரியஸ்தரா இருந்தாரு..."

"அவே, இன்னைக்கு 'அவரா'யிட்டானாக்கும்? எல்லாம் காலக் கொடுமைடா! இத எங்கிட்டு போயிச் சொல்றது!"

"என்ன செய்யச் சொல்றீக! தேனியிலெ இருந்தும், கம்பத்துலெ இருந்தும் காருலெயும்... சீப்புலெயும் ஆளுக வந்த மணியமாவும், போன மணியமாவு முல்லெ இருக்கு..."

"கூத்துறா..."

"இன்னிக்கு அந்தாளு இருக்குற இருப்பு தெரியுமுல்ல..."

"அம்புட்டுத்தேன்டாப்பா உலகம்!"

"இப்படி பேசிட்டுத்தான் ஒக்காந்து கெடக்கோம்..."

"அப்புறம் ஒம்பாடுடாப்பா..."

"ஒங்கிட்டச் சொல்றதுக்கு என்ன சின்னயா! நமக்குக் கச்சி, கிச்சியெல்லாம் கெடையாது; என்னத்தையோ இந்த நேரத்துலெ ரெண்டு காசு பணத்தைக் கண்ணுலெ பாத்துப்பிடலாமுண்டு தேன்..."



"என்னவோடாப்பா..."

"இந்த வாட்டி எவனுக்குப் போடப் போறீக?"

"ஆமாடா! நாம போட லைண்டுதேன் அழுவுறானுங் களாக்கும்..."

பாரதிபாலன்

"போனவாட்டி ஒங்க 'சிட்ட' கொடுத்துத்தேன் ஓச்சாத்தேவரப் போடச் சொல்லுச்சு."

"இதெல்லாம் அக்குறும்புள்ளடா.."

"நீங்க வவுசி பண்ணுனீங்களா.."

"இந்த நாறப் பயலுகளுக்கு கால் கடுக்க நின்னு வோட்டுப் போடணுமாக்கும்.."

"இந்தா ஆரம்பிச்சுட்டீகளே!"

அவர் இருளை ஒரு கணம் பார்த்தார்.

"நம்ம சுடுகாட்டுப் பாதைய செம்ம பண்ணுங்கடானு எத்தனை வாட்டி சொல்றது! அப்புறம் பொம்பளை யாளுங்க கக்கூசு வேணு முண்டுச்சு.."

சுழலும் இருள்



"இதே பொம்பளை ஆளுகதேன் போயி குத்திட்டு வந்துடுதுக.."

"ஏல முத்துராக! நான் சொல்றதக் கேளுடா; எவனாவது நம்ம சொல்றதக் காது கொடுத்துக் கேக்குறானாடா? சுடுகாட்டுக்குப் பாதை வேணும்னு எத்தனை தடவைடா எழுதிக் கொடுத்திருப்போம்! எல்லாத்தையும் வாங்கிக் காலுக்கடியிலே போட்டுக் கிட்டான்! எவன் கேக்கு றான். இந்தா அவிங்க பின் னாடிதானே ஓடுறீக!"

"அந்தக் கச்சிக்காரங்க மட்டும்?"

"நான் ரெண்டு பயலு களையும்தேன் சொல்றேன்."

"போனவாட்டி சின்னம் மாவுக்கு ஒரு சேலை கொடுத்துச்சு; இந்த வாட்டி என்னமோ பெரிசா சொல் றானுவோ."

"பார்றா."

"போங்க சின்னயா, ஒங்க பாட்டுக்கு!"

"சுடுகாட்டுக்குப் பாதை வேணும்னு சொல்றேன்."

"அதையும் கேப்போம், கொடுக்குறதையும் வாங்கிக் கிடுவோம்.."

"எப்படியும் போங் கடா.."

இருட்டு பழுத்து விட் டது! ஊர் அடங்கிவிட்டது! ஒலி பெருக்கியின் ஓலம் மட்டும் ஓயவில்லை. பெருங் குரலெடுத்து அலறிக் கொண்டிருந்தது! பந்தல் மேல் இருந்த 'குழாய் ரேடி யோவை' கீழே இறக்கி வைத்து, எதிர்க்கட்சி 'குழாய் ரேடியோ'வுக்கு நேராகத் திருப்பி இருந்தனர். அவனும் அப்படித்தான்! "ஓம் முருகா சவுண்டு சர்வீசும்... 'தங்கம் ரேடியோஸும்' எதிரும்

புதிருமாய் அலறிக் கொண்டிருந்தன. அந்த அலறல்தான் ஊரையே உலுக்கிக் கொண்டிருந்தது. ஜன்னல், கதவு, என்று சகலத்தையும் சாத்திய பின்னாடியும் அந்த அதிர்வு இருக்கத்தான் செய்தது!

"கிளம்பிட்டியளா சின்னயா?"

"எங்கடா தூங்க வுடுறீக?"

"இன்னும் ரெண்டு நா தேன்."

"என்ன எழவுடா!"

"இங்குட்டு எங்க போறீகளாம்."

"சோமுப் பய வீட்டுக்குடா; அங்குனக் குள்ள போய் தொடக்கலாமுண்டு போறேன்; நம்ம வூட்டுப் பக்கம்தேன் குழாயத் திருப்பி விட்டுப்பிட்டான்; நெஞ்சுக்குள்ளே எல்லாம் விண்ணு விண்ணுங் குதுப்பா!

"சொன்னா கேக்க மாட்டாங்க..."

"வாரேன்டா..."

"பாத்துப்போங்க."

காலை இழுத்து இழுத்து நகர்ந்தார். இருளில் அவர் முதுகு கூனல் போட்டது போலத் தெரிந்தது! சற்று நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் பிள்ளையார் கோவிலைத் தாண்டிவிட்டார். கோவிலைச் சுற்றியிருந்த மரங்கள் அடர்ந்தும் ஓங்கியும் வளர்ந்திருந்தன. காற்றில் கிளைகள் அசைந்தன. அந்த அசைவில் பட்சிகளின் கூக்குரல். இரவுக்கு அடையும் பட்சிகள்; அதுகளும் தூக்கம் கெட்டுப் போய் கிடந்தன. அவன் தெருவையே ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லாச் சுவர்களிலும் ஏதேதோ சின்னங்கள்! செங்காவியிலும், நீலத்திலும் கிறுக்கப்பட்ட சின்னங்கள். அதில் அவன் கிறுக்கியதும் இருந்தது. பைக் சப்தம் எழும்பியது. எங்கோ சன்னமாகத் தொடங்கி, அது உயர்ந்தது! செவலை வந்து விட்டான்.

"இம்புட்டு நேரமா?"

"போன எடத்துலெ ஒண்ணும் ஆகலை."

"அப்படியா."

"ம்."

"பசிக்குது."

"வா. போகலாம்."

"எம்புட்டு நேரம்! நல்ல வேளை எங்க சின்னய்யா வந்தாரு..."

"சுடுகாட்டுக்கு ரோடு வேணும்பாரே..."

"ம்க்கும்."

"அவருக்கு இதே பாட்டுத்தேன்."

"பொதுக் காரியம் தானே."

"யார் இல்லீங்குறா! சரின்னா பேசாம விடணும். சும்மா 'தொணத் தொணன்னு

"இந்தக் குழந்தைக்கு 'சுந்தரம்'னு பேர் வைக்கறேன்..."

"கீழே விடுங்க அவனை... வீட்டுக்குத் திரும்பி வரும்போது அரசியலை மறந்துட்டு வாங்கன்னு எத்தனை தடவை சொல்றது."

– வாசு

கிட்டு, அந்த வோட்டும் போட வர்றதுல்லெ."

"பாவம்! ஒண்ணும் ஆவலையேண்டு கோவம்!"

"நமக்குப் போடச் சொல்லு. எல்லாம் சரி பண்ணிப்பிடலாம்..."

"போனவாட்டியும் அப்படித்தேன் சொல்லுச்சு."

"அப்ப சூழ்நிலை வேற..."

"ப்சு..."

"ராவுத்தர் கடைக்குப் போவலாமா?"

"இன்நேரமாச்சு! வெச்சிருப்பானா!"

"இருக்குறத திங்க வேண்டியது தான்."

"ம்."

"மேச் செலவுக்கு எதுனா இருந்தாத் தேன் முடியும். ரொம்பச் செரமமா இருக்கு."

"நாளைக்கு வந்துடும்."

"அப்படித்தேன் சொல்லுது."

"காலம்பெற பெரிய குளத்துக்கு எதுக்குப் போனேங்குறே..."

"வோட்டு முடிஞ்சதும் அவளப் போயி கூட்டியாறணும்."

"அது வோட்டு?"

"நம்ம சுப்பம்மாக்காவ வெச்சு போட்டுறலாம்."

"அப்படியா!"

"எதுக்கு விடுவானேன்!"

"இந்த வாட்டி பலமான சங்கதியாத் தேன் இருக்கும் போல. ஒன்றியத்த பாத்தேன். நாளைக்கும் போவணும்..."

"சுடுகாட்டுப் பாதைக்கும் சொல்லுங்க."

"அதெல்லாம் நடக்கும்பா."

"எங்க சின்னய்யாவுக்குப் பெரிய மனத்தாங்கல்."

"அதெல்லாம் அவிங்க ஏத்திவுடுறது" என்று சுவரில் இருந்த ஒரு சின்னத்தைக் காட்டினான்.

எல்லா முழக்கங்களும் முடங்கியது. பெருங் கூச்சலில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது. ஜன்னல் திறந்ததும் புழுக்கம் தணிந்தது. வெளிக்காற்று பட்டாற்போல இலேசாக இருந்தது! நேற்று மதியமே எல்லாம் முடிந்தது. பள்ளிக் கூடத்தைச்



சுத்தம் பண்ணி வைத்துள்ளார்கள், வெளியூரில் இருந்து ஆபீசர்கள் வந்தி ருக்கிறார்கள். போலீஸ் வந்திருக்கிறது. கார், ஜீப் என்று ஒரு படையே திரண்டு விட்டது. தெரு நிம்மதியில் திளைத்துக் கிடந்தது. ஜன நடமாட்டமில்லை. எல்லாக் கால்களும் ஓய்ந்து விட்டன. 'போடுங்கம்மா வோட்டு... பார்த்து...' 'வாழ்க... 'ஒழிக...' கோஷங்களும், சுவரில் கிறுக்க வருகிறவர்களின் கூச்சலும், போஸ்டரில் சாணி அடிக்க வருகின்றவர் களின் தந்திரமும், எல்லாம் நசுங்கிப் போயிற்று!

"செவலண்ணே! எல்லாம் தூங்கிறப் போதுக...

"ஆமா! எல்லாம் தொண்ணாந்துக்கிட் டுக் கெடக்குங்க!"

"ஜோலிய முடிப்போம்."

"நம்ம கிங்காங்குப் பய சில்லறைய மாத்தப் போயிருக்காண்டானா?"

"ப்சு!"

"ஆளுக்கு ரெண்டு தெரு பாத்தா மூச்சிடலாம்."

"எம்புட்டு?"

"அவிங்க?"

"கமுக்கமா திரியுறானுவ, ஒரு தலக் கட்டுக்கு இம்புட்டுனு கொடுப்பாங்க போல..."

"அப்புடியா?"

"வடக்குத் தெருவுலெ ஒரே கசபுசலா கெடக்கு..."

"நாம?"

"ஒரு வோட்டுக்கு இம்புட்டுனு கொடுப் போம்; நீயும் நானும் ரெண்டு தெரு பாக்க லாம்; கிங்காங்கு ரெண்டு தெரு, பரமே ரெண்டு தெரு, மீதிய நாம பாக்கலாம்..."

"எம்புட்டு?"

"தோதுப்படி செய்யலாம்பா."

செவலை கையில் ஒரு டார்ச் லைட்! கக்கத்தில் ஒரு மஞ்சள் பை. வோட்டர் லிஸ்டைச் சுருட்டி ஊது குழல் மாதிரி வைத்திருந்தான். பிள்ளையார் கோவிலுக் குப் பின்புறம் உள்ள பூக்காரத் தெருவிற்குச் சென்றான். இருள் வியாபித்துக்கிடந்தது. வானில் ஒரே ஒரு நட்சத்திரம் மட்டும் மின்னி மறைந்து மறுபடியும் வெளிச்சம் சிந்தியது. 'முத்து ராசு நீ இப்படி நின்னுக்கோ. இதோ இந்தச் சுத்துப் பக்கமா நின்னுக்கோ!' என்று ஓர் இடத்தைக் காட்டினான். மறைவிடம்! சற்று நேரம் இங்குமங்கும் கால் தரிக்காமல் உலாத்தினான். கருவேல வேலியை ஒட்டிய ஒரு சந்துக்குள் நகர்ந்தான். இங்குமங்கும் ஒரு பார்வை. தலையைக் குனிந்து கொண்டே 'சின்னு' வீட்டுக்குள் நகர்ந்தான். "சின்னு ரோட்டுப் பக்கம் இருக்கான்" என்றான் முத்துராசு. 'உஸ்' என்று சமிக்ஞை செய்து காட்டிவிட்டு நகர்ந்து விட்டான்!

சற்று நேரத்தில் கதவுத் தாழ் விலகும் ஓசை கேட்டது. அடிக்குரலில் அழுகிறாற் போல் கதவு மூடிக் கொள்ளும் ஓசையும் கேட்டது. இது சின்னு - சின்னசாமி வீடு. சின்னு ரோட்டுப் பக்கம் தான் இருக்கிறான். 'கொடி'த் தோரணம் கட்டிக் கொண்டி ருக்கிறான். அது கூட செவலை உத்தரவுதான்! எதற்கு இப்படி இருளில் நிறுத்தி விட்டுப் போனான்? 'எவனாவது வந்தா சத்தம் காட்டு!" என்று அவன் அடிக் குரலில் சொன்னது இப்போது கசந்தது! போகும் போது நான்கைந்து ரூபாய் நோட்டுக்களை உருவிக் கொண்டுதான் ஓடினான்!

முத்துராசு இருளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏலே ராசு, என்னடா இங்க நிக்கி றவன்?"

"சின்னய்யாவா!"

"ராவுலெ இங்குனக்குள்ள என்னடா ஜோலி?"

"சும்மா!"

"சும்மாவா?"

"செவலெ ஒரு ஜோலியாப் போயி ருக்காப்புலெ."

"ப்தூ த்ரி..."

அவன் முகத்தைத் திருப்பிக் கொண் டான்.

"மானங்கெட்ட பயலாவுள்ள இருக்க!"

"கச்சி வேலையாத்தான்!"

"இந்த லட்சணத்துலெதாண்டா உங்க கச்சிங்க இருக்கு!"

அவன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். இப்போதைக்கு அவனால் அதைத்தான் செய்ய முடிந்தது. ○




மணமகளின்
அழகுக்கு அழகூட்டும்
80 வருட பட்டுப் பாரம்பரியம்
இப்பொழுது சென்னையில்.
மூன்று தலைமுறைகளாக தென் தமிழகத்தில் முகூர்த்த சேலைகளின் நிரந்தர முகவரியாய் உயர்ந்து விளங்கும் ஆர்எம்கேவி முகூர்த்தப் பட்டு நிறுவனம் இப்பொழுது சென்னையிலும் தன் பட்டுச் சிறகுகளை விரிக்கிறது.
பாரம்பரியத்தில் புதுமை:
பாரம்பரியமும் புதுமையும் ஒருங்கிணைந்திருப்பது ஆர்எம்கேவி பட்டின் தனிச் சிறப்பு. பாரதியின் சின்னஞ்சிறு கிளியே, ரவிவர்மாவின் தமயந்தி போன்ற பல நிகரற்ற கலைப் படைப்புகளின் அடிப்படையில், இன்றைய தலைமுறையினரின் ரசனைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட முகூர்த்தப் பட்டுகள், ஆர்எம்கேவி-யின் முத்திரைப் படைப்புகள்.
பனகல் பார்க், தி.நகர், சென்னை - 17
ரத வீதி, திருநெல்வேலி டவுன்
தேசிய விருது பெற்ற புடவைகள்
தேசிய விருது உங்களுக்காக:
சிறந்த நெசவுத்திறனுக்கான தேசிய விருதுகளை வென்ற பட்டுப் புடவைகளை திருமணத்தின் ஒவ்வொரு வைபவத்திற்கும் வழங்குவதன் மூலம் ஆர்எம்கேவி ஒவ்வொரு மணமகளின் மண நாளையும் மறக்க முடியாத நாளாக்குகிறது.
வாருங்கள்...
இது பிரம்மாண்டமான தளங்களில்...
பட்டின் ஆனந்த உற்சவம்.
உங்களுக்காக... உங்கள் குடும்பத்தின்...
ஒவ்வொரு உறவுகளுக்காகவும்.
RmKV
முகூர்த்தப் பட்டுகள்
போன் : 044-28144445
போன் : 0462-2333105
www.rmkv.com

விளம்பரத்தைப் பார்த்து வோட்டுப் போடுவார்களா..?

● **வசீகரன், சென்னை - 18.**

? எந்த வேட்பாளரையும் பிடிக்கவில்லை என்றால், வோட்டுப் போடாமல் இருந்து விடுவதுதானே சரி?...

! மாசக் கடைசி. வீட்டிலே மளிகை சாமான் குறைந்து விட்டது. மனைவி வற்றல் குழம்பும் வேப்பம்பூ ரசமும் பண்ணிட்டா, வயிற்றைப் பட்டினி போட்டுருவீங்களா..? உள்ளதற்குள் எது பிடித்ததோ அதைச் சாப்பிட மாட்டீங்க..? அப்படி, உள்ளதற்குள் நல்லவரைத் தேர்வு செய்து வோட்டுப் போடுங்க.

● **எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

? மத்தியில் காங்கிரஸ் ஆட்சி வந்தால் ஆறு மாதத்தில் அ.தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதென்று, சோனியாவும் கருணாநிதியும் ரகசிய ஒப்பந்தம் செய்திருப்பதாக அமைச்சர் செம்மலை அச்சம் தெரிவித்திருக்கிறாரே...?

! அவர் அவ்வாறு அச்சமடையும்படி அ.தி.மு.க. ஆட்சி இருந்திருக்கிறது என்று எண்ணுகிறாரா? இல்லையெனில் பயப்படுவானேன்!

● **வீ. முத்தையா, திருநெல்வேலி.**

? மெல் கிப்ஸனின் 'தி பாஷன் ஆஃப் கிரைஸ்ட்' திரைப்படம் அவ்வளவு சர்ச்சைக்குரியதா என்ன...?

! கிறிஸ்துவின் புனிதச் சாவுக்கு ஒட்டுமொத்தமாக யூத இனத்தைக் கைகாட்டியுள்ளார் இப்படத்தில் என்பதால்தான் பிரச்னையே.

● **சாத்தூர் சபாபதி, திருச்சி - 18.**

? 'நடிகையாக இருந்தபோதே நகைகளைக் கழற்றிக் கொடுத்தவர் ஜெயலலிதா. அவர் தேசபக்தியை அப்போதே தெரிந்து கொண்டோம்' என்று தமிழிசை சௌந்தர்ராஜன் கூறுவது எதைக் காட்டுகிறது?

! அப்புறம் அவரும் அவர் தோழியுமாக அடுக்கடுக்காக நகைகள் அணிந்து கொண்ட புகைப்படங்களை, தமிழிசை சௌந்தர்ராஜன் பார்க்கவில்லை அல்லது மறந்து விட்டார் என்பதை.

● **எம். அசோக் ராஜா, திருச்சி - 15.**

? சோனியாவின் அயராத உழைப்பு உரிய பயனைத் தருமா...?

! அவர் அலைந்து திரிந்து வோட்டுக் கேட்டு என்ன புண்ணியம்...? தமிழக காங்கிரஸின் கோஷ்டித் தலைவர்கள், திருச்சி வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அடிதடி சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்களே! காங்கிரஸில் உட்கட்சி ஜனநாயகமும் இல்லை, அரசியல் சாணக்கியமும் இல்லை.

● **எஸ். கருணையானந்தம், உசிலம்பட்டி.** ❒

? வீரவாள், மலர்க்கிரீடம், ரதயாத்திரை - மீண்டும் மன்னராட்சிக்குத் திரும்புகிறோமா...?

! பல தலைமுறைகளாக மன்னராட்சியின் ஆதிக்கத்துக்குப் பழக்கப்பட்டுப் போன ஒரு சமுதாயத்தின் உணர்வுகளைத் தூண்டி, பயன்படுத்திக் கொள்ளும் முயற்சிகள்தான் இவையெல்லாம். மக்களாட்சி என்ற பெயரில் இவ்வாறு செய்வதுதான் மன்னராட்சியைக் காட்டிலும் மோசமானது; மோசடியானது.

• தெரிந்த ஓட்டைகள்!



• வீண் அலைச்சல்!



● **மல்லிகை மன்னன், மதுரை - 17.**

? அ.தி.மு.க. அமோக வெற்றி பெற வேண்டும் என்ற வெறியில் ஒரு போலீஸ்காரர் தமது கைவிரல்களை வெட்டி 'காணிக்கை' பிரார்த்தனை செலுத்தியிருக்கிறாரே...? எப்பேர்ப்பட்ட தியாகி?

! மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்காகவே தோற்றுவிக்கப்பட்ட இயக்கத்தில் உதித்த கட்சியினர், இப்படி மேலும் மூடநம்பிக்கைகள் வளரக் காரணமாயிருப்பதே, அக் கட்சியின் தலைமையில் கோளாறு என்பதை உணர்த்தவில்லையா!

● எஸ். பாலச்சந்தர்,
திருவாரூர்.



• புது பயம்!



• புனிதப் பிரச்னை

? மத்தியில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சி அமைந்தால் ஆண்டவனாலும் இந்தியாவைக் காப்பாற்ற முடியாது என்று ஒதுங்கி விடுவீர்களா? அல்லது மக்களின் தீர்ப்பை மதிப்பீர்களா? (காலம் காலமாக பி.ஜே.பியை எதிர்ப்பவர் என்பதால் கேட்கிறேன்...)?

! 1) பா.ஜ.கவை எதிர்க்கவில்லை; அதன் அடிப்படை வாதப் போக்கைத்தான் எதிர்க்கிறேன். அதன் நண்பர்களை வைத்து அதை எடைபோடுகிறேன்.

2. மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்பேன்; ஆனால் அதற்காக எனது நிலையை மாற்றிக் கொள்ள மாட்டேன்.

3. பா.ஜ.க.வின் செயல்பாடுகளைத் தொடர்ந்து நடுநிலையோடு விமர்சிப்பேன்.

- மூன்றுமே பல முறை சொன்னதுதான்; மீண்டும் அதையே சொல்கிறேன்.

● ஆர். கர்ணன், தனக்கர்குளம் அஞ்சல்.

? தெய்வ பக்தி - தேச பக்தி - ஒப்பிடுக...?

! பதிபக்தியையும் சேர்த்துக் கேட்டிருந்தால் டாபிகலாக இருந்திருக்குமே ஸார்!

● டி. சந்திரன், ஈரோடு - 2.

? தவறான எண்ணத்துடன் கேட்கலைங்க... ஆனால், மகாமகம் குளத்தில் கூட்டம் கூட்டமாக இத்தனை பேர் குளித்தார்களே... நாட்டில் இத்தனை பாவிகள் இருக்கிறார்களா?

! அங்கு திரண்ட அனைவருமே பாவம் நீங்க வந்தவர்கள் அல்ல. மகாமகம் நிகழ்வு, ஆழ்ந்த இறை உணர்வின் ஒரு வெளிப்பாடு. மேலும், பாவம் என்பதில், தெரிந்தே செய்தது, அறியாமல் செய்தது, நிர்பந்தத்தில் செய்தது, பெரிய இறுதி நன்மைக்காகப் புரிந்த, (பொய் பேசுதல் போன்ற) சிறிய பாவம் போன்று பல வகை உண்டு. அப்படிப் பார்க்கும் போது, ஈரோடு டி. சந்திரன் உள்பட அனைவரும் பாவிகளே!

● தேவந்தி துரைராஜ், திருவண்ணாமலை.

? சில பிரபலங்கள் திடீரென்று பா.ஜ.கவில் சேருவது ஏன்...?

! ஜெயிக்கிற குதிரை மீது பணத்தைக் கட்டும் எண்ணத்தில்.

● ஈ. சிதம்பரம், சிவகாசி. •

? 'இந்தியா ஒளிர்கிறது' என்ற விளம்பரத்தைப் பார்த்து வோட்டுப் போட்டு விடுவார்களா மக்கள்? இதனாலெல்லாம் மக்கள் மனத்தை மாற்றி விட முடியுமா...?

! ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால், அது உண்மையின் தோற்றம் கொண்டு விடும் என்பது மனவியல் ரீதியான உண்மை. இதைத்தான் அரசியல்வாதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

● எம். குணசேகரன்,
வேலாயுதம்பாளையம்.

? முதல்வர் ஜெ. சோனியாவைப் பற்றிப் பேசியதில் நடத்தை விதிமுறைகள் மீறப்பட்டிருக்கிறதா?

! அவதூறு வழக்குகளைப் பத்திரிகைகள் மீது ஏராளமாகத் தொடுக்கும் 'ஜெ'க்குத் தெரியாதா, எது சட்டம், விதிமுறைகளின் படி அவதூறு; எது சட்டம், விதிமுறைகளிலிருந்து நழுவக்கூடிய அவதூறு என்று!

❑ ரூ. 100 பரிசு பெறுபவர் :

எஸ். கருணையானந்தம்,
பலசரக்கு மளிகை,
முருகன் கோயில் தெரு,
உசிலம்பட்டி - 625 532.

• ரூ. 50 பரிசு பெறுபவர் :

ஈ. சிதம்பரம்,
2/6/1557, ஆசாரி காலனி
நான்காவது தெரு,
சாட்சியாபுரம்,
சிவகாசி (மே) 626 124.



ஜனநாயகத்தின் முதல் எதிரி!

இந்தியாவில் 1947-ஆம் ஆண்டுக்கு முன் ஜனநாயகம் இருந்ததா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும். "குடிமக்கள் சொன்னபடி, குடிவாழ்வு மேன்மையுற குடிமை நீதி" என்பதே ஜனநாயகம் என்றால், அத்தகைய ஜனநாயகம் இல்லை என்பதே உண்மை.

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது அறுநூறுக்கும் மேற்பட்ட மன்னர்கள் இருந்தார்கள். அவர்களை, அவர்களுடைய மக்கள் உண்மையிலேயே அரசர்கள் என்றும், அரசாளப் பிறந்தவர்கள் என்றும் கருதினார்கள். "இவர் யார் நம்மை ஆள்வதற்கு?" என்று கேட்டவர்கள் மிகச் சிலரே.

நேபாள மன்னரை விஷ்ணுவின் அவதாரம் என்று அந்நாட்டு மக்கள் கருதுகிறார்கள்.

ஜனநாயகத்தின் தொட்டில் என்று கூறப்படும் பிரிட்டன் நாட்டில், மிகப் பெரும்பான்மையான மக்கள் மன்னர் ஒருவர் இருப்பதையே விரும்புகிறார்கள். 'மன்னர்' என்பதை ஒழித்துவிட்டு, பிரிட்டனை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தி குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கலாமா என்றால், அக் கருத்தைப் பெரும்பான்மையான பிரிட்டிஷ் மக்கள் அடியோடு நிராகரிக்கிறார்கள்.

ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலேயும் ஜனநாயக அரசுகள் தாம் அமைந்துள்ளன. ஆனால் அவற்றில் பல நாடுகளில், நாட்டின் தலைவராக இருப்பவர் அரசர் அல்லது அரசியே!

இந்தியாவில் இன்னும் பல பகுதிகளில் முன்னாள் மன்னர்களை 'ராஜா', 'மகாராஜா' என்று அழைக்கும் பழக்கம் இருக்கிறது. சென்னையில் வாழும் முகம்மது அலி அவர்களை "ஆற்காடு

பணத்தைத்தான் கொள்ளையடித்தார்கள். நம்முடைய வாக்குரிமையையும் அவர்கள் கொள்ளையடிக்க அனுமதிப்பதா? என் வோட்டுக்கு விலையே இல்லை என்ற உறுதியுடன் ஒவ்வொருவரும் இருந்து விட்டால், ஒவ்வொருவரும் தன் மனசாட்சியின் வழியில் வாக்களித்து விட்டால், பணநாயகத்தை வீழ்த்திவிடலாம்.



ப.சிதம்பரம்

இளவரசர்'' என்றே பத்திரிகைகளும், அரசுக் குறிப்புகளும் குறிப்பிடுகின்றன.

என்னுடைய நெருங்கிய நண்பர் மறைந்த மாதவ்ராவ் சிந்தியா. அவர்களுடைய குவாலியர் இல்லத்திற்கு, ஒருமுறை சென்றிருந்தேன். அந்த இல்லத்தை எல்லோரும் அரண்மனை என்று குறிப்பிட்டது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஆனால், வேலைக்காரர்கள் முதல் மத்தியப் பிரதேச அரசு அதிகாரிகள் வரை, நண்பர்கள் முதல் குவாலியர் நகர முக்கியப் பிரமுகர்கள் வரை, அவரை 'மகராஜ்' என்று விளித்தது எனக்கு வியப்பளித்தது. வேடிக்கையாகவும் இருந்தது. நானும் அவரைக் கேலி செய்யும் வகையில் 'மகராஜ்' என்று ஓரிருமுறை விளித்து, அவருடைய பொய்க் கோபத்திற்கு ஆளானேன்!

இந்தச் சமுதாய, வரலாற்றுப் பின்

ஜனநாயகமே இந்த நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள். 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற அடிப்படையில் தேர்தலை நடத்தி, அந்தத் தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதே நாட்டுக்கு நன்மை, என்று அவர்கள் நினைத்தார்கள். ஜனநாயகத்தால் நன்மையா, இல்லையா என்பது விவாதத்திற்குரிய பொருள் அல்ல. ஜனநாயகமே நன்மை என்பது என்னுடைய கருத்து. ஜனநாயக ஆட்சி முறையில், நன்மையும் விளையலாம், தீமையும் ஏற்படலாம். ஆனால் அந்த ஜனநாயக ஆட்சி முறையையே விரும்புகிறேன்.

நான் விரும்பும் ஜனநாயகம் வேறு. இன்று நடைமுறையில் இருக்கும் ஜனநாயகம் வேறு. 'ஒருவருக்கு ஒரு வோட்டு'



■ சுய உதவிக் குழு - சுதந்திரமாய் வாக்களிப்பார்களா...?

னணி உள்ள நாட்டில், நமக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த தலைவர்கள் எப்படித் துணிந்து ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக் கொள்வார்கள்? வெறும் முப்பது சதவிகிதம் எழுத்தறிவு (எழுத்தறிவு என்பது வேறு, கல்வியறிவு என்பது வேறு) இருந்த நாட்டில், ஜனநாயக முறையை ஏற்றுக் கொண்டதற்கு அளவில்லாத துணிவும் நம்பிக்கையும் இருந்திருக்க வேண்டும்.

என்றுதானே இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான். 'பதினெட்டு வயது நிறைந்த எல்லோருக்கும் வோட்டு' என்பதுதானே விதி என்று நீங்கள் கேட்கலாம். ஏற்றுக்கொள்கிறேன். 'அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவைதாம் வேட்பாளர்களை நிறுத்துகின்றன' என்று நீங்கள் சுட்டிக் காட்டலாம். ஒப்புக் கொள்கிறேன்.

'யாருக்கு அதிக வாக்

குகள் கிடைக்கின்றனவோ, அவர்தானே தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி' என்று நீங்கள் வாதிடலாம். நான் அதை மறுக்கவில்லை. பிறகு, நம்முடைய ஜனநாயகத்தில் என்ன குறையை நான் காண்கிறேன்?

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு ஊழல் ஒரு பெரும் தடைக்கல் என்று குறிப்பிட்டிருந்தேன். ஊழலைவிட ஒரு பேரபாயத்தை இந்த நாடு எதிர் நோக்கியுள்ளது. அதுதான் தேர்தலில் செலவழிக்கப்படும் பணம்!

ஜனநாயகத்தின் முதல் எதிரி பணம். அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராக நிற்கவிருக்கும் அதிபர் ஜார்ஜ் புஷ், ரூபாய் ஆயிரம் கோடி (200 மில்லியன் டாலர்) செலவழிப்பார் என்று செய்திகள் வெளியாகின்றன. ஆனால் அதே பத்திரிகைகள், புஷ்ஷுக்கு ஈடாக, ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் திரு. கெர்ரியும் ரூபாய் ஆயிரம் கோடி செலவழிப்பார் என்று கூறுகின்றன. அந்த நாட்டில் இரண்டு பெரிய கட்சிகள்தாம். இரண்டும் சம பலம் உடையவை. அது மட்டுமல்ல, இரண்டு வேட்பாளர்களுக்கும், அரசு தேர்தல் செலவுகளுக்கு நிதி அளிக்கிறது. அந்த நாட்டிலும் பணம் செலவழிக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பணம் ஒரு ஜனநாயகத் தேர்தலின் நேர்மையையும் செம்மையையும் குலைப்பதில்லை.

இந்தியத் தேர்தல்களில் பணம் விளையாடுகிறது. இந்த விளையாட்டே வினையாகி விடுகிறது.

ஒரு சட்டமன்றத் தொகுதியில் ஒரு கோடி ரூபாய் செலவழிப்பார்களாம். ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் ஆறு கோடி ரூபாய் செலவழிப்பார்களாம். யார், எங்கே என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகவே தெரியும். இப்படி வாரி இறைக்கப்படும் பணம் 'செலவழிக்கப்படுவதில்லை'. வாக்காளர்களைப் பணத்தால் பிரமிக்க வைத்து, அவர்கள் ஸ்தம்பித்து நிற்கும்போது அவர்களுடைய மனச்சாட்சியை விலைக்கு வாங்கி, வோட்டுகளைப் பெறும் முயற்சிக்கு இந்தப் பணம் பயன்படுகிறது.

ஒரு நாட்டில் அல்லது ஒரு மாநிலத்தில், ஏழைகளும், எழுத்தறிவு இல்லாதவர்களும் பெருமளவு இருந்துவிட்டால், பணநாயகத் தலைவர்களுக்குக் கொண்டாட்டம்தான்!

நூறு சதவிகிதம் கல்வியறிவு உள்ள கேரளத்தில் செய்ய முடியாத சித்து விளையாட்டுகளை, ஐம்பது சதவிகிதத்திற்கும் குறைவான கல்வியறிவு பரவியுள்ள உத்தரப்பிரதேசத்திலும், பீகாரிலும் செய்ய முடிகிறது. தமிழ்நாட்டில் எழுத்தறிவு அறுபத்தைந்து சதவிகிதம். கல்வியறிவு என்று பார்த்தால் நாற்பத்தைந்து சதவிகிதம் இருக்கும். இதுவே பணநாயகவாதிகளுக்குச் சாதகமாக அமைந்து விடுகிறது. மே மாதம் 10ஆம் நாள், தமிழ்நாட்டில் தேர்தல். ஜனநாயகம் வெல்லுமா, அல்லது ஜனநாயகத்தைப் பணநாயகம் முறியடிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. சுவர் விளம்பரத்திற்குப் பணம் கொடுத்து விட்டார்கள். கட்சியின் கிளைகளுக்குப் பணம் விநியோகிக்கப்படுகிறது. ஜீப்புகளும், குவாலிஸ் வண்டிகளும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. கொடி, பேனர் ஆகியவற்றுக்கு ஆர்டர் கொடுத்தாகிவிட்டது. இவற்றையெல்லாம்

ஹாலிவுட்டிலும் எப்போதாவதுதான் 3டி படத் திருவிழா. காரணம், 3டி படம் வெளியாகும் திரையரங்குகளில் 'சில்வர் மெட்டாலிக்' பூசப்பட்ட பிரத்தியேக திரைகளை கட்டித் தொலைக்க வேண்டும். கூடவே புரொஜெக்டரில் 3டி லென்ஸும் பொருத்தியாக வேண்டும். இது போன்ற மெகா தலைவலிகளுக்காகவே ஹாலிவுட்காரர்கள் 3டி படத் தயாரிப்பு என்றால், பல அடிகள் தள்ளியே இருப்பார்கள். 'இந்த இரண்டு பிரச்னைகளும் இல்லாமல் ஏன் 3டி படம் எடுக்கக் கூடாது?' என்று ராபர்ட் ரோட்ரிக்ஸ் என்ற இயக்குனர் தமது சகாக்களோடு ஆராய்ச்சியில் இறங்க (ஆராய்ச்சிக்கே ஐம்பது கோடி செலவிட்டிருக்கிறார்கள்), அதிர்ஷ்டவசமாக வெற்றி! அப்புறமென்ன? தாங்கள் கண்டுபிடித்த புதிய ஹை- டெஃபினேஷன் 3டி கேமராவைக் கொண்டு, இருநூறு கோடியில் தயாரித்த படம் ஸ்பை கிட்ஸ் 3டி (துப்பறியும் வாண்டுகள்).

அமெரிக்க, ஐரோப்பிய வாண்டுகளை ஸ்பை கிட்ஸ் வசீகரிக்கக் காரணம், வெர்ச



• சக்திமான் தாத்தா

சுவல் ரியாலிட்டி மூலம், கம்ப்யூட்டர் விளையாட்டுகளில் உள்ளே நுழைந்து, அதில் கற்பனையாக உருவாக்கப்பட்ட பாத்திரங்களை, ஐந்து பேர் கொண்ட சிறுவர் குழு நிஜமாகச் சந்திப்பதுபோல் கதை. கதையில் போனஸாக, நம்மூர் சக்திமான் மாதிரி ஓர் ஓல்டு சூப்பர்மேன் வேறு!

விடுவார்களா நம்மவர்கள்! எதிர்வரும் விடுமுறையில் இந்தியக் குழந்தைகளை குஷிப்படுத்த, ஸ்பை கிட்ஸ் படத்தை சூட்டோடு சூடாக இறக்குமதி செய்து விட்டார்கள். தமிழகத்தில் ஏற்கெனவே 'மை டியர் குட்டிச் சாத்தான்', 'வேதாளம்' போன்ற 3டி படங்களை வெளியிட்டு வெற்றி கண்ட கேயார், 'சக்திமான் 3டி' என்று தந்திரமாகத் தலைப்புச் சூட்டி தமிழில் வெளியிடுகிறார். — ஸ்ரீ

கூடப் பொறுத்துக் கொள்ளலாம்.

ஆனால், சுய உதவிக் குழுப் பெண்களுக்குப் பணம் கொடுக்கப்படும் என்றாலோ, ஒவ்வொரு கிராமத்திலும், கிராமக் கோயிலுக்கு பெரும் பணம் தரப்படும் என்றாலோ, எதிர்க்கட்சியைச் சார்ந்த அதிருப்தியாளர்களுக்கு விலை பேசப்படும் என்றாலோ, வோட்டுக்கு நூறு ரூபாய் அல்லது மொத்தமாக ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் என்றாலோ, வோட்டுப் பதிவு நாளன்று ஒரு வாக்குச் சாவடிக்கு பத்தாயிரம் ரூபாய் என்றாலோ, ஜனநாயகத்தைப் பணநாயகம் வென்றுவிட்டது என்றே கொள்ள வேண்டும். இந்தப் பணநாயகத்தை வெல்ல முடியாதா? முடியும். உங்களால் முடியும்.

வோட்டுச் சாவடிக்குப் போகாத நாற்பத்தைந்து சதவிகித வாக்காளர்கள் மனம் வைத்தால் நிச்சயமாக முடியும்.

மாணவர்கள், படித்தவர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், படித்த அல்லது வேலைக்குப் போகும் குடும்பத் தலைவிகள் உறுதியுடன் செயல்பட்டால், முடியும்.

அள்ளி வாரி இறைக்கப்படும் பணம் நம்மிடமிருந்து - அல்லது நம்முடைய வரிப் பணத்திலிருந்து ஏதோ ஒரு வகையிலே கொள்ளையடித்த பணம், என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பணம் யாரும் உழைத்துச் சம்பாதித்த பணம் அல்ல.

பணத்தைத்தான் கொள்ளையடித்தார்கள். நம்முடைய வாக்குரிமையையும் அவர்கள் கொள்ளையடிக்க அனுமதிப்பதா? என் வோட்டுக்கு விலையே இல்லை என்ற உறுதியுடன் ஒவ்வொருவரும் இருந்துவிட்டால், ஒவ்வொருவரும் தன் மனச்சாட்சியின் வழியில் வாக்களித்து விட்டால், பணநாயகத்தை வீழ்த்திவிடலாம்.

ஏழைகளும் எழுத்தறிவில்லாதவர்களும் இருக்கும் வரையில், பண நாயகம் ஆதிக்கம் செய்ய முயலும். ஏழ்மையும் கல்லாமையும் ஒழிந்துவிட்டால், ஜன நாயகம் தழைத்துவிடும்.

அதுவரை ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்கள் கைகளில் இருக்கிறது.

(தொடரும்)

நாகர்கோயில் ரவுண்ட்அப்

கலங்கும் காவி; கலக்கும் சிவப்பு!

மற்ற தொகுதியில் ஜாதிரீதியாக வாக்காளர்களை வேட்பாளர்கள் 'டார்கெட்' பண்ண, நாகர்கோயில் தொகுதியில் மட்டும் மதரீதியாகத் தங்கள் அணுகுமுறையை மாற்றுகின்றார்கள் வேட்பாளர்கள்.


1999ம் வருடம் நடந்த தேர்தலில் சுமார் ஒன்றரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் இந்தத் தொகுதியில் வென்றவர், மத்திய அமைச்சரும், பா.ஜ.கவைச் சேர்ந்தவருமான பொன். ராதாகிருஷ்ணன். அப்போது தி.மு.க ஆதரவு. இப்போது அ.தி.மு.க! ராதாகிருஷ்ணனுக்கு இப்போது சவால் விடுபவர், சி.பி.எம்.மின் பெல்லார்மின்.



நாகர்கோயில் பாராளுமன்றத் தொகுதியில், ஆறு சட்டமன்றத் தொகுதிகள். விளவங்கோடும், திருவட்டாரும் இடது கம்யூனிஸ்ட் வசம் இருக்கின்றன. கிள்ளியூர், குளச்சல், பத்மநாபபுரம், நாகர்கோயில் ஆகிய தொகுதிகள், அ.தி.மு.க வசம் இருக்கின்றன. சுமார் பத்து லட்சம் வாக்காளர்கள். கிட்டத்தட்ட ஐம்பத்தைந்து சதவிகிதம் கிறிஸ்துவர்கள். அதில் நாடார்கள், சி.எஸ்.ஐ, ரோமன் கத்தோலிக், பெந்தகோஸ்த் எல்லாம் அடக்கம். நாற்பது சதவிகிதம் ஹிந்து வாக்காளர்கள். கணிசமாக முஸ்லிம் வாக்காளர்களும் உண்டு. 1999ல் மும்முனைப் போட்டி. அப்போது த.மா.கா சார்பில் தனித்து நின்ற குமாரதாஸ் பெற்றது, ஒரு லட்சம் வோட்டுக்கள். காங்கிரஸ் சார்பில் நின்ற டென்னிஸ், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றார். இன்று, த.மா.கா, காங்கிரஸோடு இணைந்த நிலையில், பொன். ராதாகிருஷ்ணன் வெற்றிக்கு உதவிய தி.மு.க.வும், சி.பி.எம். வேட்பாளருக்கு ஆதரவாக சிலிர்த்துக் கொண்டு களத்தில் நிற்கையில், பெல்லார்மின் உற்சாகத்தோடு தேர்தலைச் சந்திக்கிறார்.

ஆனால் பொன். ராதாகிருஷ்ணனின் செல்வாக்கைச் சற்றும் குறைத்து மதிப்பிட முடியாது. தொகுதியில் பா.ஜ.க.வுக்கு என்று ஒரு செல்வாக்கு உண்டு. இது தவிர, இப்போது அம்மா ஆதரவு வேறு. குறிப்பாக கிள்ளியூர் குமாரதாஸும், நாகர்கோயில் ஆஸ்டினும் சி.பி.எம்.மின் ஆதரவுத்தளங்களை பலவீனப்படுத்துவார்கள்.

• ஹேமச்சந்திரன்



பொன். ராதாகிருஷ்ணனுக்குத் தொகுதியில் பரவலாக நல்ல பெயர் இருக்கிறது. எந்தப் பிரச்னையென்றாலும் இவரை அணுகுவது சுலபம். தொகுதியில் முறையாக அலுவலகம் அமைத்துச் செயல்பட்டு வருகிறார். "தொகுதியில் ஏகப்பட்ட பணிகளைச் செய்திருக்கிறார் அமைச்சர்" என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள். மருத்துவக் கல்லூரி, குளச்சல் துறைமுகம், தூண்டில் வளைவுகள், மின்னிடும் தார்ச் சாலைகள் என்று ராதா

கிருஷ்ணனின் சாதனையாக, தொகுதி யெங்கும் பா.ஜ.கவின் பிரசாரம் பலமாக நடக்கிறது. ஹிந்துக்களின் வாக்கு வங்கியை வளைத்துப் போட்டால் வெற்றி நிச்சயம் என்ற நோக்கில், யுக்திகள் வகுக்கப்படுகின்றன. அடிமட்டத்தில்



* பொன். ராதாகிருஷ்ணன்

ஆர்.எஸ்.எஸ் மற்றும் ஹிந்து முன்னணித் தொண்டர்கள் அமைதியாகத் தங்கள் பணிகளை ராதாகிருஷ்ணனுக்கு ஆதரவாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

"தொகுதியை காங்கிரஸுக்கு ஒதுக்க வேண்டும்" என்று போராடிய உள்ளூர் காங்கிரஸ்காரர்களுக்குப் ஏமாற்றமளித்து விட்டது காங்கிரஸ் தலைமை. இரண்டு முறை காமராஜ் நின்று வென்ற தொகுதி இது. அதனால்தான் காங்கிரஸுக்கு அத்தனைப் பாசம் தொகுதியின் மீது. "காங்கிரஸ்காரர்கள் சி.பி.எம்.முக்கு ஆதரவாக வேலை பார்க்க மாட்டார்கள்; சிலர் பா.ஜ.க.விடம் விலை போய் விட்டார்கள்" என்பது முதலில் பேச்சாக இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறியிருக்கிறது. மதரீதியான அணுகுமுறையை, தீவிரமாக பா.ஜ.க மேற்கொள்ளும் நிலையில், கம்யூனிஸ்ட் வேட்பாளர் வெற்றி பெறுவதற்காக பாடுபடுவதைத் தவிர, காங்கிரஸுக்கு வேறு வழி இல்லை.

"பொதுவாகவே மக்கள் அமைதியை விரும்புகிறார்கள். எனவே அடிப்படைவாத பா.ஜ.கவை ஊக்குவிக்கும் வகையில் வோட்டளிக்க மாட்டார்கள்" என்கிறார் சி.பி.எம்.மின் சட்டமன்ற உறுப்பினர் ஹேமச்சந்திரன். "தொகுதியில் உள்ள அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து போராடி, குமரி மாவட்டத்துக்குச் சில வளர்ச்சிப் பணிகளைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அவற்றையெல்லாம் ஏதோ பொன். ராதாகிருஷ்ணன்தான் கொண்டு வந்தார் என்று பிரசாரம் தொடர்கிறது. உண்மையை மக்களிடம் எடுத்து வைப்போம்" என்கிறார் ஹேமச்சந்திரன். "மருத்துவக் கல்லூரிக்கு தி.மு.க., அ.தி.மு.க மற்றும் கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர்கள் துவக்க நிதி கொடுத்திருக்கிறார்கள். மருத்துவக் கல்லூரிக்குத் தனி ஒரு நபர் பெருமையை எடுத்துக் கொள்ளக் கூடாது" என்கிறார்கள் கம்யூனிஸ்டுகள். மாவட்டத்தில் ரப்பர் விவசாயம் கணிசமாக உள்ளது. தொகுதியில் உள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டு, ரப்பர் விவசாயிகளின் வாழ்க்கையைச் செழுமையாக்க, பொன். ராதாகிருஷ்ணன் ஒன்றும் செய்யவில்லை என்ற பேச்சும் இருக்கிறது. அதேபோல ஈத்தாமொழியில் கயிறு செய்யும் தொழில் பிரசித்தம். ஆனால் தொழில் நசிந்து போய், அங்கு இருந்த கயிறு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் மூடப்பட்டு விட்டதாம். மாவட்டத்தில் உள்ள பாசன கால்வாய்களைத் தூரெடுத்து ஒழுங்கு செய்ய, ராதாகிருஷ்ணன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவைக் கூட்டவும் எந்த



* பெல்லார்மின்

முனைப்பும் காட்டவில்லை அவர். மணவாளக்குறிச்சி அரிய மணல் தொழிற்சாலையில் கூடுதலாக வரவிருந்த பிளாண்ட் ஒன்று, அடுத்த மாவட்டத்துக்குச் சென்று விட்டதாம். இவையெல்லாம் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினர், ராதாகிருஷ்ணன் மீது வாசிக்கும் குற்றப்பத்திரிகை.

சி.பி.எம் வேட்பாளர் பெல்லார்மின் இருபத்தைந்து வருடங்களாக தொழிலாளர் நலனுக்குப் போராடி வருபவர். குறிப்பாக கட்டுமானத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யூவுக்கு நல்ல செல்வாக்கு உண்டு. சங்கப் பரிவாரங்களைப் போலவே, காம்ரேடுகளும் அமைதியாகத் திட்டமிட்டு வேலை செய்பவர்கள்.

"பா.ஜ.க வேட்பாளர் போல, நாங்கள் மதரீதியாக வாக்காளர்களை அணுகவில்லை. எல்லோர் ஆதரவையும் பெற்று, எங்கள் வேட்பாளர் வெற்றி பெறுவார்" என்கிறார் ஹேமச்சந்திரன். "இந்த மாவட்டத்து மக்கள் படித்தவர்கள். அவர்களைச் சுலபத்தில் ஏமாற்ற முடியாது. வோட்டுக்காக 'சிறுபான்மை' ஜால்ரா அடிக்கும் காங்கிரஸ்- கம்யூனிஸ்ட் - தி.மு.க அணியை, ஓட ஓட, விரட்டுவார்கள் வாக்காளர்கள். உண்மையான மத நல்லிணக்கமும், அமைதியும் வாஜ்பாய் ஆட்சியில்தான் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்" என்கிறார் பொன். ராதாகிருஷ்ணன்.

இவருக்குக் கிடைத்திருக்கும் அ.இ.அ.தி.மு.க ஆதரவை, சற்றும் குறைத்து மதிப்பிட முடியாது. மத்திய, மாநில அரசுகளின் பின்பலம் கூட இருக்கிறது. இப்படிப்பட்ட ஆதரவான சூழல் இருக்கும் நிலையிலும் காவிக் கொடியை கலங்கடிக்கிறது செங்கொடி என்பதுதான் தொகுதியின் இன்றைய யதார்த்த நிலை.

- ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு

மாண்புமிகு டாப் டென் - 6 போட்டி முடிவு

ஜி.கே. வாசன் பெற்றது 49/100

ஜி.கே. வாசனுக்கு மார்க் போடுமாறு பத்திரிகையாளர் சாவித்ரி கண்ணனிடம் கேட்டோம். ரொம்ப யோசித்து அவர் போட்ட மார்க் 49.

மார்க்கை அள்ளிப் போட்ட வாசகர்களுக்கும் கிள்ளிப் போட்ட வாசகர்களுக்கும் நன்றிகள். சாவித்ரி கண்ணன் போட்ட மார்க்கையே பல வாசகர்கள் போட்டிருந்தார்கள். அவர்களுள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வாசகர்:



* சாவித்ரி கண்ணன்

	தகுதி	முழு மதிப்பெண்	வாசகன் பெற்றது
1.	தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்)	10	5
2.	முடிவெடுக்கும் திறன்	10	8
3.	கறைபடாத கரங்கள்	10	5
4.	அரசியல் சாணக்கியம்	10	3
5.	மனிதநேயம்	10	4
6.	தொண்டர்களோடு தோழமை	10	7
7.	மேடைப் பேச்சு	10	2
8.	மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு	10	6
9.	தனி மனித ஒழுக்கம்	10	6
10.	நிர்வாகத் திறமை	10	3
	மொத்தம்	100	49

என். மீனாட்சி சுந்தரம்,
32/11,
சச்சிதானந்தம் தெரு,
குயப்பேட்டை,
சென்னை - 600 012

பரிசு பெற்றவருக்குப் பாராட்டு. பரிசு ரூ.250/- அனுப்பி வைக்கப்படும்.

வலை பாயுதே





* கெரி

"பதவியேற்ற நூறு நாட்களில் என் நாட்டை மிகச் சிறந்த, மிகப் பாது காப்பான நாடாக மாற்றிக் காட்டுவேன்" என களம் இறங்கியிருக்கிறார் ஜான் கெரி! இங்கல்ல. அமெரிக்காவில், ஜார்ஜ் புஷ்ஷுக்கு எதிராக! "ஈராக் போரின் வெற்றி, அமெரிக்க அமைதிக்குத் தோல்வியா?" என்று புஷ்ஷுக்கு எதிராகப் பிரசாரம் செய்கிறது www.johnkerry.com. ஐந்நூறு நாட்களில் மூன்று மில்லியன் வேலை வாய்ப்பு, அமெரிக்க வீரர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு - என்று பல மேஜிக் வாசகங்கள் மினு மினுக்கின்றன. கெரியின் உருவம், கட்சிக்கொடி கொண்ட சட்டைகள், பனியன்கள், லேபில்கள், போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள், பட்டன்கள் எல்லாம் இப் போது அங்கு விற்பனையில் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

தேர்தல் விளம்பரத்திற்குச் சுவர் பிடிச்சாச்சா?

சைவ சமையலைக் கற்றுக் கொள்ள வேண்டுமா? ஸ்தோத்திரங்கள், ஸ்லோகங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா? புதுப்புது 'மெகந்தி' டிசைன்கள், அழகுக் குறிப்புகள் வேண்டுமா? இந்தியத் திருவிழாக்கள், வீட்டு விசேஷங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமா? பாட்டி வைத்தியம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா? கை நீட்டி வரவேற்கிறது www.indianmom.com வெளிநாட்டில் வாழும் இந்தியப் பெண்மணிகளுக்கு மிகவும் உதவக் கூடிய தளம் இது. குழந்தை வளர்ப்பு முறை கட்டுரைகள், குழந்தைகளுக்கான மருத்துவம் என விரியும் இந்த வலைத்தளம், அறுபத்திரெண்டு வயதில் இணையம் பற்றி அறிந்து கொண்ட பெண்மணி ஒருவரால் பாசத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

வெந்நீர் வைப்பது எப்படி? விளக்கவுரை கிடைக்குமா?

வாஜ்பாய் வாய்ஸ்!

'பைட்(byte)களின் உதவியோடு தேர்தல் 'ஃபைட்' பண்ணக் கிளம்பியுள்ளது பி.ஜே.பி. தகவல் நுட்பத்தின் வளர்ச்சியை தன் பிரசார ஆயுதமாகக் கையில் எடுத்துள்ளது. பிரசாரத்திற்கு இ.மெயில், எஸ்.எம்.எஸ், வாய்ஸ் மெயில் என பல யுக்திகளைக் கையாள்கிறது. அனைத்து மீடியாக்களையும் தன் தலைமையகத்துடன் இணைத்து, வேகமாக செய்திகளை வாரி வழங்குகிறது. தொலைபேசியிலும் வாஜ்பாய் வாய்ஸ் வர, ஏற்பாடு செய்துள்ளது என்கிறது www.timesofindia.com.

எல்லாம் சரி.. நம்ம மொக்கராசுவுக்கு வாஜ்பாய் குரல் கேட்குமா?

ஜோக்

ஒரு நிதி நிறுவனத்தின் கணக்காளர் பதவிக்கான நேர்முகத் தேர்வு. முதலில் ஒருவர் செல்கிறார். பத்திரிகையில் படித்தவர். "இரண்டும், இரண்டும் எவ்வளவு?" என்ற கேள்வி கேட்கப்பட, பதில் "22" என்கிறார். அடுத்ததாக ஒரு பொறியியல் மாணவன் செல்கிறான். அதே கேள்வி. "3.9999க்கும் 4.0001க்கும் இடையில்" என பதிலளிக்கிறான்.

இறுதியாக, ஏற்கெனவே ஒரு நிதி நிறுவனத்தில் வேலை பார்த்த ஒருவர் செல்கிறார். அதே கேள்வி கேட்கப்படுகிறது. மெதுவாக காதருகே வந்து "எவ்வளவு எழுதணும்னு சொல்லுங்க, எழுதுறேன்" என்கிறார். அவருக்கு வேலை கிடைக்கிறது!

\- முகில்

கோடி கோடி மின்னல்கள்

வைகை வடபழனியில் இருந்த வாணி நர்சிங் ஹோமுக்கு போய்ச் சேர்ந்தபோது, சீஃப் டாக்டர் எங்கோ புறப்பட்டுப் போகும் அவசரத்தில் இருந்தார். வைகையைப் பார்த்ததும் முகம் இறுகிப் போனவராய், தனக்கு எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டினார்.

"உட்காரும்மா..."

வைகை உட்கார்ந்ததும் கேட்டார். "ஐ.ஸி. யூனிட்டுக்குப் போய் இளஞ்செழியனைப் பார்த்தியாம்மா...?"

"இல்ல டாக்டர்... மொதல்ல உங்களைப் பார்த்துட்டுப் போலாம்ன்னு வந்தேன். எப்படி டாக்டர் திடீர்ன்னு அவருக்கு இரத்த வாந்தி...? நல்லா ஹெல்த்தியாத்தானே இருந்தார்?"

"அதுதாம்மா எனக்கும் ஆச்சர்யம்... ரெண்டு மணி நேரத்துக்கு முந்தி நான் ரவுண்ட்ஸ் போனபோதுகூட, இளஞ்செழியன் சந்தோஷமான மூடில் டி.வி. பார்த்துட்டிருந்தார். அதுக்கப்புறம் அவருக்கு இருமல் வந்திருக்கு... தொடர்ந்து இருமிட்டிருந்தவர் திடீர்ன்னு ரத்தமாய் வாந்தி எடுத்துட்டார். உடனே ஸ்கேன் பண்ணிப் பார்த்தோம்... கல்லீரலில் ஒரு வீக்கம் இருந்ததைக் கண்டுபிடிச்சோம்..."

வைகையின் கண்களில் கலவரம் பரவிக் கொண்டிருக்க, டாக்டர் தொடர்ந்தார்.

"இளஞ்செழியன் ஸ்கூட்டரிலிருந்து கீழே விழுந்தபோதே வயிற்றில் அடிபட்டிருக்கு. தலையை மட்டும் ஸ்கேன் பண்ணிப் பார்த்தோம். வயிற்றை பண்ணலை. பெரிய தப்புப் பண்ணிட்டோம். அவர் ஒரு தடவையாவது வயிறு வலிக்குதுன்னு சொல்லியிருந்தா, நிச்சயம் 'ஸ்கேன்' பண்ணி



ராஜேஷ்குமார்

யிருப்போம். அவர் சிரிச்சுப் பேசி ஜாலியா இருந்ததாலே, நாங்களும் கொஞ்சம் அசட்டையாய் இருந்துட்டோம்."

"டாக்டர்...! லிவர்ல வீக்கம் இருந்தா அதை ட்ரீட்மெண்ட்டால குணப்படுத்திடலாம் இல்லையா...?" வைகை கேட்ட கேள்விக்கு உடனடியாய் பதிலளிக்காமல் மௌனமாய் இருந்த டாக்டர், தன் இடது கை விரல்களால் நரை கிராப்பை கவலையாய்க் கோதியபடி வைகையைப் பார்த்தார்.

"நீயும் இளஞ்செழியனும் 'காதலர்கள்'ன்னு அவரோட ஃப்ரண்ட் நவநீத கிருஷ்ணன் சொன்னார். உண்மையாம்மா..?"

"உண்மைதான் டாக்டர்.."

"இளஞ்செழியனுக்கு அப்பா... அம்மா...?"

"யாரும் கிடையாது டாக்டர். சொந்



தம்ன்னு சொல்லிக்க கிராமத்துல மாமா ஒருத்தர் இருக்கிறதாக சொல்லியிருக்கார்." சொன்ன வைகை, டாக்டரின் பார்வையை ஊடுருவியபடி கேட்டாள்.

"டாக்டர்...! என்னோட கேள்விக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலை... லிவர்ல வீக்கம் இருந்தா, அதை ட்ரீட்மெண்ட் கொடுத்து குணப்படுத்திடலாம் இல்லையா...?"

"ஸாரிம்மா வைகை...! இளஞ்செழியனின் கண்டிஷன் கொஞ்சம் சீரியஸ்தான். அவரோட உடல்நிலையைப் பாத்தா, உனக்கு ஃபால்ஸ் ஹோப் கொடுக்க விரும்பலை. ஹார்ட்ல ஏதாவது ப்ராப்ளம் இருந்தால் கூட ஆபரேஷன் மூலமா ரெக்டிஃபை பண்ணிடலாம். பட், லிவர்ல ஒரு ப்ராப்ளம் வந்தா சிரமம்தான்...! விபத்து நடந்த அன்னிக்கே ஸ்கேன் எடுத்துப் பார்த்திருந்தா, ஒரு வேளை குணப்படுத்தியிருக்கலாம். இப்போ லிவரோட நாற்பது சதவிகிதம் செயலிழந்து போயிருக்கு. பொதுவாய் ரத்தக் குழாய்களில் 'திமுதிமு'ன்னு ஓடி வர்ற ரத்தத்தை, லிவர் ஒரு ஸ்பான்ஞ்ச் போல உறிஞ்சி வெச்சுகிட்டு தேவையான ரத்தத்தை மட்டும் இதயத்துக்கு அனுப்பும். இளஞ்செழியனின் பழுதுபட்ட லிவர் அந்த வேலையைச் செய்யாததினாலே இதயத்துக்குள் அதிகமா பாய்கிற ரத்தத்தின் காரணமாய் இளஞ்செழியனுக்கு மூச்சுத் திணறலும் ஏற்பட்டிருக்கு... இது அவருக்கு ஒரு பின்னடைவு"

முகம் இருண்டு போய் கண்களில் நீர் மல்கினாள் வைகை. "டாக்டர்...! நீங்க சொல்றதைப் பார்த்தா, அவரைக் காப்பாத்த முடியாது போலிருக்கே...?"

"நோ... நோ...! நீ ஏம்மா அப்படி நினைக்கிறே! இளஞ்செழியனோட கண்டிஷன் கொஞ்சம் சீரியஸ்ன்னுதான் சொன்னேன். பட், உடனடியா உயிருக்கு ஆபத்துன்னு சொல்லலை. லிவர்ல எந்த பிராப்ளம் வந்தாலும், அதைக் குணப்படுத்தக்கூடிய 'க்யூர் ரேட்' ஃபிப்டி பர்ஸண்ட்தான். இளஞ்செழியனுக்கு இப்பத்தான் ட்ரீட்மெண்ட்டை ஆரம்பிச்சிருக்கோம். இந்த ட்ரீட்மெண்டை உடம்பு ஏத்துக்கிட்டா, அவர் பழைய நிலைமைக்குத் திரும்பலாம்."

"டாக்டர்...! நான் ஒரு விஷயம் சொன்னா நீங்க தப்பா நினைக்கக்

கூடாது..."

"சொல்லும்மா...! நீ எதையும் தப்பா சொல்ல மாட்டேன்னு எனக்குத் தெரியும்."

"டாக்டர்! நான் ஹன்ஸா ஹாஸ்பிடலில் ஒர்க் பண்றேன். உங்களுக்கே தெரியும்... சிட்டியில் இருக்கிற ஹாஸ்பிடல்களில் நெம்பர் ஒன் ஹாஸ்பிடல் அதுதான். சென்ட்ரல் மினிஸ்டர்ஸ்கூட அங்கே வந்துதான் ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறாங்க. ஹாஸ்பிடலுக்கு நிறைய வெளிநாட்டு டாக்டர்கள் வந்து, பேஷண்ட்டுகளைப் பார்த்து குணப்படுத்த முடியாத கேஸ்களையும் குணப்படுத்திட்டுப் போயிருக்காங்க. அதனால..."

"எனக்குப் புரியுதும்மா... இளஞ்செழியனை ஹன்ஸா ஹாஸ்பிடலுக்குக் கொண்டு போய், வெளிநாட்டு டாக்டர்கள் மூலமா ட்ரீட்மெண்ட் கொடுக்கலாமான்னு பார்க்கிறே... அதுதானே...?"

"ஆமா டாக்டர்..."

"தாராளமாய்ப் பண்ணலாம்... நீ ஹாஸ்பிடல் நிர்வாகத்துகிட்டே பேசிட்டு எனக்குத் தகவல் சொல்லும்மா... இளஞ்செழியனை அங்கே கொண்டு போயிடலாம். உடனடியா வேண்டாம். ரெண்டு நாள் இங்கே இருக்கட்டும்."

இண்டர்காம் முணுமுணுத்தது.

டாக்டர் ரிஸீவரை எடுத்து மறுமுனைப் பேச்சை செவி மடுத்துவிட்டு, ரிஸீவரை மறுபடியும் அதனிடத்துக்குக் கொடுத்தபடி வைகையைப் பார்த்தார்.

"ஐ.ஸி. யூனிட்டில் அட்மிட்டாகியிருக்கிற இளஞ்செழியனுக்கு கான்ஷியஸ் திரும்பியிருக்கிறதாகத் தகவல்."

"போய்ப் பார்க்கலாமா டாக்டர்...?"

"வாம்மா... ரெண்டு பேருமே... போலாம்"

....

ஐ.ஸி. யூனிட்டுக்குள் வைகையும் டாக்டரும் நுழைந்தார்கள்.

கழுத்துவரைக்கும் போர்த்தப்பட்ட பச்சை நிறப் போர்வையோடு இளஞ்செழியன் தெரிந்தான். ஸ்பிலிட் ஏ.ஸி. பதினெட்டு டிகிரி செல்ஷியஸ் குளிரை அறைக்குள் நிரப்பி வைத்திருந்தது. சோர்வாய் இருந்த இளஞ்செழியன் வைகையைப் பார்த்ததும் மலர்ந்தான். "குட் ஈவினிங்" என்றான்.

வைகை எதுவும் பேசாமல் கனத்த கவலை முகத்தோடு, இளஞ்செழியனுக்குப் பக்கத்தில் போய் நின்றாள்.

"உங்க உடம்புக்கு இப்போ எப்படியிருக்கு...?"

"பிரமோஷன் கிடைச்சிருக்கே...?"

"பிரமோஷனா...?"

"ம்... பிரமோஷன்தான்... ஒரு மணி நேரத்துக்கு முந்தி ஏ.ஸி. இல்லாத ஒரு சாதாரண ரூம்ல இருந்தேன்... இப்போ ஏ.ஸி. இருக்கிற ஐ.ஸி. யூனிட்டுக்கு வந்திருக்கேன். இது பிரமோஷன்தானே...?" சொல்லிவிட்டுச் சிரிக்கும் இளஞ்செழியனை, சிறிது கோபமாய்ப் பார்த்தாள் வைகை.

"பி... ஸீரியஸ் இளஞ்செழியன்..."

"நான் ஸீரியஸ்தான்...! டாக்டர் சொல்லியிருப்பாரே?"

வைகை பீறிட்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு, அவனுடைய தோளைத் தொட்டான். "தைரியமாயிருங்க இளஞ்செழியன்... உங்களைக் குணப்படுத்திடலாம்ன்னு டாக்டர் சொல்லியிருக்கார்..."

"எல்லா அமைச்சர்களும் செல்போன் கண்டிப்பா வைச்சிருக்கணும்னு முதல்வர் உத்தரவாமே? எதுக்காக?"

"டிஸ்மிஸ் ஆனால் உடனே தகவல் கொடுக்கலாம்!"

- மங்கையர்க்கரசு

"ஒரு சமீபத்திய சர்வே என்ன தெரியுமா வைகை? வக்கீல்களுக்கு அடுத்தபடியாய் டாக்டர்கள்தான் நிறையப் பொய் சொல்றாங்களாம்"

டாக்டர் குறுக்கிட்டார்.

"நோ... நோ... இளஞ்செழியன்! வாட் ஐயாம் ஸேயிங் ஈஸ் கரெக்ட்... உங்களுக்கு ஒண்ணுமில்லை..."

"டாக்டர்! நான் எடுத்தது பித்த வாந்தி இல்லை, ரத்த வாந்தி. மிஸ்டர் லிவர் 'கவலைக்கிடம்'ன்னு ஸ்கேன் ரிப்போர்ட் சத்தியம் பண்ணிச் சொல்லியிருக்குமே...?"

"கொஞ்சம் ப்ராப்ளம் இருக்கு. குணப்படுத்திடலாம். பயப்படற அளவுக்கு இல்லை...! என்ன சிரிக்கிறீங்க இளஞ்செழியன்?"

"மறுபடியும் பொய்"

....

திங்கட்கிழமை காலை பதினோரு

மணி.

ஹன்ஸா ஹாஸ்பிடலின் அக்கவுண்ட் செக்ஷன். கம்ப்யூட்டரிலிருந்து பிரிண்ட் அவுட் எடுத்த தாள்களை ஃபைலில் கோத்துக் கொண்டிருந்த அர்ச்சனா, பில் இன்வாய்ஸ்களில் மூழ்கியிருந்த வைகையைத் தொட்டாள்.

"வைகை..! வாணி நர்ஸிங் ஹோமுக்கு போன் பண்ணியா? இளஞ்செழியன் எப்படியிருக்கார்...?"

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் பேசினேன். இளஞ்செழியன் கொஞ்சம் ரெக்கவர் ஆயிருக்கார். ரத்தத்துல ஹீமோக்ளோபினோட அளவு ஒரு பாயிண்ட் ஏறியிருக்கு."



"நம்ம ஹாஸ்பிடலுக்கு அவரைக் கொண்டு வர்றதைப் பத்தி யோசிச்சியா...? சீஃப் டாக்டர் இந்நேரம் ரூம்ல இருப்பார். போய் பேசிப்பாரேன்..."

"அவர் என்ன சொல்லுவாரோன்னு பயமாயிருக்கு"

"இதுல பயப்பட என்ன இருக்கு...?"

"இளஞ்செழியனுக்கும் உனக்கும் என்ன உறவுன்னு கேட்டா, நான் என்ன பதிலைச் சொல்றது...?"

"உண்மையைச் சொல்லு..." அர்ச்சனா பேசிக் கொண்டிருக்கும்போதே - அக்கவுண்ட் செக்ஷனின் கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு ஆதித்யா உள்ளே வர, வைகையும் அர்ச்சனாவும் எழுந்து நின்றார்கள்.

"குட்மார்னிங் ஸார்..."

ஆதித்யா புன்னகை செய்தான். "மிஸ் அர்ச்சனா...! உங்களுக்கு மட்டும்தான் குட்மார்னிங்... வைகைக்குக் கிடையாது"

குழப்ப முகத்தோடு வைகை ஆதித்யாவை ஏறிட்டாள்.

"ஏன் ஸார்?"

"என்னோட கல்யாண நிச்சயதார்த்த ஃபங்க்ஷனுக்கு வரச்சொல்லி அப்பா உங்களைக் கூப்பிட்டாரா... இல்லையா...?"

"கூப்பிட்டார்..."

"ஏன் வரலை?"

"அது... வந்து..."

"வேற ஏதாவது பொய் சொல்லிடாதீங்க வைகை. நேத்து பூராவும் நீங்க வாணி நர்ஸிங் ஹோமில் இருந்தீங்க. சரியா...?"

"ஸ.. ஸார்..."

ஆதித்யா புன்னகை செய்தான். "எனக்கு வேண்டிய டாக்டர் ஒருத்தர் அந்த ஹாஸ்பிடல்ல உங்களைப் பார்த்ததாக, நிச்சயதார்த்த ஃபங்க்ஷனில் சொன்னார். அங்கே யாருக்கு என்ன உடம்பு...?"

'அது... வந்து..."

அர்ச்சனா குறுக்கிட்டாள். "நான் சொல்றேன் ஸார்." என்று ஆரம்பித்தவள், ஒரு இரண்டு நிமிட நேரத்தைச் செலவழித்து, இளஞ்செழியனைப் பற்றிச் சொன்னதும் ஆதித்யாவின் நெற்றியில் வியப்பு வரிகள் ஜனித்தன.

"மை குட்னஸ்! என்ன வைகை நீங்க...? இளஞ்செழியன் 'ப்ளட் வாமிட்' பண்ணியிருக்கார். நம்ம ஹாஸ்பிடலுக்கு உடனடியாய்க் கொண்டு வந்து அட்மிட் பண்ணியிருக்க வேண்டாமோ...?"

"ரெண்டு நாள் இருக்கட்டும்ன்னு அந்த டாக்டர்தான் சொன்னார்..."

"நோ... நோ...! லிவர் டிஸ்ஆர்டர்களைச் சரி பண்ண, இங்கே ஒரு டாக்டர் பட்டாளமே இருக்கும்போது, அங்கே எதுக்காக ட்ரீட்மெண்ட் எடுக்கணும்...? அங்கே டாக்டர் யாரு....?"

வைகை பதில் சொல்ல வாயைத் திறந்த விநாடி, அவளுடைய செல்போன் அழைத்தது.

"மொதல்ல அதை அட்டெண்ட் பண்ணுங்க... வைகை"

செல்போனை எடுத்து காதுக்குப் பொத்தினாள். மறுமுனையில் ஒரு பெண் குரல் கேட்டது. குரலில் பதற்றம்.

"மிஸ் வைகை...?"

'ஸ்பீக்கிங்...!"

"வாணி நர்ஸிங் ஹோமிலிருந்து பேசறோம். நீங்க உடனடியா நர்ஸிங் ஹோமுக்குப் புறப்பட்டு வர முடியுமா...? மேட்டர் கொஞ்சம் அர்ஜெண்ட்!"

....

(தொடரும்)

மார்க் போடு தலைவா!



'பாரத் உதய் யாத்ரா' கிளம்பியிருக்கிற அத்வானிஜி உங்கள் மதிப்பில் எப்படி? மார்க் போட்டு அசத்துங்கள் வாசகர்களே.

கச்சிதமா கணிச்சு, அனுப்பி வையுங்க. முழு முகவரி முக்கியம். சிறந்த முறையில் மதிப்பெண் போட்டவங்களுக்கு டிக்கெட் தரப்படும். நான்கு பேர் அடங்கிய

அத்வானி ஜி..!

குடும்பத்துக்கு சினிமா டிக்கெட். உறையின் மீது 'மாண்புமிகு டாப்டென் - 9 என்று குறிப்பிடவும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி: 4.4.2004

	தகுதி	முழு மதிப்பெண்	அத்வானி பெற்றது
1.	தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்)	10	
2.	முடிவெடுக்கும் திறன்	10	
3.	கறைபடாத கரங்கள்	10	
4.	அரசியல் சாணக்கியம்	10	
5.	மனித நேயம்	10	
6.	தொண்டர்களோடு தோழமை	10	
7.	மேடைப் பேச்சு	10	
8.	மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு	10	
9.	தனிமனித ஒழுக்கம்	10	
10.	நிர்வாகத் திறமை	10	
	மொத்தம்	100	

மாண்புமிகு டாப் டென் - 9

பெயர் ....

முகவரி ....

....

....



ஆஹா! ரூ.50,000 பரிசு!

கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி

இது தேர்தல் குவிஸ் 4வது போட்டி. பரிசுத் தொகை ரூ. 50,000/- ஜமாய்ங்க!

● எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதும் வாசகருக்கு ரூ.50,000/- பரிசு! ● நிறையப்பேர் சரியான விடைகளை எழுதியிருந்தால், பரிசு குலுக்கல் முறையில்தான். ● ஆறுதல் பரிசு 50 பேருக்குத் தலா ரூ. 100/- ● முதல் பரிசுத் தொகை வருமான வரி விதிமுறைகளுக்கு உட்பட்டது. ● உறையின் மேல் 'ஆஹா! ரூ.50,000' என்று கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். ● போட்டி தொடர்பாக விசாரணைக்கு அனுமதியில்லை. ● ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. ● முடிவு தேதி ஐந்தாவது கூப்பனுடன் குறிப்பிடப்படும்.

தேர்தல் குவிஸ் போட்டி கூப்பன் - 4

1. 'பாரத் உதய் யாத்ரா' துவக்க விழாவில் கலந்து கொண்ட இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் ....
2. காங்கிரஸின் சார்பில் சண்டிகரில் வேட்பாளராக மனுதாக்கல் செய்துள்ள முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர் ....
3. தேர்தல் அறிவிக்கப்பட்டபின் பாரதப் பிரதமரை வந்து சந்தித்துச் சென்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ....
4. ராவல்பிண்டியில் இந்தியா - பாக். ஒரு நாள் கிரிக்கெட் போட்டியைக் காண வந்த பாக். வி.ஐ.பி. ....
5. திரிணாமுல் காங்கிரஸில் சேர்ந்த பாராளுமன்ற முன்னாள் சபாநாயகர் ....
6. புதுச்சேரி சட்டசபையில் .... கட்சி எம்.எல்.ஏக்கள் கண்களைக் கட்டிக் கொண்டு வந்தனர்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

கையொப்பம் : ....

ளத் தெளியக் கூறியது.
திருச்சி - 6, எஸ். மீனா.

✉ மக்களவைத் தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி விட்ட நிலையில் 'ஸ்பெஷல் புருடா ஆல்பம்' ரசிக்கும்படியாக இருந்தது.
மதுரை -12, கே.எஸ். வெங்கடேஷ்.



தொண்டர்கள் ஒளிர்வார்களா?

✉ 'ஒற்றுமை ஒளிரட்டும்' தலையங்கம் படித்தேன். உயர்நீதிமன்ற ஆணைகளையோ, தேர்தல் கமிஷனின் உத்தரவுகளையோ நமது அரசியல் கட்சிகள் ஏற்று நடந்துகொண்டால், அது உலக அதிசயங்களில் ஒன்றாகிவிடும். 'யாரும் கண்காணிக்காத போதும் விதிமுறைகளை மீறாமல் நடந்து கொள்வது என்பதுதான், பொதுவாழ்வில் ஈடுபடுவோருக்கு முதல் தகுதியாக இருக்க வேண்டும்' என்ற தலையங்க வரிகளைப் படித்ததும் ராஜாஜியும், காமராஜரும்தான் நினைவுக்கு வந்தார்கள். என்ன செய்வது! அத்தகைய துர்பாக்கிய நிலையில்தான் இன்று நாம் இருக்கிறோம்.
மொரட்டுப்பாளையம், சௌந்தர்யா விசாலினி.

✉ மினி கல்கி 'டீனேஜ் சவால்கள்' மிகவும் அருமை. அந்தப் பருவத்தில் ஏற்படும் பிரச்னைகள், அதற்குத் தீர்வுகள் என்று அசத்தி விட்டீர்கள்! எங்கள் வீட்டுப் பெண்ணுக்கும் இந்த மாதிரி பருத்தொல்லை, இளநரை எல்லாம் உண்டு. அவளைவிட எனக்குத்தான் மனத்திற்குக் கஷ்டமாக இருக்கும். இதைப் படித்த பிறகு, இதெல்லாம் சாதாரணம்தான் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.
மதுரை - 20, ஆர். பிருந்தா.

✉ 110 இடங்களுக்கு மேல் காங்க்கு கிடைக்க வாய்ப்பே இல்லை என பல கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ள நிலையில், அதன் வெற்றி வாய்ப்புகள் அதிகம் என தலையங்கத்தில் நீங்கள் குறிப்பிட்டிருப்பது ஆச்சரியம்!
ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✉ ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் செல்ஃபோன் வைத்திராத தலைவர்களில் ஒருவர் என்ற விவரத்தைப் படித்ததும், பெருந்தலைவர் காமராஜர் ஒருமுறை சொன்னது நினைவுக்கு வந்தது. காமராஜர் கைக் கடிகாரம் கட்டும் பழக்கம் இல்லாதவர். ஒருவர் அதைப் பற்றிக் கேட்ட பொழுது 'அது எதுக்கு? நேரம் கேட்டா யாராச்சும் சொல்லிட்டுப் போறாங்க' என்றாராம்!
சென்னை - 78, கே.எஸ். நாராயணன்.

✉ "'ஐயோ-டேட்டா' பகுதி பிரமாதம்! அப்பாவித் தொண்டனின் இன்றையச் சூழ்நிலை அவலத்தை, 'ஐயோ - டேட்டா' அப்படியே பிரதிபலித்தது! அது சரி! கட்சித் தொண்டர்கள் எப்போது ஒளிரப் போகிறார்கள்?"
திருச்சி - 21,
அ. சுஹைல் ரஹ்மான்.


✉ ஜனநாயகம் ஜெயிக்க வேண்டும்" என்ற இரா. செழியனின் பேட்டி கண்டேன். மிகச் சிறந்த பாராளுமன்றவாதியான அவரது கருத்துகள் சிந்தனைக்கும், செயல்பாட்டுக்கும் உரியது. ஆங்கிலத்தில் ஒரு சொலவடை உண்டு. 'மோசமான ஆட்சியாளர்கள் நல்லவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் வாக்களிக்காத காரணத்தால்.'
திருவண்ணாதபுரம்,
வி. கல்யாணி.

✉ 'சிலிர்த்தது, கலிங்கப் பட்டி' - கட்டுரை, வைகோவின் சிறப்பையும், தன் சொந்த ஊரில் அவர் செய்யும் பணிகளையும் தென்



"Baidyanath's Services are very useful and I wish to congratulate them."

- Hon'ble Prime Minister
Sri Atal Behari Vajpayee



பைத்யநாத் பஞ்ச்ஃபூல் கூல் தைலம்

* எல்லா வயதினருக்கும் ஏற்றது - 7 முதல் 77 வரை
* கவன ஈர்ப்பை ஊக்குவிக்கிறது
* கிரஹிக்கும் சக்தியை அதிகரிக்கிறது
* நினைவு ஆற்றல் அதிகரிக்கச் செய்கிறது
* அறிவையும், ஆற்றலையும் விழிப்புடனும், கூர்மையுடனும் இருக்கச் செய்கிறது.

FREE HOME DELIVERY IN CHENNAI

மேலும் விவரங்களுக்கும், இலவச
வண்ண துண்டுப் பிரசுரங்களுக்கும் தொடர்பு கொள்க:

Shree Baidyanath Ayurved Bhawan (Pvt.) Ltd., Patna

137, Choolai High Road, I Floor, Chennai - 600 112.

☎ : 26610800/26615600. E.mail: maan@eth.net



மிகவும் விலை உயர்ந்த அந்தக் கார், மிகக் குறைவான ஒலியோடு வீட்டில் அதற்குரிய இடத்தில் வந்து நின்றது. ஆனால் அந்தக் குறைவான ஒலியே கூட பிரதாப்பை வாசலுக்கு அழைத்து வரப் போதுமானதாக இருந்தது. கதவைத் திறந்தான். அப்பாதான்.

ஆனால் அப்பாவைத் தொடர்ந்து, அவர் தொழிற்சாலையைச் சேர்ந்தவராகத் தோற்ற மளித்த இன்னொருவரும் காரிலிருந்து இறங்குவதைப் பார்த்ததும், அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவருடன் பேசி விட்டு மீண்டும் அப்பா காரிலேறிச் சென்று விட்டால்? இன்றும் அப்பாவிடம் பேசாம லேயே படுத்துக் கொள்ள நேரிடுமோ?

இன்று பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. நண்பர் இருந்தாலும் பரவாயில்லை என்று, சிலவற்றையாவது சொல்லி விட வேண்டும்.

"அப்பா, நான் இந்தத் தடவை சயன்ஸிலே சென்ட்டம், சகுந்தலா மிஸ் 'குட்'னாங்க" என்றான் அவர் நுழைந்தவுட னேயே.

"சரி, நான் இந்த அங்கிளோட பிஸி னெஸ் பேசணும். அப்புறமா பேசறேன்."

மேலும் பிரதாப்புக்கு வாய்ப்புத் தரா மல் "சாயா" என்று குரல் கொடுத்தார் அப்பா. வேகமாக வந்த பணிப்பெண், அழைப்பைப் புரிந்து கொண்டு, "என்ன கொண்டு வரட்டும்? காப்பியா? பழ ரசமா?"

அருண் சரண்யா

மேகங்களும் நண்பர்களும்

என்றாள்.

"இந்தக் குளிருக்கு பழரசம் வேண்டாம்" என்று வந்தவர் கூற, பிரதாப் சட்டென்று "அங்கிள், காப்பி கூடப் பழரசம்தான் தெரியுமா? காப்பிக் கொட்டைன்றது நிஜத்தில் பழம்தான்" என்றான் பிரதாப்.

'ஆரம்பித்து விட்டான்' அலுத்துக் கொண்டார் அப்பா. இது கூடப் பரவா யில்லை. ஒருமுறை பார்ட்டி ஒன்றில் மரியாதை நிமித்தம் ரம் அருந்தும் போது, பாக்டீரியாக்களின் கழிவுதான் மது என்று கூறி, அனைவரையும் நெளிய வைத்து விட்டான் இந்தப் பத்து வயது முட்டாள். மனத்தில் பெரிய மேதை என்று நினைவு. தலையணைப் புத்தகங்களைப் படிக்க வேண்டியது, இதுபோல அசந்தர்ப்பமாகப் பேச வேண்டியது!

"உங்க மகன் ரொம்ப புத்திசாலிதான்" என்றார் அப்பாவின் சினேகிதர்.

"இதை புத்திசாலித்தனம் என்று நீங்கள் சொன்னால் நான் வேறென்ன செய்ய?" என்று அப்பா வெடிச்சிரிப்போடு கூற, பிரதாப்பின் முகம் சிறுத்தது.

நிலைமையைச் சரியாக்கும் விதமாக "பையன் எந்த க்ளாஸ்?" என்று அந்த சினேகிதர் பேச்சின் பாதையை மாற்ற, "அஞ்சாவது" என்றார் அப்பா. மிகவும் துக்கத்துடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்து உள்ளே சென்றான், ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பிரதாப்.

உள்ளே இருளடைந்த ஓர் அறையின் கட்டிலில் அவன் அம்மா சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். அவள் கைகளை மெல்ல வருடினான்.

சிறிது நேரம் கடந்த பிறகு அவன் கண்களைத் திறந்தாள். பிரதாப்பை உற்றுப் பார்த்தாள். மகனைப் புரிந்து கொண்டதற்கான எந்த அடையாளமும் அதில் தெரியவில்லை. பிறகு அவள் பார்வை எங்கோ அலைந்தது. பின் எதிர்ப்புறமாக ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

சாயா அந்த அறைக்குள் நுழைந்தாள். "இங்க என்ன செய்யறே? உங்கம்மாவுக்குத்தான் புத்தி கெட்டுப் போய் ரொம்ப வருஷமாகுதே, உன்னை என்ன மகனேன்னு கொஞ்சவா போறாங்க? சரி, சரி, நான் இவங்களுக்கு உடம்பு துடைச்சு விடணும். கொஞ்சம் வெளிய போ" என்றாள்.

முதலில் அறையிலிருந்தும், பிறகு



வீட்டிலிருந்தும் வெளியே வந்தான். எங்கே போவதென்று தெரியவில்லை. பல அறைகள் கொண்ட பிரம்மாண்ட மாளிகை என்றாலும், அதன் எந்தப் பகுதியும் அவனைப் பாசத்துடன் அழைத்ததில்லை. சினேகிதர்கள் யாரும் அமையவும் இல்லை. "அவன் பெரிய கொம்பன்டா" என்று ஒதுக்கி வைக்கிறார்கள். தோன்றுவதைச் சொல்கிறான், அவ்வளவுதான். அப்படித் தோன்றுவது அதிகப்படியாக இருந்தால் அதற்கு அவன் என்ன செய்வான்?

நேற்றுக்கூட அப்படித்தான், பள்ளியிலிருந்து நடந்து வந்து கொண்டிருந்தபோது 'மணி, அதோடா போன மாசம் நீ தொலைத்த டிபன் காரியர்' என்றான் வானத்தைக் காட்டியபடி. அப்படித்தான் ஒரு மேகம் காட்சியளித்தது. அதேபோல மூன்றடுக்கு. மேலே செருகப்படும் சற்றே வளைந்த ஸ்பூன் கூடத் தெரிந்தது. யாரும் ரசிக்கக் காணோம். ஒருவருக்கொருவர் புன்னகைத்துக் கொண்டு, எட்டி நடை போட்டுச் சென்றனர். அந்தப் புன்னகைக்குப் பொருள் 'மறை கழன்றவன்'.

இன்று வானில் டிபன் காரியர் இருக்குமா? நிமிர்ந்து பார்த்தான். காணோம். வேறு ஏதோ கலங்கலாக. உற்றுப் பார்த்தான். ஒரு பெண்மணியின் உருவம். அட, அம்மா. இப்போது இருப்பதைவிட அழகாக இருந்தாள். முக்கியமாக, நின்று கொண்டிருந்தாள். யாரும் அவளைத் தாங்கிப் பிடித்திருக்கவில்லை. இப்போது அவள் கைகள் கொஞ்சம் கொஞ்சமாக மாறின. தொங்கப் போட்டிருந்த கரங்கள் எதையோ அல்லது யாரையோ சுட்டிக் காட்டுவது போல் எழுந்தன. யாரைச் சுட்டிக் காட்டுகிறாள்? அந்த திசையில் பார்த்தான். அங்கே சின்னதாக ஒரு புள்ளி. அது பந்து போல் மாறியது. அந்தப் பந்தின் ஒரு பக்கத்தில் சின்னக் குழி. அவனுக்குக் கூட சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழும். அம்மா மட்டும் முன்னொரு முறை அதைப் பாராட்டியிருக்கிறாள்.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அம்மா மேகம், பந்து மேகத்தைத் தொட்டது. அவனுக்கு சிலிர்ப்பாக இருந்தது.

"தம்பி உள்ள வா. பூசைக்கு நேரமாச்சு" என்று உள்ளிருந்து குரல் கேட்டது. ஓ. வெள்ளிக்கிழமை சடங்கு. அம்மா நன்றாக இருந்தவரை செய்து வந்தாள். ஆனால் அப்பா பூஜையெல்லாம் செய்வதில்லை. டிரைவர்தான் செய்வான். ஒவ்வொரு

பூஜைக்கும் அப்பா அவனுக்கு ஐம்பது ரூபாய் தருவார்.

இம்முறை வீட்டுக்குள் நுழைந்தபோது கும்மென்று மாம்பழ வாசனை அடித்தது. அப்பாதான் இன்று ஒரு கூடை நிறைய மாம்பழம் வாங்கி வந்திருந்தார். அடுத்த நாள் எங்கோ பிக்னிக் போகப் போகிறார் என்றும், அங்கு எடுத்துச் செல்ல ஒரு தனி மாம்பழக்கூடை தயார் என்பதையும் பிரதாப் அறிந்திருந்தான். "அந்த தளுக்குக்காரி மாலினி கூடத்தான் ஐயா பிக்னிக் போகப் போறாரு" என்று சாயாவிடம் நேற்று டிரைவர் பிரதாப்பின் காதுபடப் பேசிக் கொண்டிருந்தான்.

"இலேசாகப் பசிப்பது போல் இருந்தது. "சாப்பிட்டியா?" என்ற கேள்வியை அப்பா வாரத்துக்கு ஒருநாள்தான் சராசரியாகக் கேட்பார். அம்மாவால் அதுவும் இயலாது. சாயாவைப் பொறுத்தவரை கடமைக்கு ஒருமுறை அழைப்பாள். பிரதாப் வேண்டாமென்று சொன்னால் நல்லதாப் போச்சு என்பதுபோல், மீதமுள்ள உணவை கேரியரில் அடைத்துக் கொண்டு தன் வீட்டுக்குச் சென்று விடுவாள்.

கற்பூரத்தை ஒற்றிக் கொண்ட பிறகு மறுபடியும் பிரதாப் வாசல் பக்கமாக வந்தான். மீண்டும் ஆவலுடன் மேகத்தைப் பார்த்தான். அங்கே இந்தமுறை சாயா! என்ன, மேலும் குள்ளமும் மேலும் பருமனுமாகக் காட்சி அளித்தாள். கொஞ்சம் கொஞ்சமாக அவள் உடல் பிய்ந்து போய்க் கொண்டிருந்தது. கடைசியில் ஒரு சின்னப் புள்ளியாக மாறி மறைந்து போனாள்.

தன்னையுமறியாமல் கை கொட்டிச் சிரித்த அவனது முகத்தில், அடுத்தகணம் வெட்க உணர்வு. சற்றுத் தள்ளி ஒரு பெண் இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சைகையால் அவனை அழைத்தாள். வீட்டு வாசலைத் தாண்டி அவளருகில் போனான். பத்தாம் க்ளாஸ் படிக்கக் கூடிய வயசு என்பது தெரிந்தது. ஆனால் பள்ளிக் கூடத்தை எட்டிப் பார்த்திருக்க மாட்டாள் என்றும் பட்டது.

"நானும் உன்னை மாதிரி, மேகந்தான் பாத்துக்கிட்டிருந்தேன்" என்றாள் அருகில் சென்றவுடன். பிறகு "பணமில்லேன்னா தான் சோகமுன்னு நினைச்சேன். இப்பதான் தெரியுது" என்றாள்.

என்ன தெரிந்தது என்று அவன் கேட்கவில்லை. அவளை அதுவரை அவன் பார்த்ததில்லை. அவள் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாள். பெயர் மகிராணி. அப்பா, அம்மா, இவள் என்று ஆளுக்கு ஒரு ஊராக வேலை செய்கிறார்கள்.

"ஏன் சேந்து இருக்கல்ல?" என்று கேட்டான்.

"மூணு பேத்துகிட்ட அப்பன் ரொம்பக் கடன் வாங்கிருச்சு. வேற எப்படி அடைக்க? இனிமே தனித்தனியாத்தான் இருக்கணும். மொதல்ல ஒருத்தன் வீட்ல வேலைக்குச் சேத்தாங்க. இப்ப அடுத்த முதலாளி, இங்க இருக்காரு. இனிமே இங்கதான் இருப்பேன்" என்றாள்.

கைகளை விரித்து விரித்து அவள் பேசிய போது, அவளது உள்ளங்கை காய்த்துப் போயிருந்தது தெரிந்தது. களைப்பு வேறு.

"ரொம்ப வேலை வாங்குவாரா உங்க முதலாளி?" என்று கேட்டான்.

"இந்த ஆளு பரவால்ல. நெறய வேலை வாங்கிக்குவானே தவிர வேற எதுவும் பிரச்னை இல்ல" என்று கூறினாள். கூறி விட்டு மேகத்தைப் பார்த்தாள். பின் "தம்பி, நாம தெனசரி பேசிக்குவமா?" என்றாள். பிறகு அவன் பதிலை எதிர்பாராமல் "ஐயோ வீட்ல வேலை இருக்குது" என்றபடி ஓடினாள்.

பிரதாப்பும் வேகமாகத்தான் வீட்டுக்குப் போனான். ஃப்ரிஜ்ஜிலிருந்து இரண்டு ஆப்பிள்களை எடுத்துத் தன் ஸ்கூல் பையில் வைத்துக் கொண்டான். மேகங்களைப் பார்த்தபோது ஏற்பட்டிருந்த சந்தோஷம் இப்போது அதிகமாயிருந்தது. ○



• 'அந்நியன்' விக்ரம்

பூஜையிலேயே பிரம்மாண்டமாய் மிரட்டுவது தான் ஷங்கரின் வழக்கம். ஆச்சர்யம்! 'அந்நியன்' பட பூஜையை வெகு எளிமையாக நடத்தி கோலிவுட்டை அதிரவைத்திருக்கிறார். இந்த முறை படத்தில் ஏ.ஆர். ரகுமான் இடத்தை ஹாரிஸ் ஜெயராஜ் பிடித்துக் கொண்டுவிட, விக்ரம்தான் அந்த அந்நியன்! "சேது நடிக்கிறப்போ படம் ஜெயிக்குமான்ற பயம், காசியிலே நடிக்கும்போது காலை வாரி விட்டுடுமோன்ற பதற்றம். இப்போ அந்நியன்லே பயம், பதற்றம் இரண்டுமே இருக்கு. இது, வெற்றி பற்றிய பயம் இல்லே. ஷங்கர் இயக்கத்துலே நடிக்கிறோமே என்ற பயம்'' என்று கிலோ கணக்கில் ஷங்கர் தலையில் ஐஸ் வைக்கிறார் விக்ரம்!

ஷங்கரை நெருங்கி "அந்நியன் எப்படிப்பட்ட ஆள்?" என்று கேட்டால், ''சமூகத்திலிருந்து விலகி நிற்கிறவன், ஆனால் சமூகத்துக்குத் தேவைப்படுகிறவன்'' என்று மட்டும் சொல்லி விட்டு, நைசாக விலகிப் போய் விட்டார்.

நடிக்கிற ஆசையோடு சென்னைக்கு வந்து இயக்குனரான பாரதிராஜா, மணிரத்னம் இயக்கத்தில் வில்லனாக நடிப்பதைப் பற்றி ரொம்பவே சிலாகிக்கிறார். படத்தில் மாதவன், சூர்யா, சித்தார்த் என்று மூன்று ஹீரோக்கள் இருந்தாலும், சூர்யாவுக்கும் பாரதிராஜாவுக்கும்தான் நடிப்பில் போட்டி!

நினைப்பதை அந்தக் கணமே செய்து முடித்து விட வேண்டும் என்ற கேர்ஃப்ரீ மாதவனால், மற்ற இரண்டு நண்பர்களும் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். இந்த நண்பர் கூட்டணிக்கும் அரசியல்வாதி வில்லன் பாரதிராஜாவுக்கும் நடக்கும் மோதல், காய் நகர்த்தல் என்று ஆய்த எழுத்து படு கமர்ஷியல் படம் என்கிறார்கள் யூனிட்டில்.

இந்த முறை மெசேஜ் நஹியா?



• 'எதிரி' மாதவன் • சதா



• 'ஜி' • சீதா • கஜிதா

• 'அட்டகாசம்' • அஜீத் • பூஜா



புயல் போராட்டம்!



• 'ஆய்த எழுத்து'
த்ரிஷா - சித்தார்த்

சீதாவும் சுஜிதாவும் அம்மாவும் மகளுமாக அழுது கொண்டிருந்தார்கள் 'ஜதி' படத்துக்காக. அழுகைக்குக் காரணம் மகளின் காதலை மறுத்து வந்த அம்மா, திடீரென்று அங்கீகரித்தது.

"இசைக்கு எப்படி ஜதி முக்கியமோ, அப்படித்தான் வாழ்க்கைக்கு காதல்! காதல் எப்போ, எங்கே, எப்படி, எதுக்காக வந்ததுன்னு கண்டுபிடிக்கிறது கஷ்டம்! காதல் வயப்பட்டிருக்கிற ஒரு பெண்ணுக்கு, அவ காதலை அடையாளம் காட்டும் அம்மாவின் கதை" என்று மூச்சு முட்டினார் படத்தின் இயக்குனர் விஜயராகவா! படத்திற்கு ஜதி என்று தலைப்பு சூட்டக் காரணம், புதிய இசையமைப்பாளர், கலைவாணியின் சூப்பர் கம்போசிங்தான் என்கிறார் இயக்குனர்.

வாலி படத்திற்குப் பிறகு மீண்டும் அஜீத் இரட்டை வேடத்தில் 'அட்டகாசம்' செய்து கொண்டிருக்கிறார். ஓர் ஆள் டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர். மற்றொருவர் தாதா. ஒருவர் காமெடியில் கலக்க, மற்றவர் அடிதடியில் 'அமர்க்களப்படுத்துகிறார். ஒருவர் 'காதல் மன்னன்' என்றால், இன்னொருவர், வன்முறைக்கு ஜே! ஜே! சொல்லுகிற பார்ட்டி!

என்னய்யா இது, சரண் இயக்கிய படங்களின் பெயர்களைப் பட்டியல் போடுகிறீர்கள் என்கிறீர்களா? நீண்ட இடைவேளைக்குப் பிறகு அஜீத், சரண் இயக்கத்தில் அல்லவா நடிக்கிறார்! கூடவே பரத்வாஜ், வைரமுத்து கூட்டணியும் தொடர்கிறது.

"**வே**லை இல்லாத பட்டதாரி, சந்தர்ப்பச் சூழ்நிலையால் ரவுடியாக மாறி விடுகிறான். ரவுடி என்று தெரிந்தும் ஒரு பெண் காதலிக்க, கத்தியைக் கீழே போட்டு விட்டு அவளைக் கைபிடிக்கலாம் என்று முனையும் போது, சமூகம், போலீஸ் என்று பெரிய முட்டுக் கட்டைகள். பழைய கதை போலத் தெரிந்தாலும் இதில் போராட்டம் ரொம்பப் புதுசு" என்கிறார் 'எதிரி' படத்துக்காக மாதவனை இயக்கும் கே.எஸ். ரவிகுமார். கதாநாயகனாக ஒரு காலத்தில் கலக்கிய ஏ.ஆர். ரகுமானின் சகலை, ரகுமான் இந்தப் படத்தில் வில்லன்!

- ரவுண்ட்ஸ் பாய்



தேர்தல் தேரோட்டம்

கல்லுமுள்ளு குத்துகின்ற
காததூர சாலையெல்லாம்
கப்பிபோட்ட தார்ரோடாய்
கால்நாளில மாறிடுங்க!

காத்து கூட வாராத
கல்லடைஞ்ச பைப்புலதான்
காலையில கொஞ்சநேரம்
தண்ணிகூட வருமுங்க!

கோமணத்த மறச்சுக்க
கோடிவேட்டி கெடைக்குங்க;
கொமரிப்பொண்ணு கெளவியெல்லாம்
சேலகட்டித் தளுக்குங்க!

சோறுகூட கெடைக்குங்க
சொகுசாக ஒரோர்நாளு;
கூறிருந்தா பிரியாணி
கூடப்போட்டுத் தருவாங்க!

தேருபோல காருவந்து
தெனமுந்தான் ஊர்வலந்தான்;
தெரியாத தலைவரெல்லாம்
தெனந்தோறும் தரிசனங்க!

மஞ்சாபச்சை சேப்புவெள்ளை
மல்லாக்கொட்டை கலரெல்லாம்
மண்குடிசை சுவர்மேல
மளமளன்னு பளபளக்கும்!

கலர்கலரா கொடியெல்லாம்
காத்தாடும் தோரணம்தான்;
வால்நோட்டீஸ் காயிதம்தான்
வாண்டுகளின் கப்பலுங்க!


கேட்டவரம் எல்லாமே
கெடச்சுடும்னு குறிசொல்லி
நோட்டுகத்தை யோடிங்க
நூறு பேர்தான் வருவாங்க!

ஒண்ணுமில்லா ஊருக்குள்ளே
ஒருமாசம் தேரோட்டம்;
கண்ணுக்குள்ள காணலுங்க
காதுலதான் பூச்சூடு.

முகூர்த்தம்தான் வந்துட்டா
முன்வெரல்ல மைபூசி
முன்பார்த்த புதுமுகமெல்லாம்
முழுசாக மறஞ்சுடுங்க.

ஆட்டமெல்லாம் முடிஞ்சதுமே
அடங்கிப்போகும் ஊருங்க;
அஞ்சுவருசம் கழிச்சாத்தான்
அடுத்த எலெக்சன் வருமுங்க!

- கே.பி. பத்மநாபன்



உ

ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.

ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா, லட்சார்ச்சனை மற்றும் திருக்கல்யாண உற்சவம்

அன்புடையீர்,

நிகழும் ஸுபானு வருஷம் பங்குனி மாதம் 25-ஆம் தேதி (07.04.2004) புதன்கிழமை த்விதியை திதியும் ஸ்வாதி நக்ஷத்திரமும் கூடிய நன்னாளில் **ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானுக்கும் மற்ற பரிவார தேவதைகளுக்கும் 7-ஆம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா** குருவருள், இறையருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது.

07.04.2004 புதன் கிழமை - காலை 7.30 மணிக்கு புண்யாஹவசனம், அனுக்ஞை, மஹா ஸங்கல்பம், 8.00 மணிக்கு ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், ஸ்தபன பூஜை, 09.00 மணிக்கு நவக்ரஹ ஹோமம், 10.00 மணிக்கு ஜபம் - பாராயணம், பூஜை, ஹோமம், பகல் 11.00 மணிக்கு பூர்ணாஹுதி, பகல் 12.00 மணிக்கு மஹாபிஷேகம் - அர்ச்சனை பிற்பகல் 01.00 மணிக்கு மஹாதீபாராதனை.

மேலும் தொடர்ந்து நடைபெற்று வரும் கோடி அர்ச்சனையின் ஒரு அங்கமாக 07.04.2004 புதன் கிழமை மாலை 4 மணிக்குத் துவங்கி 09.04.2004 வெள்ளிக் கிழமை பிற்பகல் முடிய, **அருள்மிகு அன்னை ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரிக்கு லட்சார்ச்சனையும், 09.04.2004 வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.30 மணி முதல் மாலை 06.00 மணி முடிய திருக்கல்யாண உற்சவமும்** நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இறையன்பர்கள் அனைவரும் வழக்கம் போல் ஆர்வத்துடன் பங்குகொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

என்றும் இறைபணியில்


Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்,
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில், கருவேலி.

**ஸ்ரீ ஸற்குணேச்வரர்
கைங்கர்ய ஸபா
மற்றும் கிராமவாசிகள்**

08.04.2004 வியாழன் ஸங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு இரவு 07.00 மணி முதல் 8.30 முடிய ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

	நிகழ்ச்சி	கட்டணம்	பெறப்படும் பயன்
	ஸ்வாமி அம்மனுக்கு திருக்கல்யாண உற்சவம்	ரூ. 2,500/-	திருமணத் தடைகள் நீங்கும், பிரிந்த தம்பதிகள் இணைவர்
	ஸ்ரீ ருத்ரமும், அபிஷேகம்	ரூ. 101/-	இன்னல் நீங்க, செல்வம் பெருக
	லட்சார்ச்சனை	ரூ. 100/-	வாழ்வில் இடர் நீங்கி நலம் பெருக
	ஸ்ரீ கணபதி ஹோமம்	ரூ. 51/-	தடைகள் நீங்கும், எடுத்த காரியத்தில் வெற்றி
	நவக்ரஹ ஹோமம்	ரூ. 51/-	கிரஹ தோஷங்கள் நீங்க
	ஸங்கடஹர சதுர்த்தி பூஜை	ரூ. 51/-	காரிய சித்தி

1. இங்கு கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான தொகையை "ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா" (Regd). 32/18, டபீர் புதுத் தெரு, கும்பகோணம் - 612 001 (Tel:0435/2423297) என்ற முகவரிக்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக்காசோலை (D.D.) மூலமோ அனுப்பக் கோருகிறோம்.
2. ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சிகளில் பங்குபெற விரும்பும் அன்பர்கள் ரூ.300/- கட்டணக் காணிக்கை அனுப்பினால் எல்லா நிகழ்ச்சிகளிலும் நாம நட்சத்திரங்களுடன் ஸங்கல்பம் செய்து கொள்ளலாம்.
3. திருக்கோயிலில் தினசரி அன்னதானம் நடைபெறுகிறது. இதில் பங்குபெற விழைவோர் தனியாக நன்கொடை அளிக்கலாம்.
4. ரூ. 500/- அல்லது அதற்கு மேற்பட்ட நன்கொடை காணிக்கை அளிப்பவர்களுக்கு ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ, ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருவுருவங்கள் பொறிக்கப்பட்ட, மூலமந்திரத்துடன் கூடிய, பூஜையில் வைத்து அபிமந்திரிக்கப்பட்ட வெள்ளி டாலர் பிரஸாதமாக வழங்கப்படும்.



உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கு இலங்கைத் தமிழர்களைக் காணலாம். பொருளாதார முன்னேற்றத்திற்காக வந்தவர்கள் மிகச் சிலர். அதிக பட்சம் அரசியல் நிர்பந்தத்தால் வந்தவர்கள். மனசில் ஏக்கத்துடன், நினைவுகளின் சுமையுடன் வசிப்பவர்கள். அவர்களைச் சந்திக்க நேரும் போதெல்லாம், என் மனகம் கனத்துப் போகிறது. அவர்களது ஏக்கமும் இயலாமையும் என்னையும் ஆட்கொள்கிறது.

பீனிக்ஸ்ஸின் அரிஜோனா பல்கலைக் கழகத்தில் பணி புரியும் இலங்கைத் தமிழர், டாக்டர் வேலுப்பிள்ளையைச் சந்தித்தபோது அப்படித்தான் உணர்ந்தேன். அவரை எனக்கு இதற்கு முன் பரிச்சியமில்லை. ஆனால் ஜெயலலிதாவின் சென்ற ஆட்சியில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு, உலகத் தமிழ்ப் பேரவையால் அழைக்கப்பட்டு வந்த இலங்கைத் தமிழர்களில் ஒருவர் என்பதும், மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாமல் (பேராசிரியர் கார்த்திகேசு சிவதம்பி உள்பட) வெளியேற்றப்பட்டார் என்பதையும் அறிவேன்.

இந்தியாவுக்கு வந்த சமயத்தில் அவர் ஸ்வீடனில் உப்ஸாலா பல்கலைக் கழகத்தில் வேலை பார்த்தார். இப்போது பீனிக்ஸில் இருப்பதை அறிந்து சந்தித்தேன். தஞ்சாவூர் சம்பவத்தை நினைவூட்டியபோது, சங்கடத்துடன் சிரித்தார். தாம் வெளியேற்றப்பட்டதற்கான காரணம் இன்று வரை தெரியவில்லை என்றார். எந்த அரசியல் அமைப்புடனும் தமக்கு நெருங்கிய தொடர்பு இல்லை என்றார். வெகு நேரம் நாங்கள் பேசிய பேச்சில் அரசியலே அதிகமாக இருந்ததும் தவிர்க்க முடியாத ஒன்றாகத் தோன்றிற்று. அவரது பேச்சில் இருந்த இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தைப் பற்றிய பயம், இன்றைக்கு இலங்கை அரசியல் சூழலில் மிக நியாயமான ஒன்று. இந்தியாவின் நோக்கங்களைப் பற்றின பயமும் அவருக்கு இருந்தது. எனக்கு வியப்பை அளித்தது. சந்திரிகாவுடன் இந்தியா ராணுவ ஒப்பந்தம் (புலிகளுக்கு எதிராக) ரகசியமாகச் செய்திருப்பதான சந்தேகம் அநேக தமிழர்களுக்கு இருப்பதாகச் சொன்னார். எனக்குத் தெரிந்தவரை, இந்திய பாஜக அரசுக்குக் காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான். இந்திய - அமெரிக்க உறவு ஆகிய விஷயங்களே முக்கியம் என்பதால், இலங்கை அரசியலில் ஈடுபடும் எண்ணம், (IPKF) அனுபவத்திற்குப் பிறகு) கொஞ்சமும் இருக்க முடியாது என்றேன். இந்திய அரசு இலங்கைத் தமிழர்களைக் கைகழுவி விடக் கூடாது என்ற எண்ணமும், அவர் பேச்சில் வெளிப்பட்டது. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பிறகு, மத்திய அரசு இலங்கை விஷயத்தில்

இனை

அதிக எச்சரிக்கையுடன் இருப்பதை நான் விளக்க முயன்றேன். நான் கிளம்பும் சமயத்தில், தமிழீழப் புலிகள் ஜனநாயக முறைக்கு இசைவார்கள் என்று தாம் உறுதியாக நம்புவதாகச் சொன்னார். எனக்கு உறுதி அளிப்பதுபோல் அது இருந்தது. அவரது பயங்கள் என்னைத் தொற்றிக் கொண்டன. இரவு தூக்கம் வரவில்லை.

விலிருக்கும் உடன் பிறப்புகளுக்கு வக்காலத்து பேசத்தான் இயல்பாக உத்வேகம்



அமெரிக்க டயரிக் குறிப்பு 3

இந்தியப் பண்பாடு, இந்திய நாகரிகம் என்று வாய் கிழியப் பேசுகிறோமே தவிர, இந்தியாவில் எந்த அளவுக்குப் பண்பும் நாகரிகமும், தனி நபர் வாழ்விலும், பொது வாழ்விலும் காக்கப்படுகின்றன என்று, நான் சந்திக்கும், பேசும் இந்தியர்கள் கேட்கிறார்கள், சவால் விடுவதைப் போல. தங்களுக்கு இந்தியாவில் நேர்ந்த அனுபவத்தைச் சொல்கிறார்கள். முக்கியமாக இங்கு வசிக்கும் சில தமிழ் எழுத்தாளர்கள், தமிழ்நாட்டில் (பண்பைக் காக்க வேண்டிய) எழுத்தாளர்கள் நடந்து கொள்

ஏற்படுகிறது. அவர்களை இங்கு வந்து நானும் விமர்சிப்பது, சுயநிந்தனையாகத் தோன்றுகிறது. இந்தியா ஒரு கர்ம பூமி. பாரத யுத்தங்களுக்கு முடிவில்லை. நம்பிக்கைத் துரோகங்கள், பழிவாங்கல், ஏசல், நன்றி மறத்தல் நமது மரபணுக்களோடு கலந்த சாபக்கேடாக இருக்கலாம். ஆனால் அந்தக் களத்தில் தான் கீதை

யசைப் பொறுத்ததா?



பிறந்தது, புத்தர் அவதரித்தார், காந்தி வாழ்ந்தார். இந்தியப் பெண்கள் இப்போது காந்தாரிகளாக வாழ்வதில்லை. தலித்துகள் குரல் எழுப்புகிறார்கள். நெருக்கடிகளில் இந்தியா குலைந்து போகாது. எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நாம் செல்ல வேண்டிய தூரம் அதிகம். கற்க வேண்டிய பாடம் அநேகம். சந்தேகமில்லை.

ளும் விதமும், போட்டுக் கொள்ளும் சண்டையும், தங்கள் எல்லாரையும் வெறுப்பேற்படுத்தி விட்டதாகச் சொன்னார்கள். அவர்கள் ஒரு மிகக் குறுகிய வட்டத்தைப் பார்த்துப் பொதுவான முடிவுக்கு வருவதாக நான் சொன்னேன். 'சுய விமர்சனம் தேவை. ஆனால் சுய நிந்தனை கூடாது' என்று நம்புபவள் நான். இந்தியா

வயசானாலும் காதலுக்குத் தடையில்லை

ஒரு விஷயம் நாம் நிச்சயமாக அமெரிக்கர்களிடமிருந்து கற்றுக் கொள்ள

வாஸந்தி

அருள்வாக்கு



மிலிடரிக்காரன் யூனிஃபார்ம் போடாவிட்டால் அவனுக்கு வீரம் வராதா என்று கேட்பவர்கள் கேட்கலாம். ஆனால் மிலிடரிக்காரன் என்றால், லோகம் முழுக்க அவனுக்கென்று யூனிஃபார்ம் இருக்கத்தான் இருக்கிறது. அதுவே வீரத்தைத் தூண்டுகிறது என்றும் சொல்கிறார்கள்.

வெளியில் தரிக்கும் சின்னம், வெளியில் செய்கிற சம்ஸ்காரம், இவை உள்ளுக்கும் நன்மை தருவனவே ஆகும். வெறும் வேஷம் என்று நினைத்தால் வேஷமாகவே போகும். 'ஆத்மார்த்தமாக, ஜீவனைப் பரிசுத்தம் செய்து கொள்வதற்காக, இந்த சம்ஸ்காரத்தைச் செய்கிறேன்; சின்னத்தை அணிகிறேன்' என்று உணர்ந்து செய்தால், சத்தியமாகவே அது உள்ளே புகுந்து சுத்தி செய்கிறது. புறத்தில் செய்வது உள்ளுக்கு உதவுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

வேண்டும். இங்கு வயசு என்பது சட்டப்படியே ஒருவரின் திறமையை நிர்ணயிக்கும் அளவுகோல் இல்லை. வயசைக் காரணம் சொல்லி, ஒருவரை வேலையிலிருந்து நிராகரிக்க முடியாது. தொலைக்காட்சி செய்தி வாசிப்பவர்கள் எல்லாம் ஐம்பதைத் தாண்டியவர்கள். செய்தியை வயதானவர்கள் சொன்னால்தான், நம்பகத்தன்மை இருக்குமாம். வயதாகி விட்டது என்று சொல்வதே அவமானகரமான விஷயமாகக் கருதப்படுகிறது. அதனாலேயே காதலுக்கும் வயசு கிடையாது. நாங்கள் வசிக்கும் ஸ்காட்ஸ்டேல் என்னும் இடத்தில், சீனியர் சென்டர் என்று ஐம்பதைத் தாண்டியவர்களுக்கான ஒரு கிளப் இருக்கிறது. அங்கு உறுப்பினராக இருப்பவர்களுக்குப் பல வசதிகள் உண்டு. குறைந்த விலையில் சாப்பாடு, மொழிகள் கற்க வகுப்புகள், பிக்னிக் ஏற்பாடுகள், அவர்களது வரிகள் செலுத்த, மின்சார பில் கட்ட உதவி, போன்ற எல்லா உதவிகளும் குறைந்த கட்டணத்துக்குப் பெறலாம். சமீபத்தில் இங்கு ஒரு 'டான்ஸ் மாலை' நடந்தது. அறுபது வயசிலிருந்து, தொண்ணூறு வயசு வரை உள்ள ஆண்களும் பெண்களும், ஆனந்தமாகப் பங்கு கொண்டார்கள். அவர்கள் எல்லோருமே தனியாக வாழ்பவர்கள் - விதவைகள் - மனைவியை இழந்தவர்கள் அல்லது விவாகரத்தானவர்கள், தனிமையை அனுபவிப்பவர்கள். இந்த டான்ஸ் பார்ட்டியினால் உறவு ஏற்பட்டால், அதை ஏற்கத் தயாரானவர்கள். பீனிக்ஸில் வயதானவர்கள் ஒவ்வொரு இரவும் டான்ஸுக்குப் போவதாகச் சொல்கிறார்கள்.

ஓர் ஆய்வின்படி, அறுபது வயதிற்கு மேற்பட்ட அமெரிக்கர்களில் பாதிப் பேர், காதலில் நாட்டம் கொண்டவர்கள் என்று தெரிகிறது. சீனியர் சென்டருக்கு வந்திருந்த ஜோன் ஷேபர் என்ற எழுபத்தைந்து வயது விதவை, 'எங்களுக்கு வயதாகி விட்டதால் ஆசைகள் இருக்காது என்று அர்த்தமில்லை' என்றார். ஆனால் பல வயதான பெண்களுக்கு, ஆண்கள் துணை இல்லாமல் இருப்பதே, சௌகர்யம் என்று தோன்றுகிறது. 'நாங்கள் வெறும் நண்பர்களைத்தான் தேடுகிறோம். ஒரு பந்தம் இப்போது தேவை இல்லை. போதும் கணவரோடு வாழ்ந்து மாரடித்ததெல்லாம்' என்றார் இன்னொரு எழுபது வயசு. ஸ்காட்ஸ்டேலிலும், பீனிக்ஸிலும் அறுபத்தைந்து வயசுக்கு மேற்பட்டவர்கள் நான்கு லட்சம் பேர்.

ஆரோக்கியமாக, தாங்களே கார் ஓட்டுபவர்களாக இருக்கிறார்களாம். 'இந்த அறையைப் பார்த்தீர்களா?' என்றார் எண்பத்தாறு வயதானவரும், சென்டரின் துணைத் தலைவருமான ரிச்சர்ட் க்ரீன் என்னிடம். 'இந்த அறை நிரம்பியிருப்பதற்கு நவீன மருத்துவம்தான் காரணம்' என்றார். பியானோ இசைக்க ஆரம்பித்ததும் கிழ ஜோடிகள், வாலிப உற்சாகத்துடன் நடனமாட ஆரம்பித்தது, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. நம்ம ஊரில் நாற்பதை எட்டின உடனேயே, பெரிசு என்று பரிகசிக்கும் போக்கை (சினிமாவிலும்) நினைத்து வெட்கமேற்பட்டது. இளமை என்பது வயசைப் பொருத்த இல்லை. மூப்பு என்பதே மனசைப் பொருத்தது என்று ஸ்காட்ஸ்டேல் சீனியர்கள் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

(தொடரும்)



இந்த வாரம் குவிஸ் போட்டி 16-க்கான சரியான விடைகளை எழுதியவர்களில், குலுக்கலில் பரிசை வென்றவர்:

பா.து. பிரகாஷ்
1091, சிவராயர் தோட்டம்
1வது தெரு,
மா. சாவடி, தஞ்சாவூர் - 613 001

ஆறுதல் பரிசாக ரூ.100/- பெறுபவர்கள்:

1. பி. செல்வராஜன், பொள்ளாச்சி
2. பி. ரவீந்திரன், ஆனைமலை
3. என். கனகராஜன், சமத்தூர்
4. கே. அருண் பிரசாத், பொள்ளாச்சி
5. ராஜிகணேசன், சென்னை - 40
6. ஏ. இந்திரா, சென்னை - 42
7. பி. டேவிட்ராஜ், பொள்ளாச்சி
8. ஆர். ஜோதிலிங்கம், போத்தனூர்
9. ஜி. கலாவதி, சர்க்கார்பதி
10. எஸ். சரஸ்வதி, வாகைக்குளம்
11. ஏ. ஜப்பார் சாதிக், ஆணைமலை
12. வி.என்.கதிர்வேல், வேலூர்
13. சியாமளா ராஜசேகர், சென்னை -13
14. ஜி.ஆர். கோவிந்தராஜுலு, கோவை -4
15. ஜி. நாராயணி, சென்னை - 40
16. பி.ஜே. பாலகுமாரன், வேட்டைக்காரன் புதூர்
17. நா. கற்பகம், வேலூர் - 6
18. பி. கணேசன், வீரவநல்லூர்
19. ஆர்.ஆதிநாராயணன், மானம்புச்சாவடி
20. சுப்புலட்சுமி பழனிவேலு, கோவை - 18

குவிஸ் போட்டி 16க்கான விடைகள்:

1. 'பல்லாங்குழியில் வட்டம் பார்த்தேன்' பாடலை எழுதியவர் யுகபாரதி.
2. அடினோ என்ற வைரஸால் 'மெட்ராஸ் ஐ' கண் நோய் வருகிறது என்று கண்டறிந்த மருத்துவமனை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, சென்னை.
3. லயன்ஸ் கிளப்பை உருவாக்கியவர் மெல்வின் ஜோன்ஸ்.
4. 823 வார்த்தைகள் கொண்ட உலகின் நீளமான வாக்கியத்தைத் தமது நாவலில் பயன்படுத்திய எழுத்தாளர் விக்டர் ஹியூகோ
5. தமிழக அரசின் மாநில மரம் பனை மரம்.
6. தமது கல்லறையில் ''நான் தமிழ் மாணவன்'' என்று பொறிக்கச் சொன்ன தமிழறிஞர் ஜி.யு.போப்.

வாழ்த்துகள்





கம்பீரம்

கடமை தவறாத காவல் அதிகாரி ஒருவர் இருந்தால், அவருக்கு எதிரிகளும் இருப்பார்கள். இருதரப்புக்கும் இரண்டரை மணி நேரம் யுத்தகாண்டம் நடக்கும். இடையில் ஒரு டூயட், கொஞ்சம் சென்டி மெண்ட், வெளிக்கிரகவாசி போன்று விபரீதத் தோற்றத்தில் ஓர் அபத்த ஆட்டம் போடும் மும்பை மாடல்.

கோலிவுட் காப்பி ஃபில்டரில் காலம் கால மாய் வடிகட்டிய ஃபார்முலாதான் கம்பீ ரத்திலும்.

சிக்கலோ, விக்கலோ இல்லாத சுரேஷின் சுறுசுறு திரைக்கதை. அசிஸ்டெண்ட் கமிஷனர் முத்துசாமி பாத்திரத்திற்காக, உடலிலும், நடிப்பிலும் முறுக்கேற்றிக் கொண்டிருக்கும் ஹீரோ சரத். அடியா! இல்லை இடியா! என அவ்வப்போது நம்மைத் தொட்டுப் பார்த்துக் கொள்ள வைக்கும் ஸ்டண்ட் மாஸ்டர் கனல் கண்ணன். ஒரு ஆக்ஷன் படத்திற்கான ஒலியின் முக்கியத்துவம் உணர்ந்து, சவுண்ட் எஃபெக்ட்ஸில் பட்டையைக் கிளப்பியிருக்கும் ராஜூ, இவர்கள்தான் கம்பீரமாய்த் தெரிகிறார்கள்.

இளநீரில் கள்ளச்சாராயத்தை நிரப்பி விற்கும் (இவர்களே கற்றுத் தருகிறார்கள்?) ரவுடி நாகாவைக் கிண்டி கிழங் கெடுக்கிறார் சரத். தனது பின்னணியைச் சொல்ல மறுக்கும் அவனுக்கு உயிர்ப் பயம் வரவழைக்க,



• சுரேஷ்

அவர் கையாளும் கஸ்டடி கொலை நாடகம் ஜிலீர் என்றால், ரவுடியை ஜாமீனில் எடுக்க வரும் வழக்கறிஞர்கள் மூவரை சிறுத்தையாகச் சீறி விரட்டுவது திகில்.

போலீஸ், தாதா, அரசியல் கதைக் களத்தில் பெரும்பாலான காட்சிகளைப் புதிதாகச் சிந்தித்து உருவாக்கிய இயக்குனர், அவற்றை அள்ளித் தெளித்து அவசரக் கோலத்தில் படமாக்கி இருப்பது படுத்துகிறது.

அதிரடியாக நகரும் ஒரு போலீஸ் கதையில் சரத் - ப்ரணதி ப்ளாஷ்பேக் இதமான குளிரால் வருடி விட்டுப் போகிறது. வாய்ப்புகள் கிடைத்தால் ப்ரணதி ஒரு வட்டம் கலக்குவார் என்று நம்பலாம்.

பாவம் லைலா, பயந்தாங்கொள்ளி பெண் கான்ஸ்டபிளாக, வழக்கமான முக பாவங்களில் படுத்துகிறார்.

ஏட்டாக இருந்து கான்ஸ்டபிளாக பதவி இறக்கம் பெறும் வடிவேலு, லாரி டிரைவர் பஞ்சாப் சிங்கிடம் சிக்கி அடிவாங்கும் போது, தியேட்டரில் அப்படியொரு சிரிப்பலை.

பல காட்சிகளில், தமது அதிகார எல்லைக்குள் அடக்கி வாசிக்காமல், எல்லை மீறுகிறார் போலீஸ் ஹீரோ. இதைத்தான் கம்பீரம் என்று இயக்குனர் புரிந்து கொண்டிருப்பாரோ?

\- விஷுவல்தாசன்


● ஆவரெஜ்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka

கல்கி

28.3.2004 இதழுடன்
இலவச இணைப்பு

உள்ளே...
உறக்கம் தரும் தூக்கம்!
மினி கல்கி



ஆயுள் ஆரோக்கியம் ஆயுர்வேதம்!



முட்டுவலியை தொலைப்பது எப்படி?
ORTHOCURE
ஆர்தோக்யூர்
AN INDO AUSTRALIAN JOINT VENTURE
மாத்திரைகள் மற்றும் ஆயில்
அசமந்த ஓமம்
(Celery Seeds)
ஆஸ்திரேலியாவின்
விஞ்ஞானப் புரட்சி
இப்பொழுது இந்தியக்
கூட்டு முயற்சி
ORTHOCURE
(AN INDO - AUSTRALIAN JOINT VENTURE)
NEW FORTIFIED TABLETS
ORTHOCURE LINIMENT
NO SIDE EFFECTS
FOR JOINT PAINS
100 % AYURVEDIC
MARKETED BY:
KUREWEL PHARMA
CHENNAI-600083
PH:044-2489 3013, 2471 1719
Product of NATURE REMEDIES (P) LIMITED
ANDHRA- 24755925,24750585, KARNATAKA- 22874575,22873961
MUMBAI- 27894441/2,27898072, DELHI- 9891307489,9810000416



ஆயுர்வேதம்!



ஆயுர்வேதம்! அதன் தொன்மையும் பழைமையும் தெய்வீகமானது.

பாரத தேசத்தின் பொக்கிஷமான இந்த ஆயுர்வேதம் மிகவும் விஞ்ஞானபூர்வமானது.

பாவம், ராகம், தாளம் என்ற மூன்றும் சேர்ந்து 'பரதம்' ஆனது போல, ஆயுர்வேதத்தில் வாத, பித்த, கபத்தைச் சொல்கிறார்கள்.

பாவம் என்றால் உணர்ச்சியின் வெளிப்பாடு. (expression). இது கபத்தைக் குறிக்கும். ராகம் என்பது உணர்ச்சி... (emotion). இது பித்தத்தைக் குறிக்கும். தாளம் என்பது ரிதம்... (rhythm) வாதத்தைக் குறிக்கும்.

மனிதனுடைய வாழ்க்கையே வாத, பித்த, கபத்தினால் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்தும் சாஸ்திரம் தான் ஆயுர்வேதம்.

ஆதி காலத்தில் அதர்வண ரிக் வேதங்கள், மருத்துவப் பகுதிகளை வைத்து தம்மை மேம்படுத்திக் கொண்ட சிகிச்சை முறையே ஆயுர்வேதம்.

'ஆயுர்வேதம்' என்றால் வாழ்க்கை பற்றிய அறிவு என்று அர்த்தம். ஆயுர் - வாழ்க்கை; வேதம் - மெய்யறிவு!

வாழ்க்கைக்கும், வாழ்வின் உயர்ந்த லட்சியங்களை அடைவதற்கும் ஒரு மனிதனுக்கு என்ன தேவை...? மிக முக்கியமாக ஆரோக்கியமும், ஆயுளும்தானே! பழங்காலத்தில் வாழ்ந்த ரிஷிகள், தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் (அறம், பொருள், இன்பம், வீடு) எனப்படும் நான்கு பேறுகளை அடைவதற்கு ஆரோக்கியமான உடல்நிலை, மனோநிலை மிகவும் அவசியம் என உணர்ந்தே, இம் மருத்துவக் கலையை மேம்படுத்தியிருக்கிறார்கள்.

— (தேவ மருந்து)

ஆயுர்வேத சிறப்பிதழ் தயாரித்தளிப்பதில் பெருமை கொள்கிறோம்.

— ஆர்.

திபெத்திய மூலிகை மருத்துவம்!

ஜனனம், வியாதி, மூப்பு, மரணம் இவை புத்தரை மிகவும் பாதித்த விஷயங்கள். அவர் துறவறம் மேற்கொண்ட காரணமே இவையால் தான். மனிதனை அதிகம் தாக்குவது வியாதி. பிணியினால் அவஸ்தைப்படும் மனிதனுக்கு புத்தர் மருத்துவராகவும் இருந்திருக்கிறார் என்பது அதிசயமான செய்தி.

திபெத்திய மூலிகை மருத்துவம் புத்த மருத்துவத்தை ஆதாரமாகக் கொண்டது. பெங்களூர் மகாலக்ஷ்மி லே அவுட்டில் திபெத்திய மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களைச் சந்தித்தோம். ''திபெத்திய மருத்துவம் அந்நாட்டுக் காலண்டர்படி 708ம் வருடத்திலிருந்து இருக்கிறது. இந்தியாவில் ஹிமாசலப்பிரதேசத்திலிருக்கும் தர்மசாலாவில் தான் இந்த மருத்துவ முறை போதிக்கப்படுகிறது. ஐந்து வருடப் படிப்பு, ஒரு வருடம் டிரெயினிங். சுமார் முப்பத்தி மூன்று கிளைகள் நாடெங்கும் உள்ளன. எங்களுடைய மருந்துகள் முழுக்க முழுக்க மூலிகைச் சாறுகள் தாம். பக்க விளைவு கிடையவே கிடையாது. நாடித் துடிப்பைப் பார்த்து, கரெக்டாக வியாதி என்னவென்று சொல்ல முடியும். காற்று, கபம், பித்த நீர், இதுதான் அடிப்படையான விஷயம். தேக நிலையின் ஆதார சுருதியான இவை பாலன்ஸ் இழக்கும் போது தான் பிரச்னை'' என்கிறார் டாக்டர் ஜீம்பா.



இன்றும் இந்தியாவிலிருக்கும் சுமார் ஒன்றரை லட்சம் திபெத்தியர்கள் இந்த மருத்துவத்தைத்தான் நம்புகிறார்கள்.

''ஒரு நோயாளியின் நாடித் துடிப்பைப் பார்த்து துல்லியமாகக் கணிக்க வேண்டும். உணர்வு பூர்வமான வல்லுநராக இருக்க வேண்டும். நாடிக்குப் பிறகு ரத்தம், சதை, எலும்பு, கழிவு... என 'மூல தந்திரா'வில் சொல்லியிருப்பது போல் பரிசோதிக்க வேண்டும். எங்களுடையது மிக மிகப் புராதனமான மருத்துவம். இது எழுதப்பட்டது தங்கத் தகட்டில். 'லபீஸ்லசூலி' என்ற 'மை' கொண்டு எழுதி, ஆகாய தேவதைகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது என்கிறது வரலாறு. இன்றும் திபெத்திய மருத்துவமனைகள், எங்கள் மதகுருவான தலாய் லாமாவின் மேற்பார்வைக்குட்பட்டு நடக்கின்றன'' என்று விவரிக்கிறார் பெண் டாக்டரான பஸங்.



தலைமை மருத்துவர் தோர்ஜி, நாம் போயிருந்த போது ஊரில் இல்லை. அவருடைய தலைமையில் மிக நேர்த்தியாகச் செயல்படுகிறது இம்மருத்துவமனை. ''எல்லோருக்குமே வைத்தியம் உண்டு. உணவு மற்றும் நோயாளியின் பழக்க வழக்கங்களைச் சரி செய்வதுதான் முதல் கட்ட ஆலோசனை. சரியாகவில்லையென்றால் தான் மருந்துகள்'' என்கிறார்கள்.

— லதா சேகர்

ஸ்ரீ டிராவல்ஸ்

194-A, அண்ணாசாலை, முதல் மாடி, ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.
போன் : 28516799, 28513109, 28411522, 55870482
E-mail: sritrave@satyam.net.in. Website : www.sreetravels.com.

உங்கள் குடும்பத்துடன் குதுகலமாக கழிக்க ஸ்ரீ டிராவல்ஸ் அளிக்கும் அற்புதமான சுற்றுலாக்கள்.

கொளுத்தும் கோடையில் வெண்பனியில் விளையாடி மகிழும் சுற்றுலாக்கள்

LTC வசதிகளுடன்

சிம்லா - குலு - மணாலி சுற்றுலா

சென்னை - டில்லி - சண்டிகார் - சிம்லா - குலு - மணாலி - டில்லி-சென்னை.
பயணத் தொகை : ரூ.4,900/- + ரயில் டிக்கெட்
பயண நாட்கள் : 10 புறப்படும் தேதிகள் : ஏப்.24, மே 2,9,16,23,30
டில்லியில் A/c. ஹோட்டல் மற்றும் A/c. பஸ் வசதிகளுடன்
(WITH GOVT. TOURISM DELUXE BUSES)

டார்ஜிலிங் - கேங்க்டாக் சுற்றுலா

சென்னை - கொல்கத்தா - டார்ஜிலிங் - கேங்க்டாக் - சென்னை.
பயணத் தொகை : ரூ.5,500/- + ரயில் டிக்கெட்
பயண நாட்கள் : 10 புறப்படும் தேதிகள்: ஏப்.30, மே 7,14,21, 28
கொல்கத்தாவில் A/c. ஹோட்டல் மற்றும் A/c. பஸ் வசதிகளுடன்

பத்ரி - கேதார் சுற்றுலா

சென்னை - டில்லி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் - டில்லி - சென்னை.
பயணத் தொகை : ரூ. 6,500/- பயண நாட்கள் : 11
புறப்படும் தேதி : மே 7,14, 21, 28
(பத்ரி - கேதார் பயணத்தின்போது பிரத்யேக படுக்கை வசதிகளுடன்)
கங்கோத்ரி - யமுனோத்ரி
பயணத் தொகை : ரூ. 8,500/- புறப்படும் தேதி : மே 21
(WITH GOVT. TOURISM DELUXE BUSES)

20 ஆண்டுகளுக்குப் பின் அமைதி தவழும் காஷ்மீர் பள்ளத்தாக்கினை கண்டு களியுங்கள்.

சென்னை-ஜம்மு-ஸ்ரீநகர்-பகல்காம்-குல்மார்க்-டில்லி-சென்னை.
பயணத் தொகை : ரூ. 6,900/- பயண நாட்கள் :10
புறப்படும் தேதி : மே 7,21
(WITH GOVT. TOURISM DELUXE BUSES)
பிரத்யேக சுற்றுலா : ஜம்மு-வைஷ்ணவி-அமிர்தசரஸ்
தனிக்கட்டணம் நபருக்கு ரூ.800/-.

அந்தமான் சுற்றுலா

சென்னை - போர்ட்பிளேயர் - சென்னை.
(கப்பல் பயணம் மற்றும் விமானப் பயணத்துடன்)
பயணத் தொகை : ரூ.13,900/- பயண நாட்கள் : 7
புறப்படும் தேதி : ஏப். 30 - மே 7, 14, 21

A/c. பஸ்ஸில் காசி, கயா பக்தி சுற்றுலா

சென்னை - மதுரா - விருந்தாவன் - ஆக்ரா - நைம்சரன்யா - அயோத்யா - வாரணாசி - கயா - அலகாபாத் - டில்லி -சென்னை.
பயணத் தொகை : ரூ.7,900- பயண நாட்கள் : 9
புறப்படும் தேதி : மே 2, 21
(WITH GOVT. TOURISM DELUXE A/C BUSES)

கைலாஷ் - மானசரோவர் யாத்திரை

சென்னை - டில்லி - காத்மாண்டு - கைலாஷ் - மானசரோவர் - காத்மாண்டு - டில்லி - சென்னை
பயணத் தொகை : ரூ. 58,000/-
(டில்லி - காத்மாண்டு-டில்லி விமானப் பயணம்)
பயண நாட்கள் : 19
புறப்படும் தேதி : ஜூன் 6, ஜூலை 8
யாத்திரை முழுவதும் வீடியோ எடுத்து அனைவருக்கும் சிடி. தரப்படும்)

நேபாள், முக்திநாத் சுற்றுலா

சென்னை - கோரக்பூர் - போக்ரா - காத்மாண்டு - கோரக்பூர் - சென்னை.
பயணத் தொகை : ரூ.6,000/- நேபாள் மட்டும்
பயண நாட்கள் : 9 புறப்படும் தேதி : மே 8, 22
முக்திநாத் தரிசனம் : ஹெலிகாப்டர் மூலம் : ரூ.12,000/-
முக்திநாத் தரிசனம் : விமானம் மூலம் : ரூ.7,000/-

சிங்கப்பூர் - மலேசியா சுற்றுலா

சென்னை - கோலாலம்பூர் - சிங்கப்பூர்- சென்னை.
பயணத் தொகை : ரூ.35,900/-
பயண நாட்கள் : 6 இரவுகள் / 7 பகல்
புறப்படும் தேதி : ஏப். 25 - மே 20
நட்சத்திர ஓட்டல்களில் தங்கும் வசதிகளுடன்

8 பேர் அல்லது அதற்கு மேல் உள்ள குழுக்களுக்கு பிரத்யேக சுற்றுலாக்கள். பிரத்யேக வாகனங்களில்! நீங்கள் விரும்பும் தேதிகளில்

	ஒரு நபருக்கு
1. சிம்லா-குலு-மணாலி-டில்லி	- ரூ.6,500 + ரயில் டிக்கெட்
2. கல்கத்தா-டார்ஜிலிங்-கேங்க்டாக்	- ரூ.6,500 + ரயில் டிக்கெட்
3. சென்னை-ஜெய்ப்பூர்-பிகானேர்-ஜெய்சல்மர்-ஜோத்பூர்-உதய்பூர்-மவுண்ட் அபு-அஜ்மீர்-புஷ்கர்-சென்னை	- ரூ.9,500
4. சென்னை-எர்ணாகுளம்-ஆலப்புழா-கோட்டயம்-மூணாறு-தேக்கடி-கொச்சி-எர்ணாகுளம்-சென்னை	- ரூ.4,800
5. சென்னை-கொடைக்கானல்-மூணாறு-சென்னை	- ரூ.3,500
6. சென்னை-கோவா-சென்னை	- ரூ.3,500
7. சென்னை-மைசூர்-சுப்ரமணியா-மூகாம்பிகா-சிருங்கேரி-தர்மசாலா-உடுப்பி-மெர்க்காரா-மைசூர்-சென்னை	- ரூ.4,800
8. சென்னை-மைசூர்-மெர்க்காரா-சென்னை	- ரூ.3,200
9. சென்னை-ஹைதராபாத்-அவுரங்காபாத்-எல்லோரா-ஷிர்டி-மும்பாய்-சென்னை	- ரூ.4,800

இந்தியா முழுவதும் ஓட்டல்களில் ரிசர்வ் செய்து தரப்படும்
கோடை நெரிசலைத் தவிர்க்க 60 நாட்களுக்கு முன்பே முன்பதிவு செய்யவும்

மெடிமிக்ஸ் ஜெயித்த கதை!

இன்னொரு சூப்பர் ஸ்டார்!



"அபூர்வ ராகங்கள்' படத்தில் நான் இரண்டு பேரை அறிமுகப்படுத்தினேன். இன்று இரண்டு பேரும் சூப்பர் ஸ்டார்களாகத் திகழ்கிறார்கள்" என்று ஒரு விழாவில் குறிப்பிட்டார் டைரக்டர் கே. பாலசந்தர்! அவர் குறிப்பிட்ட சூப்பர் ஸ்டார்களுள் ஒருவர் ரஜினிகாந்த். இன்னொரு சூப்பர் ஸ்டார்? 'மெடிமிக்ஸ்' சோப்புதான்!


அந்தப் படத்தில் ஜெயசுதா, வீடு வீடாகப் போய், மெடிமிக்ஸ் சோப்பு விற்பார். அப்போதுதான் மெடிமிக்ஸ் சோப்பு மார்க்கெட்டில் அறிமுகமாகி இருந்தது. இன்று, தினம் ஒன்றரை லட்சம் சோப்புகள் உற்பத்தி செய்யும் அளவுக்கு, மெடிமிக்ஸ் கம்பெனி வளர்ந்துவிட்டது.

சென்னையில் ரயில்வே குவார்ட்டர்ஸ் வீடு ஒன்றில், மிகச் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட மெடிமிக்ஸ், இன்று டாப் டென் பிராண்டுகளில் ஒன்றாக இடம் பிடித்திருப்பது சாதனை தானே?

மெடிமிக்ஸ் சோப்பின் ஸ்பெஷாலிடி, அது ஓர் ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட குளியல் சோப் என்பதுதான். இதனைத் தயாரிப்பது 'சோலையில் பார்மா' என்கிற நிறுவனம். கேரளாவில் திருச்சூர் அருகே ஆயுர்வேத வைத்தியத்தில் கைதேர்ந்த குடும்பம் 'சோலையில்' குடும்பம். நாராயண குரு, திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த அரச குடும்பத்தினருக்கு மருத்துவம் பார்த்த பரம்பரை. இதில் வந்தவர் சித்தன். இவரோ ஆயுர்வேதத்துடன், கூடுதலாக கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் படித்தவர்.


சித்தன்

"தென்னக ரயில்வேயில் பணி புரிந்தபோது, ரயில்வே கலாசிகள் பலருக்குத் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வந்து கஷ்டப்பட்டார்கள். நான் அலோபதி டாக்டர்தான் என்றாலும், ஆயுர்வேதப் பாரம்பரியத்தில் வந்தவன் என்பதால், வீட்டிலேயே தைலம் தயாரித்து, அவர்களுக்குக் கொடுப்பேன். ஒரு கட்டத்தில், தைலமாகக் கொடுப்பதைவிட, சோப்பு தயாரித்துக் கொடுத்தால், பயன்படுத்துவது சுலபமாக



இருக்கும் என்று பட்டது. எனவே ஆயுர் வேதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தோல் ஆரோக்கியத்துக்கு உகந்த மூலிகைகள், இதர பொருட்களைக் கொண்டு, ஒரு சோப்பைத் தயாரித்தேன். அதைப் பயன்படுத்தியவர்களுக்கு நல்ல பலன் கிடைத்தது. இதுதான் இன்றைய மெடிமிக்ஸ் வெற்றிக் கதையின் முதல் அத்தியாயம்'' என்கிறார் டாக்டர் சித்தன்.

இவரது மனைவி சௌபாக்கியம், தினம் நூறு சோப்புகள் போல வீட்டிலேயே தயாரித்தார். அவற்றை டாக்டர்களுக்கு விநியோகித்து, நோயாளிகளுக்கு வழங்கச் செய்தார். பயன்படுத்திப் பலன் அடைந்தவர்களிடமிருந்து, பாராட்டும், 'இன்னும் சோப்பு கிடைக்குமா?' என்ற கோரிக்கையும் வந்தது. இதனால் உற்சாகமடைந்த டாக்டர் தம்பதி, அரசாங்கத்துக்கு விண்ணப்பித்து, வர்த்தக ரீதியில் சோப்புத் தயாரிப்பில் இறங்கினார்கள்.

"சோப்புக்கு மெடிமிக்ஸ் என்று பெயர் வைத்தது எப்படி?"

"சாதாரணக் குளியல் சோப்புகளுக்கும், எங்கள் தயாரிப்புக்கும் உள்ள வித்தியாசம் எங்கள் சோப்பில் மருத்துவ குணம் கொண்ட மூலிகைகளும், இதர பொருட்களும் சேர்க்கப்பட்டிருப்பதுதானே? ஆக மெடிசன் மிக்ஸ் பண்ணின சோப் என்பதைக் குறிக்கும் வகையில் 'மெடிமிக்ஸ்' என்று பெயர் வைத்தோம்."

டாக்டர் சித்தனுக்கு சினிமா உலகில் நிறைய நண்பர்கள் உண்டு. அவரே ஒரு நடிகரும் கூட. எனவே, தங்கள் சோப்புக்கு விளம்பரம் கிடைக்க, சினிமா என்ற ஜனரஞ்சக மீடியத்தையே பயன்படுத்திக் கொண்டார்கள். அப்படித்தான் மார்க்கெட்டில் அப்போது அறிமுகமாகி இருந்த மெடிமிக்ஸ் சோப்பும், அபூர்வராகங்களில் ஒரு புதுமுகமாக அறிமுகமானது. ஆடு புலி ஆட்டம் என்ற படத்தில், கமல், ஒரு ஹோர்டிங்கைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து வரும்படியான காட்சி ஒன்று இடம் பெறும். இந்த ஹோர்டிங்கில் இடம் பெற்றது, மெடிமிக்ஸ் விளம்பரம்தான். நிறைய தமிழ், மலையாளப் படங்கள் மூலம், மெடிமிக்ஸ் சோப்புக்கு நல்ல விளம்பரம் கிடைத்தது!

தோல் பாதிக்கப்பட்ட முகம் கொண்ட ஒருவர், மெடிமிக்ஸ் சோப் பயன்படுத்தி முகப்பொலிவு அடைவதாக விளம்பரம் செய்ததற்கு நல்ல பலன் கிடைத்தது. 'இது நெகடிவ் அணுகுமுறை' என்று கருதி, உங்கள்





உடல் அழகுக்கு மெடிமிக்ஸ் பயன் படுத்துங்கள்' என்று பாஸிடிவ் ஆக மாற்றி, நீச்சல் உடையில் ஓர் ஆங்கிலோ இந்தியப் பெண்ணை விளம்பரப்படுத்திய போது, விற்பனை கூடியது மட்டுமல்ல; சர்ச்சையும் கண்டனமும் கூட எழுந்தன.

"வழக்கமாக நகர்ப்புறங்களில் ஒரு பொருளை அறிமுகப்படுத்திவிட்டு, அதற் கப்புறம்தான் கிராமப்புற சந்தைக்குப் போவார்கள். நாங்கள் அதற்கு நேர் மாறாகச் செயல்படத் திட்டமிட்டோம். எங்கள் சோப்பு பாரம்பரியம் கொண்ட ஆயுர்வேத முறையில் தயாராவது என்பதால், முதலில் கிராமப்புற மக்களுக்கு அறிமுகப்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும் என்று திட்டமிட்டு, கிராமம் கிராமமாகப் போனோம்.

"நாங்கள் சோப்பு தயாரிக்கும் போது பயன்படுத்துகிற மூலிகைகள், மலை இஞ்சி, வேப்பம் பட்டை போன்ற பொருட்களைப் பரப்பி வைத்து, இவற்றையெல்லாம் சேர்த்துதான் நாங்கள் சோப்பு தயாரிக்கிறோம் என்று விளக்கி னோம். தோல் சம்பந்தப்பட்ட வியாதி உள்ள கிராமவாசி களுக்கு, மெடிமிக்ஸைக் கொடுத்துப் பயன்படுத்திப் பார்க்கச் சொன்னோம். தவிர, கிராமங்களில் நடக்கும் திருவிழாக்களில் நாங்கள் ஸ்டால்கள் அமைத்து விளம்பரப்படுத்தினோம். இவை காரணமாக, மிக எளிதில் எங்களால் கிராமப்புற மார்க்கெட்டைப் பிடிக்க முடிந்தது.


"தவிர, கிராமப்புறங்களில் மின்சார வசதி இல்லாத அந்தக் காலத்தில், மெடிமிக்ஸ் விளம்பரம் அச்சிடப்பட்ட அட்டை யாலான விசிறிகளை, கிராமப்புறத் திருவிழாக்களின்போது விநியோகித்தோம். கையடக்க சைஸில் பல்வேறு கடவுள் படங்களை அச்சிட்டு, மறுபக்கம் மெடிமிக்ஸ் விளம்பரம் செய்து விநியோகிக்கப்பட்ட அட்டைகளை, கிராம மக்கள் சென்டிமெண்டாக பத்திரப்படுத்தியது, எங்கள் வளர்ச்சிக்கு உதவியது. நாங்கள் போட்ட சுவாமிபட காலண்டர்கள், ஒரு வருஷத்துக்கு கிராம மக்களின் குடும்பத்தில் அங்கமாக விளங்கி, ஒரு நெருக்கமான உறவை ஏற்படுத்தின.

"இப்படியாக கிராமப்புற மார்க்கெட்டைப் பிடித்ததை யடுத்து, நகரங்களுக்கு வருகிற கிராமத்து மக்கள், நகரத்துக் கடைகளில் 'மெடிமிக்ஸ் சோப்பு இருக்கிறதா?' என்று கேட்க ஆரம்பித்தார்கள். இதனால் நகர்ப்புறங்களில் இருக்கிற கடை களிலும் எங்களுக்கு டிமாண்ட் ஏற்பட்டது.

வியாபாரத்தில் வளர்ச்சி இருந்தது என்றாலும், வசதியா னவர்கள் மத்தியில் ஆயுர்வேத குளியல் சோப் என்றால், அது ஏதோ நாகரிகக் குறைவான சமாசாரம் என்கிற மனப் பான்மைதான் நிலவியது. எங்களது சோப்பு, மற்றெந்த சோப் பையும் விட வாசனை, நுரை, புத்துணர்ச்சி தருவதில் சற்றும் சளைத்தது இல்லை. கூடுதலாக மருத்துவ குணங்களும் கொண்டது. ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால், வாங்கு வதற்குத் தயங்குகிற எவரும் விரும்பத் தொடங்குவார்கள் என்பது உறுதி. அத்தகையவர்களை முதல் தடவையாக வாங்க

வைப்பது எப்படி? என்று பல நாட்கள் யோசித்தோம். ஓர் ஐடியா வந்தது. நட்சத்திர ஓட்டல்களை விடுத்து, அதற்கு அடுத்த தரத்தில் இருக்கும் ஓட்டல்கள், லாட்ஜ்களுக்கு எங்களது சிறிய சைஸ் சாம்பிள் சோப்புகளைச் சலுகை விலையில் விற்பனை செய்தோம். அங்கே தங்குகிறவர்கள், விடுதியில் தரும் சோப்பைத்தானே பயன்படுத்தியாக வேண்டும்? அப்படிப்பட்ட சூழ்நிலையில் மெடிமிக்ஸ் பயன் படுத்தியபோது, அதன் மகத்துவம் புரிந்தது. தயக்கம் போனது. இந்த வியாபார வியூகம் எங்களுக்கு ஏராளமான புதிய வாடிக் கையாளர்களைப் பெற்றுக் கொடுத்தது.

“பாண்டிச்சேரி போன்ற சில ஊர்களில் எங்கள் சோப்பைப் பயன்படுத்திய அயல்நாட்டு டூரிஸ்ட்கள், எங்களுக்கு அயல்நாடுகளிலும் வரவேற்பு கிடைக்கச் செய்தனர். இன்று பல்வேறு அயல்நாடுகளிலும் மெடிமிக்ஸ் விற்பனையாகிறது.



‘‘அவனுக்கும் ஒரு கோன் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்துடுங்கப்பா...’’

‘‘ஏண்டா?’’

‘‘இல்லாட்டி, நீங்க வோட்டு கேட்கப் போற இடமெல்லாம் பின்னாடியே வந்து ‘ஏமாத்திட்டாரு, ஏமாத்திட்டாரு’ன்னு அழுவானாம்...’’

- வாசு

“மெடிமிக்ஸ் என்பது குடும்பப் பெயராக விளக்கும் கட்டத்தை அடைந்ததும், குளியல் சோப்புடன் கூடவே இருமல் மருந்து, சரும நோய் மாத்திரைகள், பெண்களுக்கான பிரசவத்துக்குப் பிந்தைய மருந்துகள், ஜீரண மாத்திரைகள் என்று பல்வேறு ஆயுர்வேதம் சம்பந்தமான பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்ய ஆரம்பித்தோம்.

“இன்று எங்களுக்கு மூன்று கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்ட ஆராய்ச்சி மையம் இருக்கிறது. நூற்றி இருபது ஏக்கர் பரப்பில் மூலிகைப் பண்ணை இருக்கிறது. இன்று எங்கள் குழுமத்தின் வர்த்தகம், இருநூறு கோடியைத் தாண்டி விட்டது. பிரம்மாண்டமான அளவில் ஆயுர்வேத மருத்துவ காம்ப்ளெக்ஸ், பல்வேறு நகரங்களிலும் அதன் கிளைகள், இதெல்லாம் எங்கள் எதிர்கால லட்சியங்கள்” என்கிறார் மெடிமிக்ஸ் மேஜிக் நடத்தியுள்ள டாக்டர் சித்தன்.

— எஸ். சந்திரமௌலி

மான் கொம்பு பஸ்மா!

அறுபதாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது 'இம்ப்காப்ஸ்'.

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாபரேடிவ் ஃபார்மஸி ஸ்டோர்ஸின் சுருக்கம்தான், இம்ப்காப்ஸ். டாக்டர் குமாரதாஸ், எம்.எல்.ஏ.தான் இதன் இப்போதைய தலைவர். பன்னிரண்டு போர்டு உறுப்பினர்கள். எல்லோருமே ஆயுர்வேத மருத்துவர்கள்.

செயலர், டாக்டர் வி.ஆர்.சேஷாத்ரியைச் சந்தித்தோம்.

''அறுபதாம் ஆண்டு விழாவில் என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?''

''ஒன்பது ஏக்கருக்கு மேல் இருக்கிறது இந்த வளாகம். அதில் பாதியைத்தான் உபயோகப்படுத்தி வருகிறோம். எங்கள் நீண்ட நாள் விருப்பமான நவீன ஆயுர்வேத மருத்துவமனை துவங்க இருக்கிறோம். முதலமைச்சர் ஜெயலலிதா மே மாதத் துவக்கத்தில் அடிக்கல் நாட்ட வருவார்கள் என்று நம்புகிறோம்.''



• சிகிச்சையின்போது...

''இப்போது மருந்துகள் தயாரிப்பு, விற்பனை மட்டும்தானா?''

''அல்ல. இப்போது புறநோயாளிகள் பிரிவு செயல்பட்டு வருகிறது. தினசரி அறுபது முதல் எண்பது நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். ஆலோசனைக் கட்டணமாக நாற்பது ரூபாய் வசூலிக்கிறோம். மருத்துவ குணங்கள் நிறைந்த எண்ணெயினால் அப்யங்கா, பத்ர பங்க ஸ்வேதா, போன்ற உடம்பு மஸாஜ் தவிர, பிழிச்சல், நவரக்கிழி முதலியவற்றுக்கும் இங்கே வசதிகள் இருக்கின்றன. ஆனால் மருத்துவமனை என்று உருவாகிவிட்டால், எல்லா வித நோயாளிகளுக்கும் பயன்படும்.''

''சமீப காலமாக, அலோபதி சிகிச்சைக்கு மாற்றாக உள்ள சிகிச்சை முறைகள் பிரபலமாகி வருகின்றன. குறிப்பாக ஆயுர்வேதம்...''

''உண்மைதான். இப்போது ஆயுர்வேத சிகிச்சை முறைக்கு சர்வதேச அங்கிகாரம் கிடைத்திருக்கிறது. பக்க விளைவுகள் ஏதும் இல்லை என்பது முக்கியக் காரணம். குறிப்பாக, கான்சர் நோய்க்குச் சிகிச்சை பெறுபவர்கள் கிமோதெரபி செய்து கொள்ளும்போது, சப்போர்ட்டிவ் தெரபி என்ற ஆதரவுச் சிகிச்சை முறையாக, ஆயுர்வேத மருந்துகளையே நம்பி வருகிறார்கள் இப்போது.''

''ஆயுர்வேதம் மிகப் பழைய, புராதன சிகிச்சை முறை. தற்போதைய நோய்களுக்கு, அவற்றுக்கான மருந்துகள் இருக்கின்றனவா?''

''இருக்கின்றன. அதிகபட்ச உடல் பருமன் எனப்படும் 'ஒபீஸிடி'யை ஸ்வேதனம் என்ற வைத்திய முறையில் குணமாக்கலாம். பதினைந்து நாள் முதல் ஒரு மாதம் வரை சிகிச்சை. கீழே கஷாயம் கொதிக்கும். மேலே நோயாளிக்கு அதன் உஷ்ணம் கிடைக்கும். இது தவிர, உணவுக் கட்டுப்பாடு, உட்கொள்ளச் சில மருந்துகள் உண்டு. சமீபத்திய எய்ட்ஸ் நோய்க்கும் மாத்திரை இருக்கிறது. தென் கிழக்கு ஆசியாவில் இது அபூர்வமான சிகிச்சை. கொரோனரி கார்டியாக் (இதய நோய்) பிரச்னை காரணமாக பைபாஸ் சர்ஜரி செய்து கொண்டவர்களுக்கு, மான்கொம்பிலிருந்து தயாரிக்கப்படும் ஷிருங்க பஸ்மா இப்போது மிக உதவியாக இருக்கிறது.''



• வி.ஆர்.சேஷாத்ரி



எய்ட்ஸ் நோயைப் பொறுத்த வரை, 'ஓஜஸ்' குறையும்போது உடல் பலவீனம் அடைகிறதாம். அதற்கான ரீஜுவனேடிவ் தெரபி (புஷ்டிச் சத்து) கொடுக்கிறபோது, உடலில் எதிர்ப்புச் சக்தி கூடி, நோயாளி பலன் பெறுகிறாராம். ஏழு வருடங்கள் ஹெச்.ஐ.வி. கிருமி உடலில் தங்கியிருக்கும் போதும் வெளிப்படையாக எந்த நோய்க் குறியும் தெரியாதாம்.

''சமீபத்தில் தில்லியில் கூடிய ஆராய்ச்சியாளர் கூட்டத்தில் பேசும்போது நான் கூறினேன்: ஆண்களின் ஹாஸ்டலில் பெரும்பாலும் ஒரே ஷேவிங் ரேஸரைப் பல பேர் பயன்படுத்துவார்கள். ஒருவருக்கு எய்ட்ஸ் இருப்பது தெரியாமலே இதன் மூலம் பல பேருக்குப் பரவும் வாய்ப்பைச் சுட்டிக் காட்டினேன். அவர்களுக்கு இது புதிய செய்தியாக இருந்தது. லூகோடர்மா (சரும நோய்) சோரியாஸிஸ் போன்றவற்றுக்கு மிகச் சிறந்த மருந்துகள் ஆயுர்வேதத்தில் இருக்கின்றன. பத்தியத்தை மேற்கொண்டு, மருந்துகளை உண்டு வந்தால் குணம் பெறலாம். அதேபோல, நீரிழிவுக்கும் நல்ல மருந்துகள் ஆயுர்வேதத்தில் இருக்கின்றன. இன்சுலின் உபயோகிக்கும் அளவுக்கு முற்றின டயபடீஸ் நோயாளிகளுக்கும், இன்சுலின் தேவை இல்லாத நோயாளிகளுக்கும், மருந்துகள் கிடைக்கின்றன.

ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளில் வாழும் தமிழர்கள் இங்கே வந்து, ஒரு மாதம் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாகத் தெரிவித்தார் டாக்டர் கே.எஸ்.உமா. பெரும்பாலும், பராலிடிக் நோய் தாக்கப்பட்டவர்கள் நம்பிக்கையுடன் இங்கு வந்து சிகிச்சை பெறுகிறார்களாம். காலை எட்டு மணி முதல் இரவு ஏழு மணி வரை, புற நோயாளிகள் பிரிவு இயங்கி வருகிறது.

''எந்த நோய்கள் எல்லாம் அலோபதியில் குணம் ஆக வில்லையோ, அதற்கெல்லாம் இங்கேதான் வருகிறார்கள்!'' என்கிறார் டாக்டர் உமா.

இம்ப்காப்ஸ் முந்நூற்றி மூன்று ஆயுர்வேத மருந்துகளையும், இருநூற்று இருபத்தியோரு சித்த வகை மருந்துகளையும், நூற்று ஐம்பத்தாறு வகை யுனானி மருந்துகளையும் தயாரித்து வருகிறது!

— சாருகேசி

படங்கள்: வெங்கடேஷ்

"பக்தி சிரத்தையுள்ள ஹிந்துக்களுக்கு துளசி மாடத்தைச் சுற்றி வழிபடும் வழக்கம் உண்டு. அப்படி வழிபடும்போது, இரண்டு துளசி இலைகளைப் பறித்து வாயில் போட்டுக் கொண்டால் உடம்புக்கும் நல்லது. சிலர் பொங்கல் சாப்பிடும்போது, அதில் உள்ள மிளகைத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். உடலுக்கு மிகவும் தேவையான சத்துகள் மிளகில் உண்டு. எனவே பொங்கல் செய்யும்போது, மிளகை, பொடி செய்து தூவிவிட்டால், பொங்கலுடன் உள்ளே போய்விடும். நாம் அன்றாடம் சாப்பிடும் பல உணவுப் பொருள்களில் நிறைய





சத்துகள் இருக்கின்றன. ஆனால் பீட்ஸா, பாஜர், ஸாண்ட்விச் என்று அவசர யுகத்தில் இருக்கும் நாம் வழக்கமான காய்கறிகளையும் உணவுப் பொருள்களையும் சாப்பிடும் வழக்கத்திலிருந்து நழுவி வருகிறோம்" என்கிறார் ராஜ்குமார்.

ஆயுர்வேத மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் ஸ்ரீபைத்தியநாத் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பொறுப்பைத் தமிழகத்திலும், கேரளத்திலும் ஏற்றிருப்பவர் இவர்.

"கறிவேப்பிலையில் இரும்புச் சத்து உண்டு. அதைத் தூக்கி எறிந்துவிடும் பழக்கத்தை விட்டுவிட



அடுப்பங்கரை ஆரோக்கியம்!



* ராஜ்குமார்

வேண்டும். ஏலம், கிராம்பு, பட்டை என்று மசாலா சமாசாரங்களை உபயோகிக்கும்போது, செரிமானமாக சோம்பு சேர்த்துக் கொள்கிறோம். சில குடும்பங்களில் சோம்பை ஒதுக்குகிறார்கள். இது தவறு. கிராமத்திலிருக்கும் பெரிசுகள் வேர்க்கடலை சாப்பிட்ட பின் வெல்லம் சாப்பிடுவார்கள். வேர்க்கடலையின் மோசமான குணத்தை அடித்து, செரிமானமாக்க வெல்லம் தேவை. புடலங்காயில் ஞாபக சக்திக்குத் தேவையான சத்து உண்டு. வாழைத்தண்டு சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் தானாகக் கரையும். ஆனால் எதையுமே அளவோடு சாப்பிட வேண்டும். பேரிச்சம் பழத்தில் இரும்புச்சத்து இருக்கிறது



என்று தொடர்ந்து சாப்பிட்டால், மலச்சிக்கல் வந்துவிடும். உப்பு உடம்புக்கு மிக அவசியம் தேவை. அதிக உப்பு அதிக ஆபத்து. நெய்யில் சில மருத்துவ குணங்கள் உண்டு. அதுவே அதிகமாகிப் போனால் கொலஸ்ட்ரால் வந்து பிரச்னைதான்... முன்பெல்லாம் வீட்டில் நெல்லிக்காய், எலுமிச்சங்காய், நார்த்தங்காய் ஊறுகாய்கள் தயாரிப்பார்கள். இப்போது அதற்கெல்லாம் எங்கே நேரம் இருக்கிறது? அதிலும் குறிப்பாக நார்த்தங்காய் மிகவும் நல்லது. வெந்தயம், வேப்பிலை இரண்டுக்கும் நிறைய மருத்துவ குணங்கள் உண்டு. ஆனால் எதையும் அளவோடு உட்கொள்ள வேண்டும்'' என்கிறார் ராஜ்குமார்.

ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புகள் ஒரு மூலிகைப் பொருளை மட்டும் கொண்டே தயாரிக்கப்படுபவை அல்ல. ஒரு மருந்தில் பல பொருள்கள் கலந்திருக்கின்றன. "உதாரணமாக எங்கள் ச்யவன்பிராஷ் லேகியத்தில் ஐம்பத்தியிரண்டு பொருள்கள் இருக்கின்றன. சர்க்கரை நோயாளிகளுக்கும் தனியாக இது போன்ற லேகியம் தயாரிக்கிறோம்'' என்கிறார் ராஜ்குமார். ஸ்ரீபைத்தியநாத் ஆயுர்வேத மருந்து நிறுவனத்தை 1918ல் தோற்றுவித்தவர்கள் பண்டிட் ராம்கோபால் ஜோஷி மற்றும் வைத்தியா ராம்நாராயண் சர்மா. இன்று இந்தியாவில் ஆறு இடங்களில் இவர்களின் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. சுமார் எழுநூறு மருந்துப் பொருள்களைத் தயாரிக்கும் இவர்களது வருட டர்ன்ஓவர், சுமார் இருநூறு கோடியாம்.

- கௌசி

படம்: மீடியா ராமு



கூந்தல் காத்த தைலம்!



கோட்டக்கல் ஆரிய வைத்திய பாடசாலையில் பயின்றவர் கே.எஸ். வாரியர். தேர்ச்சி பெற்ற பின்னர் 1936ம் ஆண்டு திருச்சியில் ஒரு சிறு கடையையும், ஸ்டோர் வீட்டையும் வாடகைக்கு எடுத்தார்.

கோட்டக்கல் ஆரிய வைத்தியரும், தன் குருநாதருமான பி.எஸ். வாரியரிடம் சென்று, ஐந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள ஆயுர்வேத மருந்துகளைப் பெற்றுக் கொண்டு வந்து திருச்சியில் ஆயுர்வேத மருத்துவத்தைத் துவக்கினார். அறுபது வருடங்களுக்கு முன்பாக, திருச்சி மலைவாசல் கடை வீதியில் நடந்து செல்வோரை விரல் விட்டு எண்ணி விடலாம். மக்கள் தொகையும் குறைவு. வியாதியஸ்தர்களும் குறைவு.



* நாராயண வாரியர்



* கே.எஸ். வாரியர்

"மருத்துவக் கடைக்குள் மக்களை ஈர்ப்பதற்காக, எங்கள் அப்பா கவுளி கவுளியாக வெற்றிலையை வாங்கி வைத்திருப்பார். கிராமத்து மனிதர்களை வலிய வரவழைத்து, கடைக்குள் அமர வைத்து பேச்சுக் கொடுப்பார். அவர்கள் நோய் நொடிகளைப் பற்றி அறிந்து கொண்டு, அவர்களுக்கு வைத்தியம் பார்க்க ஆரம்பித்து விடுவார். அந்தக் காலத்திலிருந்து அவர் மறைந்து போன (1990) வரைக்குமாக, பணம் பண்ணுவதை முக்கிய நோக்கமாகக் கொண்டிராதவர் என் தந்தை" நினைவு கூர்கிறார் டாக்டர் டி.வி. நாராயண வாரியர். இவரது சகோதரர்கள் சங்கரன், ராமன், சசிவாரியர் ஆகியோர் நிர்வகித்து வருகின்றனர்.

கோட்டக்கல்லில் இருந்து கொண்டு வந்த மருந்து, சில ஆண்டுகளில் தீர்ந்து போய்விட்டது. நடைமுறைச் செலவுகளில் அதன் வருவாயும் கரைந்துவிட்டது. வேறு பணமில்லை. என்ன செய்வதென்று திகைத்தார். தன் குருநாதரான பி.எஸ். வாரியரைச் சென்று சந்தித்தார். ஆயுர்வேத மருந்துகள் தந்து உதவுமாறு கேட்டார். அப்போது இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், "இங்கேயே பெரும் நெருக்கடியாய் இருக்கிறது. என்னிடம் வந்தே ஒவ்வொரு முறையும் மருந்து வாங்கிச் சென்றால், நீ எப்படி வளர்ச்சி அடைவாய்? அதனால்,





* அஷ்டாங்க மருந்துத் தொழிற்சாலை



நீ தங்கியிருக்கும் திருச்சியிலேயே ஆயுர் வேத மருந்துகளைத் தயாரித்துக்கொள். ஆனால் அதற்கு "கோட்டக்கல்" என்கிற பெயரைப் பயன்படுத்தி விடாதே. உனக்கென ஒரு டிரேட் மார்க்கை உருவாக்கிக் கொள்" என மருந்து தராமல் திருப்பி அனுப்பினார். குருநாதரின் வாக்குப் பொய்த்துப் போய்விடவில்லை.


திருச்சியில், தான் வசித்த வீட்டிலேயே ஆயுர்வேத மருந்துகளைத் தயாரிக்கத் துவங்கினார். கே.எஸ். வாரியரின் அஷ்டாங்க ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியாயின. கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி அடைந்தது அஷ்டாங்கா. பின்னர் சின்னக் கடை வீதியில் ஒரு தனிக் கட்டடம் பிடித்து தொழிற்சாலையாக உருமாறியது. தற்போது திருச்சியிலிருந்து பதினைந்து கி.மீ. தாயனூர் சந்தை என்கிற கிராமத்தில், அதன் மருந்து உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வருகிறது.



அஷ்டாங்க ஆயுர் வேத மருந்துத் தொழிலகத்தில், இருநூற்றைம்பது வகையான மருந்துகள் தயாரிக்கப் படுகின்றன. எழுபது வகையான தைலங்கள், இருபத்தைந்து வகையான சூரணங்கள், இருபத்தைந்து வகையான லேகியங்கள், இருபது வகையான டானிக்குகள், இருபத்தைந்து வகையான கஷாயங்கள், முப்பது வகையான மாத்திரைகள், இருபது வகையான நெய் மருந்துகள் (கிரதங்கள்), ஐந்து வகையான கேப்ஸ்யூல்கள் மற்றும் ஐந்து வகையான தனிச் சிறப்புத் தயாரிப்புகள். அதில் ஒன்றுதான் ஆம்ராஸ்தியாதி தைலம்.

அந்தக் காலகட்டத்தில் சென்னையிலிருந்து ஒரு சினிமாக் கம்பெனியினர் கே.எஸ். வாரியரை அணுகியிருக்கின்றனர். பிரபல தமிழ் நடிகை ஒருவரின் கூந்தல் வளர்ச்சிக்காக, பிரத்யேகமாக தைலம் ஒன்றினைத் தயாரித்துத் தருமாறு கேட்டிருக்கின்றனர். அவரும் புதிதாக உருவாக்கி அனுப்பி வைத்திருந்தார். அந்த நட்சத்திரத்தின் தலைக்கு அந்தத் தைலம் அபார பலன் தரவே, அதிக ஆர்டர்கள் வந்து குவிந்தன அஷ்டாங்காவுக்கு. ஆம்ராஸ்தியாதி தைலம் என்பது பெண்களின் கூந்தல் வளர்ச்சிக்கானது. இப்பொழுதும் இது இவர்களின் தனித் தயாரிப்பாக விளங்கி வருகின்றது. திருச்சியில் நான்கு இடங்களில் தற்போது அஷ்டாங்க ஆயுர்வேத கிளினிக்குள் செயல்படுகின்றன. தஞ்சாவூர், பட்டுக்கோட்டை மற்றும் கும்பகோணம் போன்ற நகரங்களிலும் இதன் கிளினிக்குகள் இயங்கி வருகின்றன.

- திருநாவுக்கரசு



அழகில் 'ஐஸ்'ஸை வெல்லலாம்!

மேனி, முகம் சிவப்பாவதற்கான(!) பல க்ரீம்கள் இன்று மலிந்திருக்கின்றன. பயங்கர வியாபாரம்.

கல்லூரிப் பெண்களின் ஹேண்ட்பேகில் கண்டிப்பாக இவை உண்டு. பலன் பூஜ்யம்; பக்க விளைவுகள் ஏராளம் என எல்லோருக்குமே தெரியும். ஆனால் சுமார் ஐயாயிரம் வருடங்களாக நடைமுறையில் இருக்கும் ஆயுர்வேதம், சருமத்தைப் பற்றிய ஒரு பெரிய ஆய்வே நடத்தியிருக்கிறது. முகப் பரு, கருவளையம், சுருக்கம், வடுக்கள் இன்றி ஆரோக்கியமான பளிச் முகம் வேண்டுமா? ஆயுர்வேத அறங்காவலரான 'சுஸ்ருதாசார்யர்' சருமத்திற்கு ஏழு அடுக்குகள் (layers) உள்ளன என்கிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் சுஸ்ருதர் செய்த ஆய்வு என்ன?

அவபாஷிணி: எல்லாவற்றிற்கும் வெளியேயுள்ள சருமமே அவபாஷிணி. முகப்பரு, ஆக்னே, பொடுகு போன்றவை தலைதூக்குவது இப்பகுதி சீர்குலைவதினால்.

லோஹிதா: இது இரண்டாவது அடுக்கு. மச்சம், கருவளையம், கரும்புள்ளிகள் போன்றவை அதிகமாகக் காணப்படும், இப் பகுதி தோஷங்களினால் தாக்கப்படும்போது.

ஸ்வேதா: மூன்றாவது அடுக்கான இப் பகுதி தோஷங்களினால் சீர்குலையும் போது, எக்ஸிமா, சொறி, அரிப்பு, அலர்ஜி போன்றவை தாக்கும்.

தாமரா: நான்காவது அடுக்கான இப் பகுதி பாதிக்கப்படும்போது ஏற்படுவதே தொழுநோய்.

வேதினி: கடுமையான தோஷங்கள் தாக்கும்போது சருமத்தில் ஐந்தாவது அடுக்கில் ஹெர்பீஸ் நோய் ஏற்படுகிறது.

ரோகிணி: கேள்விகள் ஆயிரம் போல, வியாதிகள் ஆயிரம் என கான்ஸர், ட்யூமர், யானைக்கால் போன்ற பெருவியாதிகள் வரக் காரணம், சீர் குலைக்கும் தோஷங்கள் சருமத்தின் இப் பகுதியைத் தாக்குவதே.

மாம்ஸதாரா: ஏழாவது அடுக்கான இப்பகுதி பாதிக்கப்படும்போது, கொப்புளங்கள், பவுத்திரம், பிளவை போன்ற சங்கடங்கள் ஏற்படும். நம் சருமத்தை ஆரோக்கியமாக மாசு மருவற்று வைத்துக் கொள்ள வேண்டுமானால், 'ஆகாரம் - விகாரம்' (டயட் மற்றும் வாழ்க்கை முறை) இரண்டுமே சரிவர இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது ஆயுர்வேதம். இதைக் கடைப்பிடித்தால், ஐஸ்வர்யா ராயை ஓரம் கட்டலாம் அழகில்!

டயட்: தவிர்க்க வேண்டியவை: எண்ணெயில் மிதக்கும், ஹெவியான உணவுகள், திரவ ஆகாரங்கள், வேளையற்ற வேளையில் கண்ட நேரத்திலும் உணவு, ஜீரணமே ஆகாத நேரத்திலும் மூக்குப் பிடிக்க சாப்பாடு, அரிசி, மீன், தயிர், உப்பு, வெல்லம், எள்ளு, முள்ளங்கி போன்றவற்றை மிக அதிக அளவில் உட்கொள்ளுதல், மீனை, பால் மற்றும் தயிருடன் சேர்த்து சுபளீகரம் பண்ணுவது!

வாழ்க்கை முறை: தவிர்க்க வேண்டியவை: மதியத் தூக்கம், கோபம், எரிச்சல், மிக அதிக வெப்பம், மிக அதிக குளிர் சூழ்நிலை, உடல் ரீதியாக மிக அதிகமான உழைப்பு, தேகசிரமம், கடுமையாக உழைத்துவிட்டு உடனேயே சில்லென்ற நீரில் குளிப்பது, மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டுவிட்டு உடனேயே தாம்பத்யத்தில் ஈடுபடுவது.

ஆயுர்வேதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த டிப்ஸ்களைக் கடைப்பிடித்தோமானால், சருமம் பளபளப்பது காரண்டியாம்!

- லதா

ஆயுர்வேதம்-ஜோதிடம் என்ன தொடர்பு?



* கே.கே. தாமோதரன்.

“நாலு வேதங்களில், நான்காவதான அதர்வண வேதத்தின் ஓர் உப வேதம்தான் ஆயுர்வேதம். இன்னொரு பிரிவுதான் ஜோதிடம். நம் பாரம்பரியத்தில், ஆயுர்வேதம், மனிதர்களின் உடல் நலம் பற்றிய விஞ்ஞானம். ஜோதிடம் என்பது வாழ்க்கை பற்றிய விஞ்ஞானம். ரொம்ப ஆழமாய் ஆராய்ந்து பார்த்தால், ஆயுர் வேதத்தில், ஜோதிடத்துக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு. ஆயுர்வேத நூல்களில், ஜோதிடத்துடன் நேரிடையாகவும், மறைமுகமாகவும் தொடர்பு கொண்ட ஏராளமான விஷயங்கள் இடம் பெற்றிருக்கின்றன" என்கிறார் ஆயுர்வேத சிரோன்மணி டாக்டர் கே.கே. தாமோதரன்.

"ஆயுர்வேதம் குறித்த தொன்மையான புத்தகம், சாரங்க தர சம்ஹிதா. அதில் நோயாளி, மருத்துவர்கள் சம்பந்தப்பட்ட தூத லட்சணம், சகுன லட்சணம் குறித்து மிக விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. நோயாளிக்குச் சிகிச்சை அளிப்பதற்காக, மருத்துவருக்குத் தகவல் கொடுத்து அழைத்துப் போவதற்காக, நோயாளியின் சார்பில் வருகிற தூதர் எந்த நேரத்தில் வருகிறார், எந்த திசையிலிருந்து வருகிறார், நோயாளி குறித்துத் தகவலை எப்படிப்பட்ட குரலில் தெரிவிக்கிறார், அப்போது மருத்துவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்தும், தூத லட்சணம், சகுன லட்சணம் என்று விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"சில ஆயுர்வேத மருந்துகளை டாக்டர் கொடுக்கிறபோது, அந்த மருந்தை உடனடியாக அப்படியே சாப்பிட்டால் பலன் இருக்காது; எனவே குறிப்பிட்ட ஹோமங்களைச் செய்து, ஆண்டவனைப் பிரார்த்தனை செய்து, அதன் பிறகே உட்கொள்ளத் தொடங்க வேண்டும் என்று இருக்கிறது.

"தவிர, சிலருக்குக் குறித்த காரணம் ஏதுமில்லாமல், திடீரென்று நோய் வந்து அவதிப்பட நேரிடும். அது குறித்து ஆராய்ந்தால், அவருக்குரிய கிரகங்களின் நிலைகள் காரணமாகவும், கிரக மாறுபாடுகளின் காரணமாகவும்தான் உடல்நலம் குன்றியிருப்பது புரியும். அப்போது என்ன சிகிச்சை அளித்தாலும், தீவிர நிலையில் உள்ள நோயை முற்றிலுமாகக் குணப்படுத்த முடியாது. அது போன்ற சமயங்களில், நோயின் தீவிரத்தைக் குறைக்க, முதலில் மருந்து கொடுத்து, விரதம் முதலியவற்றைக் கடைப்பிடிக்கச் செய்து, மனோரீதியில் தைரியமூட்டி, கிரக நிலைகள் மாறுபட்டு, நல்ல சூழல் ஏற்பட்டவுடன் சிகிச்சை ஆரம்பித்து, நோய் தீர்க்கப்படும்.

"கனவுகளும், அதற்குரிய பலன்களும்கூட ஜோதிடத்தின் அங்கம்தான். உடல்நலத்துக்கும் கனவுகளுக்கும், மருத்துவரீதியான தொடர்பு உண்டு.

"காஞ்சியில் உள்ள விஸ்வ ஹிந்து வித்யாலயா பல்கலைக் கழகத்தில், உடல் நல ஜோதிடம் என்ற சப்ஜெக்ட்டில், ஆயுர்வேதம், ஜோதிடம் இரண்டும் குறித்த ஆராய்ச்சிகளில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது" என்கிறார் தாமோதரன்!

- கௌதம்





வைரம் தராதது வைத்தியம் தந்தது!

• நாயுடு

புருஷோத்தமன் நாயுடு வசதியான மனிதர். கொடைக்கானலில் எஸ்டேட், சூரத்தில் வைரத்துக்குப் பட்டை தீட்டும் ஃபாக்டரி என்று நிறைய சொத்து. நீரிழிவு நோய் காரணமாக கண் பார்வையில் பாதிப்பு ஏற்பட்டது. சென்னையின் மிகப் பிரபலமான கண் டாக்டரிடம் போனார். அவர் அளித்த லேசர் சிகிச்சையில், ஒரு கண்ணில் முழுமையாகப் பார்வை பறி போனது. ஆபரேஷன் முடிந்து ஆஸ்பத்திரியில் இருந்தபோது அறிமுகமான ஓர் ஆன்மிகவாதி அவரைப் பார்த்தார். டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரைகளுக்குப் பதிலாக, சில இயற்கை உணவு முறைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் படிச் சொன்னார். இரண்டே வாரத்தில் பார்வை பாதிக்கப்பட்ட இன்னொரு கண்ணில் நல்ல முன்னேற்றம்.

அதனையடுத்து, இயற்கை மருத்துவம், ஆயுர்வேதம் என்று ஆர்வம் ஏற்பட்டது. அது குறித்து நிறையத் தெரிந்து கொண்டார். அந்த ஆன்மிகவாதியின் ஆசியோடு, ஆயுர்வேதம், சித்தாவுடன் இணைந்த இயற்கை மருத்துவமனை ஒன்றை சென்னையிலேயே ஆரம்பித்தார். அதுதான் அடையாறு இயற்கை மருத்துவ மையம். "என் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்து செல்லும் நோயாளிகள் எழுதும் நன்றிக் கடிதங்கள், எனக்கு மன நிம்மதியைத் தருகின்றன. வைர வியாபாரம் செய்த போதுகூட கிடைக்காத திருப்தி, இப்போது எனக்குக் கிடைக்கிறது" என்று மனம் நெகிழ்ந்து கூறுகிறார் நாயுடு.

நாலரை வருடங்களாக செயல்பட்டு வருகிறது அடையாறு நேச்சர் கியூர் கிளினிக். இங்கே ஆயுர்வேதத்துடன் இணைந்த இயற்கை சிகிச்சை வழங்கப்படுகிறது.

"எங்களின் லேட்டஸ்ட் சிகிச்சை பார்கின்சன் நோய்க்கானது. தற்போது இந்த நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகளால், அபாயமான பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. ஆனால் ஆயுர்வேதம் மற்றும் இயற்கை வைத்தியம் மூலம், இந்நோயிலிருந்து நிவாரணம் பெற முடியும்" என்று சொல்லி ஒரு வீடியோ டேப்பை ஓடவிடுகிறார் நாயுடு. எழுபது வயது முதியவர் ஒருவர், இவர்கள் அளித்த மாத்திரை, மருந்து மற்றும் தைல மஸாஜ் போன்ற பன்முகச் சிகிச்சைகளின் மூலம் எப்படி படிப்படியாக பலன் அடைந்திருக்கிறார் என்று தெரிந்து கொள்ள முடிகிறது. சுய கட்டுப்பாட்டில் இல்லாத, கை நடுக்க நிலையிலிருந்தவர், தன் சட்டை பட்டனைத் தானே போட்டுக் கொள்ளும் அளவுக்கு முன்னேற்றம்.

"பார்கின்ஸன் நோயாளிகளை, சிகிச்சை மூலம் தாம் சம்மந்தப்பட்ட வேலைகளைத் தாமே பார்த்துக் கொள்ளுமளவுக்கு மாற்ற முடியும் என்று பல கேஸ்களில் நிரூபித்திருக்கிறோம்" என்கிறார் நாயுடு.



- பாரதி மௌலி



ஆஹா பளிச்!

அமைதியான ஆலயத்துக்குள் வந்து விட்ட உணர்வு. மெதுவாக 'ஓம்' ஒலி பரவுகிறது. மனம் இலேசாகி எதிரே பார்த்தால் 'தன்வந்திரி' படம். இளம் பெண் ஒருவர் 'முகலேபம்' (facial) செய்து கொண்டு கதவைத் திறந்து வந்ததும் தான், 'நாம் இருப்பது மயிலாப்பூர் 'ஆயுஷ் தெரபி சென்டர்' என்பது நினைவுக்கு வருகிறது.

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் நிறுவனமும் ஆர்ய வைத்ய பார்மசியும் இணைந்து இந்த 'ஆயுஷை' நிறுவியிருக்கிறார்கள்.

''நோயை விட நோய்க்கான மூல காரணத்தைக் கண்டறிந்து, அதை முழுவதுமாகக் களைந்தெடுக்க முற்படுவதுதான் ஆயுர்வேதம். இப்ப தலைவலின்னு ஒரு மாத்திரை சாப்பிட்டா, அது அந்த நேரம் மட்டும்தான். சில நாட்கள் கழித்து மீண்டும் தொடரும். ஆனா ஆயுர்வேதத்துல அப்படியில்லை. உங்க உடம்பு நிலை என்ன? இந்த உடம்புக்கு என்ன மாதிரியான சிகிச்சை அளிக்கலாம்னு பூராவும் ஆராய்ந்து தான் பண்றோம். இத



• டாக்டர் ஸ்ரீனா

னால நூறு சதவிகித 'குணமாகுதல்'ங்கறது இதுல சாத்தியம்" என்கிறார் இந்த சென்டரின் டாக்டர் ஸ்ரீனா.

ஆயுர்வேத சிகிச்சையுடன் தியானமும் யோகாவும் சொல்லிக் கொடுக்கிறார்கள் இங்கே.

"நகர வாழ்க்கையில எல்லாமே அவசரம்னு ஆனதால டென்ஷன், மன அழுத்தம், பி.பி. போன்றவை ரொம்ப சாதாரணமா வரும். இதைக் குணப் படுத்துறதுல யோகாவுக்கும், தியானத்துக்கும் முக்கியப் பங்கு இருக்கு. மிகவும் பழமையான ஆயுர்வேத சிகிச்சையும் யோகாவும் இணைந்தால், உடலும் மனமும் ஆரோக்கியமாகும்" என்கிறார் ஸ்ரீனா. இதற்காக யோகா மாஸ்டர் ஒருவரும் இங்கிருக்கிறார்.

ஆயுர்வேத சிகிச்சைக்காக இங்கே வைக்கப்பட்டிருக்கும் மசாஜ் டேபிள்கள் (துரோணி அல்லது பாத்தி என்கிறார்கள் இதை) ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன்னால் இருந்த மாடலைப் போலவே செய்யப்பட்டிருக்கிறதாம்!

"வேப்ப மரத்துக் கட்டையிலதான் இதைச் செய்வாங்க. பிறகு கொஞ்சம் கொஞ்சமா எண்ணெய் போட்டு அதை ஒரு வழிக்குக் கொண்டு வரணும். இந்த டேபிளை நல்லாப் பார்த்தீங்கன்னா, ஒரு பக்கம் உயர்ந்தும் மறுபக்கம் இறங்கியும் இருக்கும். இதுதான் இந்த டேபிளோட ஸ்பெஷாலிடி" என்கிறார் ஹிந்துஸ்தான் லீவர் நிறுவன சேல்ஸ் மேனேஜர் ரமேஷ்பாபு.



• வேப்பமர டேபிள்ல



இங்கு என்னென்ன ட்ரீட்மெண்ட் கொடுக்கிறார்கள்?

எலும்பு சம்பந்தப்பட்ட நோய்களுக்காக, உடல் மற்றும் தலையில் மருத்துவ குணமிக்க எண்ணெய் தடவுகிறார்கள். இப்படித் தடவுவதால் முதுமை நீங்குமாம். தோலின் அமைப்பில் வலிமை மேம்படுமாம். இதை 'அப்யங்கம்' என்கிறார்கள்.

உடல் எக்கச்சக்கமா எடை கூடி 'இப்படி ஆகிப்போச்சே' என்று வருத்தப்படுபவர்களுக்காக, 'உத்வர்தனம்' (weight loss) இருக்கிறது. எண்ணெய் அல்லது மோரில் மூலிகைப் பொடியை, மூலிகைச் சாறுடன் கலந்து உடலில் தடவும் முறை. இந்தப் பொடியை உடலில், கீழிருந்து மேலாகத்தான் தேய்ப்பார்களாம்!

பிறகு முகலேபம் (facial). முகத்தில் மூலிகைப் பொடிகளைத் தடவி அப்படியே குறிப்பிட்ட நேரத்திற்கு விட்டு வைக்கிறார்கள். பொடி காய்ந்த பிறகு 'ஜில்' தண்ணீரில் முகத்தைக் கழுவினால் 'ஆஹா பளிச்'சுக்கு உத்தரவாதம் என்கிறார்கள்!


— அப்பு

படங்கள்: ஸ்ரீஹரி














கிராமத்துப் பெரியவர் ஒருவர் மூட்டு வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். "அந்த ஆயுர்வேத டாக்டரிடம் போனால், மூணே வேளை லேகியத்தில் குணமாயிடும்" என்றார் அவரது நண்பர். ஆயுர்வேத டாக்டரைப் பார்த்தார் பெரியவர். லேகியத்தைக் கொடுத்து மூன்று நாள், மூன்று வேளை என்று சொல்லியனுப்பினார் டாக்டர். மூன்று நாள் ஆயிற்று. வலி விட்டபாடில்லை. மீண்டும் டாக்டரிடம் ஓடோடி வர,."நான் கொடுத்த லேகியத்தில் வலி குறைஞ்சிருக்கணுமே" என்கிறார் டாக்டர். "லேகியத்தை மூணு வேளையும் கால் மூட்டுகளில் நன்றாகத் தடவினேன். வலி குறையவேயில்லை. தூங்கும் போது மூட்டுகளின் மேல் எறும்புக்கடிதான் தாங்க முடியவில்லை" என்றார் பெரியவர். "ஐயோ... தெய்வமே... லேகியத்தைச் சாப்பிடக் கொடுத்தேன். அதைப் போய்..." என்று நொந்து கொண்டு சிகிச்சையைத் தொடர்ந்தார் டாக்டர்.

"இந்தச் சம்பவம் ஜோக்கல்ல; இதுபோல நடப்பதுண்டு; நடந்ததுண்டு" என்கிறார், நாகர்கோயில்

வேதம் காக்கும்



தெரிசனங்கோப்பில் உள்ள ஸ்ரீ சாரதா ஆயுர்வேத மருத்துவமனையின் டாக்டரான எல். மகாதேவன்!

"உடம்புக்குத் தடவ எண்ணெய் கொடுத்தால், அதை விழுங்கி விட்டு வருபவர்களும் உண்டு. ஆனால் பெரும்பாலான ஆயுர்வேத மருந்துகளின் அடிப்படை, தாவரங்கள் என்பதால் உடலுக்கு எந்தத் தீங்கும் வராது" என்கிறார் அவர்.

ஸ்ரீ சாரதா ஆயுர்வேத மருத்துவமனை, எண்பது வருடங்களாக தெரிசனங்கோப்பில் செயல்பட்டு வருகிறது. இதைத் துவங்கியவர் டாக்டர் எல். மகாதேவனின் தாத்தா ஒய். மகாதேவ அய்யர். அருகே உள்ள காடு, மேடு, மலை, பள்ளத்தாக்கு என்று அலைந்து, அரிய தாவரங்களைக் கண்டுபிடித்து மூலிகைகளைச் சேகரித்து வைத்தியம் செய்தவர் இவர். மாட்டு வண்டி கட்டிக் கொண்டு, நோயாளிகளைப் பார்க்க, கிராமம் கிராமமாகச் செல்வாராம். அந்தப் பாரம்பரியத்திலிருந்து கொஞ்சமும் வழுவாமல், அதே சமயம், மாறிவரும் சூழல்களையும் அனுசரித்து நடந்து வருகிறது இந்த மருத்துவமனை.



எல். மகாதேவன்



• மகாதேவ அய்யர்

வெற்றிக் கூட்டணி!



• மருத்துவமனை

சுற்று வட்டாரத்திலிருந்து மட்டுமல்ல, வெகு தூரங்களிலிருந்து கூட நோயாளிகள் இங்கு சிகிச்சைக்காக வருகிறார்கள். தினசரி நூறு பேர் புறநோயாளிகளாக சிகிச்சை பெற, இந்த மருத்துவமனையில் வசதியுண்டு.

இங்கு பாரம்பரிய முறையில் எண்ணெய்க் குளியல், ஆவிக் குளியல் எல்லாம் உண்டு. ஆங்கில மருத்துவத்தில் நர்ஸிங் தொழில் செய்பவர்களுக்குப் பயிற்சி உண்டு. ஆனால் ஆயுர்வேத மருத்துவத்தில் முறைப்படி நர்ஸிங் பயிற்சி கிடையாது.

"இந்த மருத்துவமனையில் வேலை செய்யும் உதவியாளர்களுக்கு, மருந்தின் தன்மை, மருந்து கொடுப்பது, நோயாளிகளிடம் நடந்து கொள்ளும் முறை ஆகியவை பற்றி சொல்லிக் கொடுக்கிறோம்'' என்கிறார் மகாதேவன். ஆயுர்வேதத்தில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகியவற்றை முடித்தவர் இவர். ஆயுர்வேதத்தை முறைப்படி படித்த பலர், இங்கு அனுபவம் பெறுவதற்காக டாக்டர்களாகப் பணிபுரிகிறார்கள்.

மகாதேவனின் பெரியப்பா டாக்டர்

ராமகிருஷ்ணன், மருத்துவ மனையின் மூத்த வைத்தியர். மகாதேவனின் அப்பா லெட்சுமண சர்மா சட்டம் படித்தவர். நோயாளிகளின் வருகைப் பதிவு மற்றும் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்கிறார். மகாதேவ அய்யரின் மற்றொரு பேரன் டாக்டர் சிதம்பரம், ஒரு சிறந்த மருத்துவர். மூலிகைகளைக் காயவைத்து, சலித்து, அரைத்து, பொடித்து, சூர்ணமாகவும், லேகியமாகவும், தைலமாகவும் செய்வதற்கு, எல்லா வசதிகளும் இங்கிருக்கின்றன. அருகில் மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரலில் வடக்கு மலையில் நிறைய மூலிகைச் செடிகள் விளைகின்றன. ஆகவே குமரி மாவட்டத்தில் மூலிகை மருத்துவம் பிரசித்தம்.

"எங்களிடம் பலதரப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்கு வருகிறார்கள். நரம்பு, மூளை, மூட்டு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு எங்களிடம் சிறந்த மருந்துகள் உண்டு. உலகில் உள்ள பல மருத்துவ முறைகளையும் முயன்று பார்த்துவிட்டு, நோய் குணமாகாமல் எங்களிடம் வந்து சொஸ்தமானவர்கள் உண்டு'' என்கிறார் மகாதேவன். சிகிச்சை பலனளிக்காது என்றால், முதலிலேயே சொல்லிவிடுகிறார்கள்.

''மூலிகைகள் கிடைப்பது அரிதாகி வருகிறது. அப்படியே கிடைத்தாலும் விலை எக்கச்சக்கம். கலப்படம் வேறு. மூலிகைகளைச் சரியானபடி அடையாளம் காணத் தெரியாவிட்டால், ஏமாற்றப்படும் வாய்ப்பு நிச்சயம். ''மரமஞ்சள், அதிவிடயம், ஜீவனியகணம் போன்ற அரிய மூலிகைகளை மத்தியப் பிரதேசத்திலிருந்து தருவிக்கிறோம். நாற்பது ரூபாய் விற்ற மூலிகைகள் இன்று மூவாயிரம் ரூபாய் விற்கின்றன. நல்ல மிளகு கூட கிடைப்பது சிரமமாகி வருகிறது. அதில் களிமண் உருண்டையைக் கலக்கிறார்கள். மஞ்சட்டி என்ற மூலிகையோடு, ஆலம் விழுதை வெட்டி, சிவப்பு 'டை' போட்டு, கலந்து விடுகிறார்கள்! இவற்றைக் கண்டுபிடித்து நல்ல மூலிகைகளாக வாங்கத் தெரிய வேண்டும்'' என்கிறார் மகாதேவன்.

''கிட்டத்தட்ட நாநூறு வகையான மூலிகைகளைக் கொள்முதல் செய்கிறோம். ஆனால் நல்ல ஆயுர்வேத வைத்தியருக்கு நூற்றி ஐம்பது மூலிகைகள் போதும். ஒவ்வொன்றையும் மற்றொன்றுடன் கலந்து கொடுப்பதில் தான், திறமை அடங்கியிருக்கிறது'' என்கிறார் மகாதேவன்.

ஆயுர்வேத மருந்துகளுக்கும் எக்ஸ்பயரி தேதி உண்டாம்! ''சூரணம் இரண்டு மாதம்தான் தாங்கும். லேகியம் ஒரு வருடம் கழித்துத்தான் வீரியம் போகும். எண்ணெய் ஆறு மாதம் கழித்துத்தான் காலாவதி ஆகும். அரிஷ்டம் பழசாக, பழசாகத்தான் வீரியம் கூடும். (புளித்த வாசனை இதில் உண்டு.)''

பாரம்பரியமும் படிப்பும் சரியான கூட்டணி அமைத்திருப்பதே, இந்த மருத்துவமனையின் வெற்றி ரகசியம்!

— ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு




''நடிகருக்குத் தேர்தலில் சீட் கொடுத்தது தப்பாப் போச்சு!''
''ஏன்?''
''அவசரமா ஷூட்டிங் இருக்கிறதால மீட்டிங்குக்கு டூப்பை அனுப்பவான்னு கேக்கறாரு!''

- வி. கிருஷ்ணகுமார்

மினி கல்கி

மார்ச். 28 - 2004



ஓவியர் மருது

டாக்டர் கே. ஸ்ரீஸ்ரீதர்

டாக்டர் எஸ். அசோக்

நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே. சமதி

டாக்டர் இரா. அன்புமணி

பேராசிரியர் கு. ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்

உளக்கம் தீரும் தூக்கம்!

–டாக்டர் எல். மகாதேவன்



ஆதி மருத்துவரான சரகர், உறக்கத்தை "பூதாத்ரீ"னு வர்ணிக்கிறார். "பூதாத்ரீ"ன்னா இந்த உலகத்தையே தாலாட்டும் தாய்னு அர்த்தம். அதனால்தான் தேவி பாகவதத்தில்,

"யாதேவி ஸர்வபூதேஷு
நித்ராரூபேண ஸம்ஸ்திதா!
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை
நமஸ்தஸ்யை நமோ நமஹ"

என்று தேவர்கள், தேவியைத் துதிப்பதாகக் கூறப்பட்டிருக்கு. எல்லா உயிரினங்களிலும் உறக்க வடிவமா எந்த தேவியானவள் இருக்கிறாளோ, அந்த தேவிக்கு, உடலாலும், மனசாலும், ஆத்மாவாலும், மீண்டும் மீண்டும், நமஸ்காரம்னு பொருள். இந்த உறக்கம், அப்பேர்ப்பட்ட மகிமை வாய்ந்தது.



ஆயுர்வேத சாஸ்திரத்தில எப்படி, வாத, பித்த, கபம், வாழ்க்கையின் அழித்தல், காத்தல், ஆக்கல்ங்கற முச்செயல்களுக்குக் காரணமா இருக்கோ, அதே போல வாழ்க்கையின் மூன்று தூண்களா, ஆகாரம்ங்கற உணவு, ஸ்வப்பனம்ங்கற உறக்கம், தாம்பத்யம்ங்கற இல்வாழ்க்கை மூணும் அமைந்திருக்கு. நெறிமுறைப்படுத்தப்பட்ட இந்த மூணு காரணங்களால, நம் உடலானது ஆரோக்கியத்தையும், நிறத் தையும் வளர்ச்சியையும், மேன்மையையும் அடையுது.

தினமும் வேலை செஞ்சு உடம்பு சோர்வடையற போதும், உடம்புல இருக்கிற நாளங்கள்ல கபமானது அதிகரிக்கும் போதும், புலன்கள் தங்கள் செயல்களைச் செய்வதில் சோர்வுறும் போதும், உறக்கம் வருதுங்கறார் வாக்படர். அப்படி புலன்கள் செயல்படாம இருந்தாலும், மனசு "சிந்த்யம்"னு சொல்லக் கூடிய சிந்தனையைச் செய்வதால, பலவித கனவுகள் வருவதாகவும் சொல்றார். கண்டது, கேட்டது, அனுபவித்தது, அனுபவிக்க விரும்புவது, கற்பனை செய்வது இவற்றால கனவுகள் உருவாகுது. இரவு நேரத்தில தமோ குணம் அதிகரிக்கறதால, பொதுவா தூக்கம் வருது. தமஸ்ங்கற சொல்லுக்கு 'இருட்டு'னு பொருள் உண்டு.

மனித வாழ்க்கையில சுகம், துக்கம், புஷ்டி, மெலிதல், ஆரோக்யம், நோய், ஆண்மை, ஆண்மையின்மை, அறிவு, அறிவின்மை, ஆயுள் இவையெல்லாமே உறக்கம் சம்பந்தப்பட்டதுன்னு கூறப்பட்டிருக்கு. காலம் தவறி தூங்கினாலோ, அல்லது உறங்காமல் இருந்தாலோ மேற் சொன்னவை அனைத்தும் மாறுபடும்னும், இது வாழ்க்கையை காலராத்ரீ போல அழிச்சுடும்னும்





• கவலை இல்லைன்னா கட்டில் எதற்கு...? காய்கறிக் கடையிலயும் தூங்கலாம்...

சொல்றார்.

அதே நேரத்துல எவ்வளவு நேரம் உறங்கணும், எப்படி உறங்கணும்ங்கறதை ஒருவன் நன்றாக உணர்ந்து, அதன்படி உறங்கினா, அது உடலுக்கும் புலன்களுக்கும் ஓய்வை அளிக்கறதோட உடம்பை புஷ்டிப்படுத்தி, சிந்தனை வளர்ச்சி பெறவும் உதவும்.

பிறந்த குழந்தை பதினாறு மணி நேரம் தூங்கும். ஆறு வயசுப் பையன் ஒன்பது மணி நேரம் தூங்குகிறான். பன்னிரண்டு வயதுப் பையன் எட்டு மணி நேரம் தூங்குகிறான். வாலிப வயதினருக்கு ஏழரை மணிநேரம் போதும்.

அன்றாட வாழ்க்கையில ஒரு மனுஷனுக்கு காலை ஆறு முதல் பத்து மணி வரை, கபத்தின் ஆதிக்கம் இருக்கும் (காலையும் மாலையும் இப்படியே).

காலை பத்து முதல் இரண்டு மணி வரை, பித்தத்தின் ஆதிக்கம் இருக்கும். பிற்பகல் இரண்டு முதல் ஆறு மணி வரை, வாயுவின் ஆதிக்கம் இருக்கும்.

இரவு பத்து மணிக்கு முன்னால தூங்க வேண்டும். இதனால கபம் உத்கிலேசம் ஆகி, தூக்கம் வந்துவிடும். கபத்தில் குருத்வம் (heaviness)ங்கற குணமிருப்பதால, அது தூக்கத்தை உண்டாக்கிவிடும்.

ஒன்பது மணிக்குப் படுத் துட்டா நல்லாத் தூங்கிட லாம். பத்து மணிக்கு மேலே பித்தகாலம் வந்துடும். அலெர்ட்டாகிவிடுவோம். அந்த நேரத்தில தூங்கு றதுக்கு முன்னால என் னென்ன வேலைகளைச் செய்து முடிக்கணும்ங்கற எண்ணம் வந்துடும். நேரம் போகப் போக பித்த காலம் முடிஞ்சு, வாத காலம் ஆரம் பிக்கும்போது, பசி வந்து விடும். ஏதாவது நொறுக் குத்தீனியைச் சாப்பிடு வோம். தூங்கவும் முடியாது, அஜீரணம் ஏற்படும். காலை யில் பசிக்காது, வாய் கசக் கும், பித்தம் கூடிடும்.



• தாரா சிகிச்சை

ஆயுர்வேதம் ஒவ்வொரு பிரக்ருதிக்கும் தக்கவாறு தூக்கம் தேவை என்கிறது. உடல், மனத்தன்மைக்கு ஏற்ப, பிரக்ருதி அமையும் என்று முன்பே கல்கி யில் எழுதியிருந்தோம்.

பொதுவாக வாதத் தன்மையுடையவன், ஆறு முதல் ஏழு மணி நேரம் தூங்குவான். பித்தத் தன்மையுடையவன், ஏழு முதல் எட்டு மணி நேரம் தூங்குவான். கபத் தன்மையுடையவன், எட்டு மணி நேரத்திற்கு மேலும் தூங்குவான்.

வயதாக வயதாக தூங்கும் நேரம் குறையும். ஏனென்றால், வாதத் தன்மை அதிகரிக்கும்.


பிரம்மச்சாரிகள், இல்வாழ்க்கையில பூரண நிறைவை அடைந் தவங்க, மன நிறைவு கொண்டவங்க, ஆனந்தமா இருப்பவங்க, பொதுவா சரியாகத் தூங்கி, சரியாக எழுவாங்கன்னு வாக்படர் சொல்றார்.

தினசரியைன்னு சொல்லக்கூடிய அன்றாட வாழ்க்கையில், காலையில் எழுதலும், சரியான நேரத்துக்குத் தூங்குறதும் முக்கிய மானதாகுது. எந்த நேரத்தில் எழுந்திருக்கிறோம்ங்கறது மிகவும் முக்கியம். இரவு பொதுவாக ஒன்பது அல்லது பத்து மணிக்கு படுத்துடறது நல்லது. காலை வேளையில அலாரமில் லாம, குறிப்பிட்ட நேரத்தில் எழுந்து, நாம பூரண சக்தியுடன் காணப்படணும். காற்றைப்போல,



உணவைப்போல, உறக்கமும் முக்கியமானது. உறக்கத்தின் அளவு, தரம் இரண்டும் முக்கியம். ஏழு முதல் எட்டு மணி நேரம் வரை கிடைக்கும் தடையில்லாத ஆழ்ந்த உறக்கம், மனுஷனுக்கு ஆரோக்கியத்தை அளிக்கும். காலை வேளையில் அலாரம் அடிச்சி எழுந்தா, தேவையான உறக்கம் கிடைக்கலைனுதான் அர்த்தம். அலாரம் இல்லாம இயற்கையாக நாம் எழுந்திருக்கணும். அது பழக்கத்தில வரணும்.

இரவு நேரத்தில உறங்காம இருந்தா, உடல் வறட்சியை ஏற்படுத்தி வாதத் தன்மை ஏற்படும். பகல் நேரத்தில அதிகமாக உறங்கினா, அது கபத்தைக் கூட்டி, கப சம்பந்தமான நோய்களை ஏற்படுத்தும்.



அநித்ரானு சொன்னால், தூக்கமின்மையோ, குறைந்த தூக்கத்தையோ, பூரண ஓய்வை அளிக்காத தூக்கத்தையோ குறிக்கும். **அதிநித்ரானு** சொன்னால், அதிகமான தூக்கத்தையோ, அல்லது எப்பொழுதும் தூங்குமுஞ்சியா இருக்கிறதையோ குறிக்கும். இதில் அநித்ராங்கறது வாதத்தினாலயும் பித்தத்தினாலயும், அதிநித்ராங்கறது கபத்தினாலும் ஏற்படும்.

ஏழுவிதமான உறக்கங்களைப் பற்றி ஆயுர்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கு.

1. காலம்னு சொல்கிற இரவின் தன்மையால வருவது.
2. தமம்ங்கறது அறியாமையால வருவது.
3. கபத்தின் சீற்றத்தால வருவது.
4. உடல் களைப்பினால வருவது.
5. மனக் களைப்பினால வருவது.
6. சுற்றுப்புற மற்றும் வெளிக்காரண சம்பந்தத்தால வருவது (சுகமான படுக்கை, நல்ல காற்றோட்டம்).
7. நோய்வாய்ப்பட்டிருப்பதால் வருவது.

பகல் தூக்கம்

பொதுவாக மனுஷனுக்குப் பகல்ல தூங்க நேரம் கிடைக்

காது. பலர் ஆபீஸ்ல தூங்குவாங்க. வெயில் காலத்தில் வறட்சி அதிகமா இருப்பதாலயும், பகல் நீண்டு காணப்படுவதாலயும், இரவு சுருங்கியிருப்பதாலும், வாதத்தன்மையை மாற்றுவதற்காக பகல் தூக்கம் தேவைன்னு புத்தகங்களிலும் சொல்லப்பட்டிருக்கு. இது வாதத்தைக் குறைக்கும். கபத்தைக் கூட்டும். எனவே கோடையில் இது தேவையாகுது. மற்ற காலங்களில், பகல் உறக்கத்துக்கு ‘நோ’ சொல்லுங்க.

அதே நேரத்தில், பேச்சாளர்கள், அதிகமா பயணம் பண்றவங்க, ‘மது அருந்தறவங்க, அதிக தாம்பத்ய உறவு வைத்துக் கொண்டவங்க, பளு தூக்குறவங்க, பயத்தினால் பாதிக்கப்படுறவங்க, வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டவங்க, குழந்தைகள், முதியவர்கள், க்ஷய நோயினால் பாதிக்கப்பட்டவங்க, உடம்பில புண் உள்ளவங்க, மனநோய் உள்ளவங்க, பகல் உறக்கம் உறங்கலாம்.

திடீரென்று இந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக்கிட்டா, அது கபத்தை அதிகரித்து உடல் குண்டாவதற்கு ஏதுவா அமையும். கபப் பிரக்ருதியா உள்ளவங்க, உடல் பருமன் உள்ளவங்க, அதிக உறக்கத்தைத் தவிர்க்கணும். அதிகமாகக் கபம் உள்ளவங்க, கபத்தை அதிகரிக்கிற எண்ணெய்ப்பசை உள்ள ஆகாரங்களைச் சாப்பிடறவங்க, பகலில் அதிகமா உறங்கக் கூடாது. தொண்டை நோய் உள்ளவங்களும், விஷ நோய் உள்ளவங்களும் பகலில் தூங்குறதைத் தவிர்க்கணும். எண்ணெய் தேய்த்துக் குளிக்கற நாள்லயும் பகல்ல உறங்கக் கூடாது.

இரவு நேரத்தில அதிகமாக விழிக்க வேண்டி வந்தால், அடுத்த நாள் சற்று உறங்கலாம். அதிகமா சாப்பிடாம கொஞ்ச நேரம் பகலில் உறங்குறதும் நல்லது.

அதிக உறக்கம் (Hypersomnia)

அதிகமா உறங்கினா அஜீரணம், பீனஸம்ங்கற ஜலதோஷ நோய், உடல் கனத்துப் போதல், சோம்பேறித்தனம், கொழுப்பினால் ஏற்படும் நோய்கள், பசியின்மை, தலைவலி, இருமல், தொண்டை வலி, சர்க்கரை நோய், சிந்திக்கும் ஆற்றல் குறைதல், இருதய நோய்கள், சோம்பேறித்தனம் போன்றவை வரும்.

இதுக்கு மருத்துவத்தில் ஹைப்பர்சோம்னியானு பெயர். இது வேறு ஒரு நோயோட வெளிப்பாடாகக் காணப்படலாம். ஒரு சில நாட்களில் அதிகமாகத் தூங்குவது ஆரோக்கியமான மனிதர்களுக்கும் சகஜமே. இது உடல் அசதியாலோ, மன அசதியாலோ ஏற்படலாம். சில மனநோய்களிலும் இது காணப்படும். தீவிரமான மனப் பரபரப்பு, மனச்சோர்வு (depression), மயக்கத்தை ஏற்படுத்தும் சில



சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது

– இரண்டு பாகங்கள்

ரூ. 500/–

‘சோ’வின் பிற நூல்கள்

1.	உண்மையே உன் விலை என்ன	37.00
2.	கூவம் நதிக் கரையினிலே - பாகம் - 2	45.00
3.	கூவம் நதிக் கரையினிலே பாகம் - 3	27.00
4.	துக்ளக் படமெடுக்கிறார்	30.00
5.	சம்பவாமி யுகே! யுகே!	30.00
6.	சாதல் இல்லையேல் காதல்	41.00
7.	வெறுக்கத்தக்கதா பிராமணீயம்	30.00
8.	எங்கே பிராமணன்?	85.00
9.	துக்ளக் கேள்வி - பதில் - I	24.00
10.	துக்ளக் கேள்வி - பதில் - II	45.00
11.	சாத்திரம் சொன்னதில்லை	30.00
12.	அதிகப்பிரசங்கம்	32.00
13.	துக்ளக் தலையங்கங்கள்	25.00
14.	யாருக்கும் வெட்கமில்லை	28.00
15.	இன்பக் கனா ஒன்று கண்டேன்	14.00
16.	இந்தியா எங்கே போகிறது?	12.00
17.	மனம் ஒரு குரங்கு	30.00
18.	இந்து தர்மம்	50.00
19.	காமராஜை சந்தித்தேன்	33.00

கவிஞர் வாலி இயற்றிய

புலனடக்கத்தின் பொன்விழா

ஜயேந்திரரின் ஜன்ம சரிதம் - ஜனனம் முதல் ஜகத்குரு வரை

விசிஷ்டாத்வைதியின் பார்வையில்

அத்வைத மகான்

(ஜெயகாந்தன் முன்னுரையுடன் மிக மிக உயர்தரமான தயாரிப்பு)

ரூ.100/- மட்டும்

உலக இலக்கிய வரிசை

தமிழில்: சிவன்

1.	சித்தார்த்தன்	- ஹெர்மன் ஹெஸ்	35.00
2.	ஏழை படும் பாடு	- விக்டர் ஹியூகோ	40.00
3.	ராபின் ஹுட்	- மேத்யூ ஹுக்	45.00
4.	காரமசோவ் சகோதரர்கள்	- தஸ்தயேவ்ஸ்கி	35.00
5.	ராபின்ஸன் குடும்பம்	- யோஹன் டேவிட் வைஸ்	32.00
6.	இலியட்	- ஹோமர்	45.00
7.	ஒடிஸி	- ஹோமர்	30.00
8.	பிரபு மான்டி கிறிஸ்டோ	- அலெக்ஸாண்டர் டூமாஸ்	37.00
9.	டாம்சாயர்	- மார்க் ட்வைன்	37.00
10.	அதிசய உலகில் ஆலிஸ்	- கரோல் லூயிஸ்	45.00
11.	ராபின்ஸன் குருசோ	- டேனியல் டிஃபோ	48.00
12.	மோபிடிக்	- ஹெர்மன் மெல்வில்	45.00
13.	கலிவரின் பயணங்கள்	- ஜோனாதன் ஸ்விஃப்ட்	40.00
14.	அன்னகரேனீனா	- லியோ டால்ஸ்டாய்	35.00
15.	போரும் அமைதியும்	- லியோ டால்ஸ்டாய்	32.00
16.	புதையல் தீவு	- ஆர்.எல். ஸ்டீவென்ஸன்	42.00
17.	இழந்த உலகம்	- ஆர்தர் கானன்டாயல்	32.00
18.	பிராங்கென்ஸ்டைன்	- மேரி ஷெல்லி	40.00
19.	ஹெய்டி	- ஜோஹன்னா ஸ்பைரி	30.00

பி. ஸ்ரீ. ஆச்சார்யா எழுதிய

1.	ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்)	ரூ. 306.00
2.	அறுபடை வீடுகள் (6 தொகுதிகள்)	ரூ. 210.00
3.	திவ்யப் பிரபந்த ஸாரம்	ரூ. 60.00

மற்றும்

4.	அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு	ரூ. 30.00
5.	கந்த புராணக் கதைகள்	ரூ. 40.00
6.	நாரதர் கதை	ரூ. 25.00
7.	நவராத்திரியின் கதைகள்	ரூ. 23.00
8.	ராஜரிஷி விசுவாமித்திரர்	ரூ. 30.00
9.	தசாவதாரக் கதைகள்	ரூ. 32.00

1.	மஹரிஷிகள் வரலாறு – A.V. சுகவனேசுவரன்	– 65.00
2.	வேதம் வணங்கும் தெய்வங்கள்	– 62.00
3.	இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும் – கிருஷ்ணசாமி	– 50.00

அன்றாட வாழ்வில் பகவத் கீதையின் பயன்பாட்டை விளக்குவது

கண்ணன் சொற்படி வாழ்வதெப்படி? ரூ. 50/–

பேராசிரியர் ‘பிலானி’ வி. கிருஷ்ணமூர்த்தி

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை – 600 004. ✆: 24941314



மருந்து மாத்திரைகள் (hypnotic drugs) பயன்படுத்துறது, சில மூளை நோய்கள், இவற்றினால் கூட இந்நோய் வரலாம்.

இப்படி அதிகமா தூங்குறவங்களுக்கு எவ்வாறான சிகிச்சை மேற்கொள்ளணும்?

அதிகமாகத் தூங்குகிறவங்க நல்ல உடற்பயிற்சிகளை மேற்கொள்ளணும். சத்வ குணத்தை அதிகரிக்கிற நல்ல செயல்களைச் செய்யணும், புத்தகங்களையும் படிக்கணும். பேதிக்கு மருந்து சாப்பிடுதல், துளசி, தும்பை போன்றவற்றால் மூக்கிற்கு நஸ்யம் செய்தல், சாம்பிராணிப் புகையை முகர்ந்து கொள்ளுதல், சில அரிஷ்டாஸவங்கள் (சுதர்ஸனாரிஷ்டம் போன்றவை) தூக்கத்தைக் குறைப்பதற்குப் பயன்படும்.

தூக்கமின்மை (Insomnia)



தூக்கம் வராம தவித்தல், அதிக நேரம் தூங்கமுடியாம இருத்தல், தூங்கினாலும் பூரணத் தூக்கம் இல்லாம, சிந்தனையோடு தூங்குதல், தூங்கி எழுந்தால் பூரணத் தூக்கம் கிடைக்கலைங்கற உணர்வு போன்றவை இதில் அடங்கும். மனக் காரணங்களால, உடற்காரணங்களால, அல்லது சில மருந்துகளால கூட இது ஏற்படலாம். மனத்துயரம் இதற்கு முக்கியக்காரணம்





ஆகும். Anxiety, சோகம், பயம் போன்றவற்றிலும், பரீட்சைக்கு முந்திய காலங்கள்லயும், வயசான காலத்திலயும் தூக்கம் வராது.

உறக்கமின்மைங்கறது படுத்த பின்பும் உறக்கம் வராமை, உறங்கும்போது விழித்து விழித்து உறங்கும் தன்மை, கனவுடன் கூடிய உறக்கம்னு, மூணு விதமா காணப்படுது. ஒருவருக்கு ஒரு நாள் தூக்கமில்லாம இருக்குன்னா சிலருக்கு இரண்டு நாட்கள் தூக்கமில்லை, சிலருக்குச் சில வாரங்கள் தூக்கமில்லை, சிலருக்குச் சில மாதங்கள் தூக்கமில்லை!

அதிக மனச்சோர்வு உள்ளவங்க மிக அதிகாலையில் எழுந்திருப்பாங்க, அல்லது காலையில எழுந்திருக்க முடியாம தவிப்பாங்க. உலகின் மறு பகுதியிலிருந்து விமானத்தில் அதிக நேரம் பயணம் செய்து வந்தவர்களுக்கு jetlag ஏற்பட, தூக்க நேரம் மாறுபடும். நைட் ஷிப்ட் உள்ளவங்களுக்குத் தூக்கப் பிரச்னை வரலாம். ஆல்கஹால் சாப்பிடறவங்களுக்கும் இந்தப் பிரச்னை வரலாம். வயதான காலத்தில ஏற்படும் மறதி நோயினாலும் (Alzheimers disease) இந்தப் பிரச்னை

வரலாம்.

உடல்ல வாதம், பித்தம் ஆகியவற்றின் செயல்பாடுகள் அதிகரிப்பதால, தூக்கமின்மை வருது. வாதம் அதிகரிக்கும் பொழுது சிந்தை வளருது. சிந்தை வளரும்பொழுது கவலை அதிகரிக்குது. இதனால பரபரப்பும் stressம் ஏற்படுது.

தூக்கமின்மை ஒரு முக்கியப் பிரச்னையே. சரியான நேரத்தில சரியான அளவு தூங்கலைனா, உடம்பு வலி ஏற்படும், தலைவலி, கொட்டாவி, சோம்பல், அசதி, மற்றும் தலைசுற்றல் ஏற்படும், குறித்த நேரத்தில் பசி வராது. இதனால வாதம் அதிகரிச்சு, வாதத்தினால் ஏற்படுகிற நோய்கள் வரும்.

இதுல முதல் இரண்டு வகையான தூக்கமின்மைங்கறது, சுற்றுப் புறச் சூழல் வேறுபாடு இருந்தாலோ, அதிகமான சூடு இருந்தாலோ, வேலையில் பிரச்னையிருந்தாலோ, மருந்துகளின் பின்விளைவினாலேயோ ஏற்படலாம்.

தைராய்டு நோய் மற்றும் மூட்டுவாதத்தின் வலி காரணமாகவும் தூக்கமின்மை ஏற்படுது.



• கையே தலையணை!

தூக்கமின்மைக்குப் பயன்தரும் மருந்துகள்


- பாலில் கற்கண்டு சேர்த்துக் குடிப்பது.
- கரும்புச்சாறு.
- ஆட்டு மாமிசத்தால் செய்த சூப்புகள்.
- சர்க்கரையினாலான உணவுகளையும், மாவுப் பொருட்களையும் சேர்த்து உண்பது.
- உளுந்தினால் ஆன ஆகாரங்கள், தயிர் மற்றும் தயிர் சேர்ந்த உணவுப் பொருள்கள் சாப்பிடுவது.
- உடம்பில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது.
- தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது.
- ஷவரில் குளித்தல், நறுமணமுள்ள நல்ல சுகமான படுக்கையில் படுப்பது. இதுவும் தூக்கத்திற்கு நல்லதே.





- உடம்புக்கு மசாஜ் செய்வது.
- அடபதியன் கிழங்கை பாலில் காய்ச்சிக் குடிப்பது.
- பால் குடிப்பது.
- பாலில் ஒரு சிட்டிகை ஜாதிபலச் சூரணம், தோல் நீக்கப்பட்ட 2 பாதாம், 2 ஏலக்காய் சேர்த்துச் சாப்பிடுவது.
- 5 கிராம் வல்லாரை சூரணம் பாலில் சாப்பிடுவது.
- 5 கிராம் அஸ்வகந்தா சூரணம், ஜடாமாம்சி மிகவும் நல்லது.
- எருமைப்பால், எருமைத்தயிர் மிகவும் நல்லது.
- பாத அப்யங்கம் மிகவும் நல்லது (காலில் எண்ணெய் போட்டு தேய்த்தல்)
- க்ஷீரபலா எண்ணெய் தலைக்குத் தேய்த்துக் குளித்தல் நல்லது.
- தான்வந்தரம் தைலத்தை, தலைக்குத் தேய்த்துக் குளித்தல் மிகவும் நல்லது.
- சுத்தமான பசுநெய் ஒரு சொட்டு எடுத்து, இரண்டு மூக்கிலும் ஒவ்வொரு சொட்டு, உறங்குவதற்கு முன்பு விட்டுக் கொள்வது நல்லது.
- சத்தமில்லாத அறை, மெல்லிய ஒலி இவை இருந்தாலும் தூக்கம் வரும். தூங்கும் இடம் மிக முக்கியமானது.
- சிரோ தாரை, சிரோ வஸ்தி, தலைப் பொதிச்சல் என்று சொல்லக்கூடிய, தலையில் போடுகின்ற பத்து போன்றவை, நாட்பட்ட தூக்கமின்மைக்குப் பலன் தரும்.

மினி கல்கி



தூங்கும் போது மூச்சு தடைப்படுதல் (sleep apnoea)

இந்த sleep apnoea நோய் தொண்டையிலோ, அல்லது மேல்முக மூச்சுக்குழாயிலோ தடையேற்பட்டால் வரும். சில நேரங்கள்ல மூளையில் உள்ள குறைபாடுகளாலும் பிரச்னை ஏற்பட்டு வரலாம். இந்நோய் பொதுவாக உடல் பருத்தவர் களுக்கு ஏற்படும். பெண்களுக்குக் கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். புகைபிடித்தல், புகையிலை, மதுவகைகள் பயன் படுத்துதல், சில நுரையீரல் நோய்கள் போன்ற காரணங்களால் இது ஏற்படலாம். சில குடும்பத்துல எல்லோருக்கும் பாரம்பரிய மாக இந்நோய் காணப்படுது. இந்த மூச்சுத் தடைப்படுதல், உறங்கும் பொழுது ஏற்படறதால நோயாளியின் அருகில் படுக்கிறவர், இவரை நன்கு உணர்ந்தவர், இந் நோயைப் பற்றி டாக்டர்ட்ட எடுத்துச் சொல்லலாம். இந்நோயாளிகள் நல்லா குறட்டை விடுபவர்களாக இருப்பாங்க. குறட்டையின் போது மூச்சுத் தடை ஏற்படும், திடீரென்று விழித்துக் கொள்வாங்க. இதனால் பூரணத் தூக்கம் கிடைக்காம, காலைல சுறுசுறுப்பா இல்லாமல் சோர்ந்து போய் தெரிவாங்க. இதன்காரணமா இவர்களுக்குத் தலைவலி, மனச்சோர்வு ஏற்படலாம். இவங் களுக்குச் சரியான சிகிச்சை அளிக்காமப் போனா, இருதயநோய்களோ, நுரையீரல் நோய்களோ வரலாம்.

நோயாளி, நோயின் தன்மையை எடுத்துரைக்கும் விதத்துல, நாம நோயை நிர்ணயம் பண்ணுகிறோம். sleep study laboratoryங்கற உறக்கத்தின் ஆழ்ந்த நிலையைச் சோதனை செய்கிற பரிசோதனைக் கூடங்கள், நம் நாட்டிலயும் வந்திருக்கு. இதைத் துல்லியமா கண்டறி யற பரிசோதனைகள் இருக்கு.

சில நேரங்கள்ல இவங்களுக்கு Artificial breathing deviceங்கற, இலகுவா மூச்சை விடறதுக்கான செயற்கை யந்திரம் பயன்படுத் தப்படும். சில நேரங்கள்ல, ஆக்ஸிஜன் மாஸ்க் வச்சு மூக்கின் வழியா ஆக்ஸிஜனை ஏற்றுவாங்க. சில நேரங்கள்ல, தொண்டையில டிரக்கியா பகுதிகள்ல அறுவை செய்ய வேண்டியதும் வரலாம். இவை யெல்லாம் மிகவும் அரிதா நடைபெறுவது.

2. உறக்கத்திலே நடத்தல் (Somnambulism)



இது பருவ வயசிலயும், சிறு வயசிலயும் காணப்படும். அரை உணர்வோட இவங்க நடப்பாங்க.



• ஆட்டுக்குட்டிகளோட படுத்தாலும் தனி சுகம்தான்.

நடக்கிறோம்ங்கறது இவங்களுக்குத் தெரியாது. மூளை விழித்திருக்கும் நிலையில் செயல்படுவது மாதிரியே செயல்படும். அப்படி இவங்க நடக்கும் போது, சுவர் அல்லது எதிலாவது மோதி இடித்துக் கொள் வாங்க. இவங்க நடப்பதைப் பார்த்தா அப்படியே படுக்கையில் படுக்க வைக்கணும். உறங்கும் அறையில் மெல்லிய விளக்கு ஒன்றை எரிய விட்டால் நல்லது. வழியில் இடித்துக் கொள்ளாதவாறு நாம் பார்த்துக் கொள்ளணும். ஜன்னல்களையெல்லாம் பூட்டி வைக்கணும்.

3. துர்ச் சொப்பனம்

கிரியச்சலிலும், பயத்திலும், மன அசதியினாலும், மதுபானத்தினாலும் இது போன்ற கனவுகள் வந்து தூக்கமின்மையை உண்டாக்குது.

4. கால் அசதி நோய் (Restless leg syndrome)

ஐம்பது வயசுக்கு மேற்பட்டவங்களுக்குப் பொதுவா இந்நோய்

மினி கல்கி



வரும். மன அழுத்தம் அதிகம் உள்ளவங்களுக்கு இது அதிகமா இருக்கும். இவங்களுக்கு காலில் அசதி ஏற்படும். நரம்புகள் சுருட்டி இழுக்கும் (கொரக்களி). திடீரென்று கால் நடக்க முடியாத ஒரு நிலைமை வரும். வாதப்பிரகோபமே இதற்குக் காரணம். இவங்களுக்கு காலில் அப்யங்கம் செய்யறது, ஸைசராதி (கறுங்குறிஞ்சி வேர்) கஷாயத்தைக் கொடுக்கறது, அஸ்வகந்தாதி சூரணம் கொடுக்கறது, எண்ணெய்ப் பிழிச்சல், போன்றவை பலனளிக்கும்.

5. அதிநித்ரா!

அதிநித்ரா (narcolepsy) ஓர் அபூர்வமான நோய். திடீரென்று பேசிக்கிட்டிருக்கும்போதே இந்த ஆசாமிகள் உறங்கிடுவாங்க. இவங்க எவ்வளவு தூங்கினாலும் தூக்கம்ங்கற வேகத்தை அவங்களால் கட்டுப்படுத்த முடியாது. கார் ஓட்டும்போதே, பேசிக் கொண்டிருக்கும் போதே அப்படியே உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிடுவாங்க. மூளையில் ஏற்படற சில குறைபாடுகளால் இந்நோய் ஏற்படலாம், (மூளையில் உறக்க நிலையை நிர்ணயிக்கும் இடங்களில் ஏற்படும் குறைபாடுகள்). இதனால பெரிய ஆபத்து இல்லைன்னாலும் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருக்கு.

6. Cataplexy

மன அழுத்தத்தினாலோ, பயத்தினாலோ, சந்தோஷத்தினாலோ, ஆச்சரியத்தினாலோ, உறக்க நிலையில் வரும் பக்கவாத நோய் இது. இந்த நோய் உள்ளவங்க கையில் இருப்பதைத் தவற விட்டுடுவாங்க. நொண்டி நடப்பாங்க. இதற்கு sleep paralysisனு பெயர்.

தூக்கத்தால் ஊக்கம் பெற...

மிகவும் அதிகமா யோசிச்சுட்டே இருக்கறவங்க, தியானம் பண்ணலாம். சிந்தனை தெளிவடையும். சாப்பாட்டுல பொதுவா காரம், புளிப்பு, உப்பு



அதிகமாச் சேர்க்கக் கூடாது.

தூக்கம் வராதவங்க காபியைத் தவிர்க்கணும், இதில் உள்ள caffeineங்கற பொருளானது தூக்கத்துக்கு உகந்ததல்ல. சாக்லெட், சோடா, டீ போன்றவற்றையும் இரவு நேரத்தில் தவிர்த்திடுங்க. இவை தூங்குவதைத் தள்ளிப் போடும். இரவில் நடுவில் எழுவதற்கும் உதவி செய்யும். படுத்துக்கிட்டே டீவி. பார்க்கிறதையும், படுத்துக்கிட்டே படிப்பது போன்றவற்றையும் தவிர்க்கணும். உறங்கும் முன் ஆன்மீகப் புத்தகங்களையோ, நல்ல விஷயங்களையோ பார்த்து விட்டுத் தூங்குறது நல்லது. தூங்குவதற்கு முன்னால அன்றாடம் செய்த செயல்களை நினைத்துப் பார்த்து, நாளை செய்ய வேண்டியதையும் நினைத்துப் பார்க்கிறது நல்லது.




• அமுக்குரா என்ற அஸ்வகந்தா செடி



• நஸ்யம்

தூங்குவதற்கு மூன்று அல்லது நான்கு மணிநேரம் முன்னால, உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்கணும்.

'மது அருந்திவிட்டு உறங்குறது பல பின்விளைவுகளுக்குக் காரணமா இருப்பதால, அதைத் தவிர்க்கணும். உறக்க நோய் உள்ளவங்க, குறட்டை விடறாங்களா, கால்களை அசைக்கிறாங்களா, மூச்சுவிடும்பொழுது ஏதாவது தடை ஏற்படுகிறதா, அசாதாரணமா அசைவுகள் ஏதும் தெரியுதாங்கறதை பக்கத்தில் உள்ளவங்களை கவனிச்சு சொல்லச் சொல்லணும். உறக்க நோய்களைக் கண்டறிய, இது உதவும்.



• வல்லாரை

சிரஞ்சீவி கதை

— அமரர் கல்கி

பல பல எண்ணங்களினால் சில காலமாக அலைக்கப் பெற்று வந்த ஸ்ரீமான் மார்க்கண்ட முதலியார் இன்று ஒரு முடிவான தீர்மானத்துக்கு வந்தார். "ஆறு



• ஆயில் மசாஜ்

மினி கல்கி



மாதம் ஒழுங்கான வாழ்க்கை நடத்துவது; அதற்குப் பிறகு தேக நிலைமைக்குத் தகுந்தபடி யோசித்து முடிவு செய்வது" என்பதுதான் அந்தத் தீர்மானம்.

இந்தத் தீர்மானத்துக்கு வந்ததும் முதலியார் சட்டென்று எழுந்திருந்து, நிமிர்ந்து உட்கார்ந்து, ஒழுங்கான வாழ்க்கைக்குரிய திட்டங்களை காகிதத்தில் எழுதத் தொடங்கினார்:

1. ஆகார நியமம் - விடமின் - ஏ.பி.ஸி.டி.இ.கீரை - (ரொம்ப முக்கியம்) - டொமாடோ (பச்சை) - இராத்திரி கோதுமை ரொட்டி.

2. தொட்டி ஸ்நானம் (தினம் அரைமணிக்குக் குறையாமல்)

3. யோகாஸனம் - பத்மாஸனம், சிரஸாஸனம், சர்வாங்காஸனம். (முதலில் எது ஆரம்பிக்கலாம்?)


4. பிரணாயாமம் (பூரகம் எட்டு, கும்பகம் ஆறு, ரேசகம் பத்து)

5. தேகாப்பியாசம். (பத்து தண்டால், பதினைந்து பஸ்கி. வாரத்துக்கு இரண்டு தண்டாலும் மூன்று பஸ்கியும் அதிகமாக்கலாம்) மாலையில் கடற்கரைக் காற்று (மிக மிக அவசியம்)

6. மருந்து - மகரத்வஜம், சியவனப்ராஸம் (அவசியந்தானா?)

ஸ்ரீமான் மார்க்கண்ட முதலியார் புத்தகம் படித்து வீணாகக் கண்ணைக் கெடுத்துக் கொள்வது கிடையாது என்று சொல்லியிருக்கிறேன். தேகாரோக்கியத்தைப் பற்றி புத்தகங்கள் மட்டும் இதற்கு விலக்கு. அவருடைய பழைய அலமாரியில் இருந்த சுமார் நூறு புத்தகங்களும் தேகத்தைப் பற்றியவைதான். இயற்கை வைத்தியம் சம்பந்தமாக, டாக்டர் கூன் என்னும் ஜெர்மானியர் புத்தகம் முதல் புதுக்கோட்டை லக்ஷ்மண சர்மா புத்தகம் வரையில் அவர் அலமாரியில் இருந்தன. மருந்து வைத்தியம் சம்பந்தமாக மணிசங்கர் கோவிந்தஜியின் 'காம சாஸ்திரம்' முதல், வேங்கடரமணா டிஸ்பென்ஸரி மருந்து கேட்லாக் வரையில் அவர் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். இன்னும் யோகாஸனங்கள், தேகாப்பியாச முறைகள், மனோ சிகிச்சை முறைகள், மெஸ்மெரிஸ ஹிப்னாடிஸ வித்தைகள் ஆகியவற்றைப் பற்றிய புத்தகங்களும் அவரிடம் இருந்தன.

முதலியாருக்கு முப்பதாவது வயதிலேயே இந்த மாதிரி பிரமை ஏற்பட்டது. அப்போதிருந்து ஏதாவது ஒரு புதிய புத்தகம் ஒரு புதிய சிகிச்சை முறையைப் பற்றித் தெரிய வந்ததும் அதை உடனே அனுஷ்டிக்கத் தொடங்குவார். ஆனால் எல்லாம் நாலைந்து நாளைக்குத்தான்; பிறகு ஏதாவது இடையூறு வரும். அசிரத்தை ஏற்பட்டு விடும். இவ்வாறு வருஷத்திற்கு நாலைந்து தடவை அவர் 'ஒழுங்கு பட்ட வாழ்வு' ஆரம்பித்து, சில தினங்களில் விட்டுவிடுவது வழக்கம்.



கட்டுரையை முழுமையாகப் படிக்க
www.kalkionline.com பார்க்கவும்.



ஜீவாமிர்தம் சீக்ரெட்!

மைசூர் சமஸ்தானத்தில், பெங்களூர் தியாசபிகல் சொசைடியின் ஆயுர்வேத வைத்திய சாலையில், தலைமை டாக்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அந்த இளைஞர். அப்போது திடீரென்று ஊர் முழுவதும் பிளேக் நோய்! மைசூர் அரசு பிளேக் நோயிலிருந்து, மக்களைக் காப்பாற்ற அந்த இளைஞரின் உதவியை நாடியது. ஆயுர் வேதத்தில் ஆழ்ந்த ஞானமும், நல்ல அனுபவமும் கொண்டிருந்த அந்த இளைஞர், உடனடியாகச் செயலில் இறங்கினார். 'ஹைமாதிபானகம்' என்ற மருந்தை உருவாக்கி, மக்களுக்குப் பெரிய அளவில் விநியோகிக்க ஏற்பாடு செய்தார். மைசூர் சமஸ் தான மக்கள், பிளேக் நோயிலிருந்து தப்பித்தார்கள். அவரது சேவையைப் பாராட்டி, பிரிட்டிஷ் வைஸ்ராய், 'வைத்யரத்னா' என்ற பட்டம் அளித்து கௌரவித்தார். பல்வேறு சமஸ்தான ஆட்சியாளர் களும் பாராட்டி, விருதுகள் அளித்தார்கள்.

இருபத்தி மூன்று வயதிலேயே பெயரும் புகழும் பெற்ற அந்த இளைஞர், பண்டிட் கோவிந்தாச் சார்யலு! ஆந்திராவின் மசூலிப்பட்டினத்தைச்

சேர்ந்தவர். சிறுவயது முதலே அவருக்கு ஆயுர்வேதத்தில் நாட்டம். கால்நடையாகவே இந்தியா முழுவதும் பயணம் செய்தவர். பலதரப்பு மக்களையும் சந்தித்து, அவர்கள் கையாளும் பாரம்பரிய மருத்துவ முறைகளை அறிந்து



• தேசிகாச்சார்யலு

கொண்டவர். மைசூர் மகாராஜா நடத்திய ஆயுர்வேத பாடசாலையில் உருவாக்கப்பட்ட கோபாலாச்சார்யலு, சென்னையில் முதல் ஆயுர்வேதக் கல்லூரியை நிறுவியவர். அதன் வழியே நூற்றுக்கணக்கான ஆயுர்வேத டாக்டர்களை உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் அவர் 1898ல் துவக்கிய நிறுவனம்தான் ஆயுர்வேதாஸ்ரமம். மருத்துவ உலகில் செஞ்சுரி அடித்துவிட்டு, ஸ்டிராங்காக சேவை செய்துகொண்டிருக்கிறது. இன்று ஆயுர்வேதாஸ்ரமத்தை நிர்வகிப்பவர் கோவிந்தாச்சார்யலுவின் நான்காவது தலைமுறையான தேசிகாச்சார்யலுவும் அவரது மனைவி ஜெயஸ்ரீயும்!

“இன்று ஆயுர்வேதாஸ்ரமத்தின் தயாரிப்புகளாக லேகியம், தைலம், சூரணம், சிரப் என்று மொத்தம் ஐம்பத்தியோரு மருந்துகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. தவிர, எங்களிடம் மற்ற ஆயுர்வேத தயாரிப்புகளும் கிடைக்கும். எங்களது தயாரிப்புகளில் மிகவும் புகழ் பெற்றது, ஜீவாமிர்தம். இது நரம்பு மண்டலத்துக்கான சத்தான மருந்து. தினம் இரண்டு டீஸ்பூன் சாப்பிட்டால் திசுக்கள் செம்மையடையும்; நரம்புகள் புத்துணர்ச்சி பெறும்; தசைகள் வலுவடையும், முதுமையைத் தவிர்க்கும்; எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். அசுவகந்தா, தண்ணீர்விட்டான் கிழங்கு, சபேத் முஸ்லி, அதிமதுரம், உட்பட பல்வேறு மூலிகைகளைக் கொண்டு நாங்கள் உருவாக்கியிருக்கும் மிகப் பிரத்யேகமான மருந்து இது.

“அடுத்தபடியாக, பெண்கள் தங்களுக்கு ஏற்படும் பலவிதமான பிரச்னைகளிலிருந்தும் நிவாரணம் பெற, மிகவும் ஏற்ற மருந்து இது. தினம் இரண்டுவேளை, இரண்டு ஸ்பூன் சாப்பிடலாம். குழந்தைகளின் சீரான வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் உதவும் மருந்து பாலபிரசா. மொத்தத்தில் சாதாரணத் தலைவலி, ஜலதோஷம் முதல் அதிதீவிர நோய்கள் வரை, அனைத்துக்கும் ஆயுர்வேதம் மூலம் தீர்வு காணலாம்” என்கிறார் தேசிகாச்சார்யலு.

இவர்களது ஸ்பெஷல் தயாரிப்பான ஜீவாமிர்தம் உருவாகும் முறை பற்றிக் கேட்டால், ‘அது சீக்ரெட்’ என்கிறார்கள்.

- கௌதம் ராம்

"ஆந்திராவைச் சேர்ந்த கல்லூரி மாணவன் கதிப். அப்பா, அம்மா இருவருமே தொழிலதிபர்கள். சதா பிஸினெஸ் என்று பறப்பவர்கள். நிறையப் பணம்; வேண்டாத சகவாஸம்; கண்காணிக்க யாருமில்லை. போதைப் பழக்கம் சுலபமாகத் தொற்றிக் கொண்டு விட்டது. பெற்றோருக்கு அந்த விஷயம் தெரிய வந்தபோது, போதைக்கு அடிமையாகிவிட்டிருந்தான். தனியே விட்டால் தற்கொலை செய்து கொள்வான் என்ற நிலையில், கதிப் இங்கே கொண்டு வரப்பட்டான். முதலில் சிகிச்சைக்கே முரண்டு பிடித்தான். ஆறு மாத காலம் மனத்தையும் உடலையும் சுத்திகரிக்கும் சம்பூர்ண காயகல்ப சிகிச்சை தரப்பட்டது. தற்போது கதிப் நல்ல குணம் பெற்றதோடு, தனது தந்தையின் வியாபாரத்திலும் தீவிரமாகிவிட்டான்" என்றார் சென்னை, முகப்பேர் ரோஹிணி நல வாழ்வு மையத்தின் தலைமை மருத்துவர், டாக்டர் ஜி. செந்தில்வேல்.

போதை மாறுது! பாதை தெரியுது!



• வாழை இலைக் குளியல்

சிகரெட், பான்பராக், மது, கஞ்சா, பிரவுன்ஷுகர் போன்ற போதை வஸ்துகளுக்கு அடிமையானவர்களுக்காகவே, 'மைண்ட், பாடி ரீஜுவினேஷன்' என்கிற விசேஷ சிகிச்சை இங்கே தரப்படுகிறது.

"இது போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையானவர்களை, சட்டென்று நிறுத்தச் செய்தால், 'வித் ட்ராயல் சிம்டம்ஸ்' தோன்றி, நோயாளிகள் மிகுந்த பாதிப்பு அடைவார்கள். எனவே, மெள்ள மெள்ள தீய பழக்கத்தைக் களையச் செய்வோம். நோயாளியைப் பற்றிய முழு விவரம் அறிந்து, அவரிடமும், குடும்பத்தாரிடமும் கவுன்ஸலிங் நடத்துவோம். பின்பு மனஇறுக்கம் நீக்கும் யோகாசனப் பயிற்சி தரப்படும். அடுத்தகட்டமாக, டீ-டாக்ஸிஃபிகேஷன் சிகிச்சை தொடங்கும். கூடவே எண்ணங்களை மாற்றும் மனோதத்துவ சிகிச்சை. குடியைக் கண்டாலே வெறுப்பு ஏற்படும் அளவுக்கு மனத்தையும் மாற்றும் வீரிய மருந்துகள் உள்ளுக்குத் தரப்படும்" என்கிறார் டாக்டர் கல்யாணசுந்தரம்.

இறுதிக்கட்டமாகத் தரப்படும் பஞ்சகர்மா



• நஸ்யம்

சிகிச்சை பற்றி, ஆயுர்வேத சிரோன்மணி டாக்டர் ஜயப்பன் சிலாகித்துச் சொன்னார்:

'தத்வம், ஆத்மா, சரீரம்
த்ரைய மேவ த்ரி
தண்ட வத்'

சரஹ சம்ஹிதை.

ஆயுர்வேதத்தைப் பொறுத்தவரை, சிகிச்சை என்பது ஆத்மா, மனசு, உடம்பு மூன்றுக்கும் சேர்த்தே தரப்படுகிறது. ஆத்மா என்பது எஜமானன். உடம்பு என்பது தேர். மனசு என்பது கடிவாளம். ஐம்புலன்கள்தான் குதிரைகள். ஆத்மா சொல்லும் இடத்துக்கு உடம்பு செல்ல, மனம் இயங்க, குதிரைகள் ஒத்துழைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருங்கிணைந்த சிகிச்சை முறைதான் 'பஞ்சகர்மா'. இந்த சிகிச்சை முறையில்

* சிரோதாரா





* நவரைக்கிழி



ஏராளமான நோய்களைத் தீர்க்க முடியும். குறிப்பாக, போதைப் பழக்கங்கள் உள்ளவர்களுக்கு சிரோதாரா, நவரைக்கிழி, வாழை இலைக் குளியல், நஸ்யம் போன்றவை மிகச் சிறந்த பலன்களை அளிக்கின்றன.

குடிப்பழக்கத்துக்கு சிகிச்சை தரப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அவருக்குக் கடுமையான தலைவலி, வயிற்று வலி இருக்கலாம். தூக்கம் வராமல் தவிக்கலாம். நரம்புத் தளர்ச்சி இருக்கலாம். எந்த பேஷண்ட்டுக்கு, எப்படிப்பட்ட சிகிச்சை என்பது வைத்தியர் ஆலோசித்துச் செய்ய வேண்டியது. இருந்தாலும் பொதுவான சில குறிப்புகள் தரலாம்.

சிரோதாரா:- சிற்றாமுட்டி, க்ஷீரபலா, நல்லெண்ணெய், பால், சந்தனாதி தைலம், ஹிம சாகரத் தைலம் போன்றவற்றை நோயாளியின் தன்மைக்கும், நோயாளியின் நிலைமைக்கும் ஏற்ப தேர்ந்தெடுத்து சிகிச்சை தரப்படும். நோயாளி மிகவும் ஓய்வாகப் படுக்க வைக்கப்பட்டு, மிதமான சூட்டில், தைலம், சிறு ஒழுக்காக, சீராக அவரது நெற்றியில் ஊற்றப்படும். டென்ஷனைக் குறைத்து, தூக்கம் தரும் அற்புத சிகிச்சை இது.

நவரைக்கிழி:- 'கிழி' என்றால் சிறு மூட்டை. நவரை என்பது ஒருவகை அரிசி. பசும்பால், மூலிகைச் சாறு கொண்டு தயாரிக்கப்பட்ட, குழைவான சாதத்தால், வெதுவெதுப்பாக நரம்புகளின் பாதைகளின் மேற்புறமாகத் தேய்க்கப்படும். அரிசிக்குப் பதிலாக எள்ளு, கோதுமை, கொள்ளு, உளுந்து போன்றவையும் பயன்படுத்தலாம். நரம்புத் தளர்ச்சி நீங்கி, உடல் போஷாக்கு பெறும்.

வாழை இலைக் குளியல்:- உடல் முழுக்க 'ரோஹிணி கல்பா' என்ற தைலத்தைத் தடவி, வாழை இலைகளால் கட்டி, இருபது நிமிஷம் வெயிலில் படுக்க வைப்போம். உடம்பிலிருந்து கெட்ட நீர் வடிந்து புத்துணர்ச்சி கிடைக்கும். ரத்தம் சுத்தமாகும்.

"இது தவிர, 'நஸ்யம்' எனப்படும் நாசித்துவார சிகிச்சையும் நல்ல பலன் அளிக்கிறது. இது போன்ற ஒருங்கிணைந்த சிகிச்சை முறையில், தீயபழக்கங்களுக்கு அடிமையானவர்கள் ஆறே மாதங்களில் உடல் ரீதியாகவும், மனோரீதியாகவும் முழுமையாக குணமடைகிறார்கள். போதையில் தள்ளாடிய கால்கள், புதிய பாதையில் நடக்கலாம் என்கிறார்" டாக்டர் ஐயப்பன், மிகுந்த நம்பிக்கையோடு.

- டாலி

பூந்தமல்லியை அடுத்த நசரத்பேட்டையிலுள்ள ஜயேந்திர சரஸ்வதி ஆயுர்வேதக் கல்லூரியில் நாம் முதலில் சந்தித்த மாணவி பூம்பாவை. கிருஷ்ணகிரியைச் சேர்ந்தவர். நாலரை ஆண்டுப் படிப்பை முடித்துவிட்டு, ஓராண்டு ஹவுஸ் சர்ஜனாக இருக்கிறார். தேர்வில், பல்கலைக் கழகத்திலேயே இரண்டாவதாக வந்தவர்.

"ஏன் ஆயுர்வேத மருத்துவம் படிக்க வந்தீர்கள்?"

"என் தாத்தா ஆயுர்வேத மருத்துவராக இருந்தார். எனக்கும் அதில் ஆர்வம் இருந்தது. எனவே இந்தக் கல்லூரிக்கு வந்தேன்!"

"சம்ஸ்கிருதமும் உண்டாமே?"

"ஆமாம். சம்ஸ்கிருதம் ஆயுர்வேதப் படிப்புக்கு அவசியம். ஆனால் ரொம்ப ஈஸியாகத்தான் இருக்கிறது!" என்றார் பூம்பாவை.

1995ல் துவங்கப்பட்ட இந்த ஆயுர்வேதக் கல்லூரி, காஞ்சியை அடுத்த ஏனாத்தூரிலுள்ள சந்திரசேகரேந்திர விசுவ மகா வித்யாலயாவின் (பல்கலைக் கழகம்) கீழ் வருகிறது. இதன் தற்போதைய முதல்வர் டாக்டர் முரளீதரன், கோட்டக்கல் ஆர்யவைத்யசாலையில் பணியாற்றிய, பழுத்த அனுபவம் மிக்கவர்.

"நாலரை ஆண்டுக் கல்லூரிப் படிப்பும், ஒரு வருட 'இன்டர்ன்ஷிப்பு'மாக, மொத்தம் ஐந்தரை ஆண்டுகள். இதை முடித்த பிறகு BAMS பட்டம் வழங்கப்படுகிறது. புதுதில்லியில் உள்ள சென்ட்ரல் கவுன்சில் அஃப் இண்டியன் மெடிசினுக்கு, பட்ட மேற்படிப்பு வசதியைத் தொடர வழி செய்ய வேண்டுகோள் அனுப்பியிருக்கிறோம்!" என்றார் டாக்டர் முரளீதரன்.

BAMS என்றால் பேச்சிலர் அஃப் ஆயுர்வேதிக் மெடிசின் அண்ட் சர்ஜரியாம்.

"ஆயுர்வேத சிகிச்சையில் சர்ஜரி உண்டா?"

"பைல்ஸ், ஃபிஸ்டுலா போன்றவற்றுக்குச் சஸ்திர சிகிச்சை உண்டு. அதை க்ஷார சூத்ரம் என்பார்கள். இங்கே அதை மிக நவீன முறையில் செய்கிறோம். இந்த முறையைத்தான் இப்போது வருகிற புதிய பாடப் புத்தகங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்."



ஆயுர்வேதத்தில்

சாதாரணமாக ஒவ்வோர் ஆயுர்வேதக் கல்லூரியிலும், முப்பது மாணவர்களுக்கு மேல் சேர்த்துக் கொள்ள முடியாது. ஆனால் இந்தக் கல்லூரியில் சிறப்பு அனுமதி வழங்கப்பட்டு, ஐம்பது மாணவ - மாணவியர், ஒவ்வோர் ஆண்டும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.


குஜராத், மகாராஷ்டிரா, ஜம்மு காஷ்மீர், பீஹார், ஆந்திரா தவிர, கேரளத்திலிருந்தும் நிறைய மாணவ - மாணவியர்! தென் ஆப்பிரிக்காவிலிருந்து

கூட ஒருவர் இங்கு வந்து படிக்கிறார்.

கல்லூரி மிகப் பெரிய வளாகத்தில் அமைந்திருக்கிறது. இருபத்தி ஏழு ஏக்கர் பரப்பு. இதில் ஐந்து ஏக்கர்களுக்கு மேல் மூலிகைப் பண்ணை!



* மாணவர்கள்



* முரளீதரன்



சர்ஜரி உண்டா?

* கல்லூரி

“ப்ளஸ் டு தேர்வில் வெற்றி பெற்ற, P.C.B குரூப் மாணவ மாணவிகள் கல்லூரியில் சேரலாம். ஒன்றரை வருடம் சம்ஸ்கிருத பாடம் உண்டு. அகடமிக் ஆண்டு ஜூன் மாதமே தொடங்கினாலும், அட்மிஷன் ஆகஸ்ட் மாத வாக்கில்தான் முடியும். கல்லூரிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் முப்பத்து மூன்று பேர். பிற துறைகளில் உள்ளவர்கள் முப்பத்தெட்டு பேர். நூற்றி ஐம்பது படுக்கைகள் கொண்ட நவீன மருத்துவமனை இருக்கிறது. பதினான்கு தனித் தனித் துறைகள் இருக்கின்றன.

அத்வானி, முரளி மனோகர் ஜோஷி என்று இங்கு வராத விஐபிக்கள் இல்லை! ஜயேந்திரர் மூன்று நாளைக்கு ஒருதடவை வந்து எல்லாற்றையும் விசாரிப்பார்” என்கிறார் கல்லூரி முதல்வர்.

பக்கவாதத்தினாலும் , நரம்பு நோயாலும், விபத்தினாலும் பாதிக்கப்பட்டும் வரும் நோயாளிகளுக்கு வசதியாக, மருத்துவக் கல்லூரி வாசலில் பேருந்துகள் இரண்டு நிமிடம் நின்று, போனால், எளிய மக்களுக்கு வசதியாக இருக்கும்!

- எஸ்.வி.என்.

மூட்டு வலிக்கு டாட்டா!

அறுபது வயதுத் தாத்தா ஒருவர் உயரத்திலிருந்து ஹைஜம்ப் சாம்பியன் மாதிரி குதிக்கிற விளம்பரம் ஒன்றை, டிவியில் பார்த்திருப்பீர்கள். தாத்தா குதிக்கிறபோது, உரக்கச் சொல்லும் வார்த்தை 'ஆர்த்தோ க்யூர்!'

அது என்ன ஆர்த்தோ க்யூர்?

ஆயுர்வேத மூட்டு வலி நிவாரண மாத்திரை, மற்றும் தைலத்துக்குத்தான் அந்தப் பெயர். ஆர்த்தோ கியூர் மருந்துகளைத் தயாரித்து, விற்பனை செய்து வரும் கியூர்வெல் பார்மா நிறுவனத்தின் உரிமையாளர் சுதர்சனிடம் கேட்டோம்.




• சுதர்சன்

"பொதுவாக எந்த வயதுக்காரர்களுக்கு மூட்டுவலிப் பிரச்னை வருகிறது?"

"நாற்பது வயதைத் தாண்டினால், பத்தில் நாலு பேருக்கு ஆர்திரைடிஸ் என்கிற மூட்டு வலித் தொல்லை வருகிறது. பொதுவாக மூட்டுகளில் ஏற்படுகிற தேய்மானம், மூட்டுகளில் இருக்கிற லூப்ரிகன்ட் திரவம் வற்றிப் போவது போன்ற சில காரணங்களால், மூட்டுகளில் உராய்வு அதிகமாகி, மூட்டுவலி ஏற்படுகிறது."

"மூட்டுவலிக்குத் தான் நாட்டில் ஏராளமான மாத்திரைகள் கிடைக்கின்றனவே?"

"ஆங்கில மருத்துவம், ஆயுர்வேதம் என்று பலவித மருந்துகள் இருப்பது உண்மைதான். ஆனால் ஆயுர்வேத மருந்துகளைப் பயன்படுத்துகிறபோது, வலி நிவாரணம் கிடைப்பது ஒருபுறம் என்றால், வாயுத் தொல்லை, வயிற்று எரிச்சல் போன்ற பக்க விளைவுகள் வருவது இல்லை என்பது கூடுதலான பலன்."

"ஆர்த்தோ க்யூர் மருந்துகளின் ஸ்பெஷாலிடி என்ன?"

"செலரி என்று ஒரு விதை. அதற்கு ஏகப்பட்ட மருத்துவ குணங்கள் உண்டு. சாதாரண ஜுரம், ஜலதோஷம் முதல் பிளட் பிரஷர், டயபடீஸ் வரை, பல வியாதிகளுக்கும் நிவாரணம் அளிக்கவல்லது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. அந்த செலரி விதையை, ஆயுர்வேதத்தில் அசமந்த ஓமம் என்கிறார்கள். ஆர்த்தோ க்யூர், அந்த அசமந்த ஓமத்தின் சாரத்திலிருந்து தான் தயாரிக்கப்படுகிறது. கூடவே பாரம்பரிய வலி நிவாரணிகளான வெள்ளை குங்குலியம், மகாரசநாதி வாத சூரணம், மகாயோக ராஜ குக்குலு ஆகியவையும் சேர்க்கப்படுவதால், உடனடி வலி நிவாரணம் கிடைக்கிறது."

"மூட்டு வலிக்கு, ஆர்த்தோக்யூர், மாத்திரை, தைலம், எது உடனடியாக நிவாரணம் அளிக்கும்?"

"பத்து கிலோ மூலப் பொருளிலிருந்து, ஒரு கிலோ அளவுக்குத்தான் எக்ஸ்டிராக்ட் கிடைக்கும். அதிலிருந்து மாத்திரை தயாரிக்கப்படுகிறது. எனவே மாத்திரையின் செயல்திறன் அதிகம். நாளடைவில் வலி குறைகிற போது, மாத்திரையின் அளவையும் குறைத்துக் கொள்ளலாம். தைலம், அதிக வீரியமானது. மூட்டில் ஒரு சில சொட்டுகளை விட்டு, அழுத்தித் தேய்த்தாலே போதுமானது. மாத்திரையுடன் தைலத்தையும் சேர்த்துப் பயன்படுத்தினால், நிவாரணம் சீக்கிரமாகக் கிடைக்கும்.

— மௌலி

ஆடை அணிவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இந்தப் பட்டியலில் புதிதாக ஒரு காரணம், "ஆரோக்கியத்திற்காக!"

கேரளாவில் ஆயுர்வேதப் புடைவைகள் தயாரிக்கப்படுகின்றன. இதை அணிந்து கொண்டால், பலவித உடல் மற்றும் மனநோய்கள் குணமாகும் என்று செய்தி.

இது எந்த அளவிற்கு சாத்தியம்? ஆயுர்வேத மருத்துவர் வீரசோழனிடம் கேட்டோம்.



"கேரளாவில் திருவனந்தபுரத்திற்கு அருகேயுள்ள பாலராமபுரம் எனும் இடத்தில்தான் இப்படி ஆயுர்வேதப் புடைவைகள் தயார் செய்கிறார்கள்.

இந்தப் புடைவைக்காக வெட்டிவேரிலிருக்கும் நார்களை இழைகளாக்கி நெசவு செய்கிறார்கள். ஆயுர்வேதக் கஷாயத்தின் மூலம் இதற்கு வண்ணம் சேர்க்கிறார்கள்.

தோல் வியாதி, வயிற்றுவலி என்று தொடங்கிப் பல நோய்களிலிருந்து, இதை அணிவதால், விடுதலை கிடைக்கும் என்கிறார்கள். மற்றவை எப்படியோ, தோல் வியாதி உள்ளவர்களுக்கு நிவாரணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. கருங்காலி, வெட்டிவேர், வேம்பு, சேராம் கோட்டை போன்ற மருத்துவப் பொருள்

ஆயுர்வேதப்

களிலிருந்து இந்தக் கஷாயம் தயாரிக்கப்படுவதால் பலன் இருக்கும்.

செயற்கை இழையில் தயாரிக்கப்பட்ட உடைகள், வியர்வையை உறிஞ்சாது. ஆனால் ஆயுர்வேதப் புடைவைகள் உடல் வெப்பத்தை, பித்தத்தைக் குறைக்க சாத்தியம் உண்டு.

அக்யூப்ரஷர் என்கிற அடிப்படையில், கூர்மைப் பகுதிகள் கொண்ட காலணிகளை அணிகிறோம். காந்த பெல்டினால் பலன் உண்டு என்கிறார்கள். அப்படியிருக்க, ஆயுர்வேதப் புடைவைகளால் மட்டும் பலன் இருக்காதா என்ன?

அந்தக்காலத்திலேயே திருவாங்கூர் மகாராஜாவின் அரண்மனையில், ஆயுர்வேத உடைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

புடைவை மட்டுமல்ல, வேட்டி, உள்ளாடைகள் போன்றவற்றையும் அந்தக் கேரள நிறுவனம் விரைவில் தயாரிக்க உள்ளதாம். முக்கியமாக ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு, இந்த ஆயுர்வேத ஆடைகள் ஏற்றுமதி



• வீர சோழன்

யாகின்றன.

விரைவில் 'ஆயுர்வேத மது'வும் தயாரிக்கும் எண்ண முண்டு என்று கூறியிருக்கிறார்கள் இவர்கள். அதாவது, இதை அருந்தினால் மது அருந்திய உணர்வும் இருக்கும், உடலுக்கும் தீங்கு செய்யாது. ஆனால் இது எங்களைப் போன்ற மருத்துவர்களுக்கு வியப்பான விஷயமல்ல. ஆயுர்வேதத்தின் மருந்தை அரிஷ்டம், ஆசமம் என்போம். இவற்றில் இரண்டிலிருந்து மூன்று சதவிகிதம் ஆல்கஹால் உண்டு. மருத்துவர் கூறுவதைப்போல இரண்டு அல்லது மூன்று மடங்கு மருந்தை உட்கொண்டால், இலேசான கிறுகிறுப்பு ஏற்படலாம். சில மருந்து வகைகளை குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது என்றும், வேறு சிலவற்றை தண்ணீர் கலந்துதான் சாப்பிட வேண்டும் என்றும் நாங்கள் கூறுவது இதற்காகத்தான். சில மருந்துவகைகளை பூமிக்கடியில் பத்து நாட்கள் புதைத்துவைத்துக் கூட

புடவை

-பலன் உண்டா?



நாங்கள் வெளியே எடுப்பதுண்டு."

"மன இறுக்கத்தை இதுபோன்ற உடைகள் எப்படிச் சரிப்படுத்தும்?"

"இந்த உடைகளின் வண்ணத்தை நாம் வழக்கமாகக் குறிப்பிடுவதுபோல் சிவப்பு, பச்சை, நீலம் என்று குறிபபிடுவதில்லை. மாறாக, மஞ்செட்டி, கடுக்கா, இண்டிகா என்று அந்தந்த மருந்தின் பெயரிலேயே குறிப்பிடுகிறார்கள். இவற்றில் எதுவும் அழுத்தமான வண்ணமல்ல. வெளிர் நிற உடைகளை அணியும்போது, பார்ப்பவர்களுக்கும் அணிபவருக்கும் அமைதி கிடைக்கும்.

"இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் உடைகள் என்பதால், சுற்றுப்புறச் சூழலுக்கு இவை எதிரானவை அல்ல. நோய்களை முறியடிக்க இவற்றின் வாய்ப்பு 50 - 50 என்று கூறுவேன். ஆனால் 'இந்த உடைகளைப் பிற வழக்கமான உடைகளுடன் சேர்த்து துவைக்கக் கூடாது, டிடர்ஜெண்டுகளை பயன்படுத்தக் கூடாது' என்றெல்லாம் போடப்படும் பல நிபந்தனைகளைப் பார்த்தால், பணக்காரர்களும், உயர் மத்தியதர வகுப்பினரும் தான் இவற்றைப் பயன்படுத்த முடியும் என்று தோன்றுகிறது."

படம் - நன்றி
'அவள் விகடன்'

கலக்கும் கற்றாழை!

உலகை வெல்லப் புறப்பட்டான் மாவீரன் அலெக்ஸாண்டர். அதற்கு முன் தனது ஆசிரியர் அரிஸ்டாட்டிலைச் சந்தித்தான். "குருவே, நான் வெற்றிகளைக் குவிக்க வேண்டும். என் வீரர்கள் நம்பிக் கையோடு என்னைப் பின் தொடர வேண்டும். இதற்கு நான் என்ன செய்யட்டும்?"

"அலோவேராவை தேவையான அளவு எடுத்துச் செல்" - இது அரிஸ்டாட்டிலின் பரிந்துரை. அதென்ன அலோவேரா? 'அலோ' என்ற அரேபியச் சொல்லுக்குக் 'கசப்பு' என்று அர்த்தம். இந்த வார்த்தையிலிருந்து பிறந்ததுதான் அலோவேரா! நம்ம ஊர் கற்றாழைதான் இந்த அலோவேரா. கற்றாழை, காயங்களை விரைந்து குணப்படுத்தும் மிகப் பழைமையான மூலிகை! இதை மண்ணிலிருந்து பிடுங்கி அந்தரத்தில் கட்டித் தொங்கவிட்டாலும், பல ஆண்டுகள் உயிரோடிருக்கும் அதிசயத் தாவரம். 'ப்ளாண்ட் ஆஃப் இம்மார்ட்டாலிட்டி' என ஆயுர்வேதம் கொண்டாடும் இந்த மூலிகையை எடுத்துச் சென்றால், போரில் படுகாயமுறும் வீரர்களை இழக்க வேண்டிய அவசியமில்லை என்பதையே, அரிஸ்டாட்டில் தனது மாணவனுக்கு அறிவுறுத்தி அனுப்பியிருக்கிறார்.

அலோவேராவின் தாயகம் ஆப்பிரிக்கா கண்டம். காற்றாழையின் சக்தி அறிந்து - கி.மு. ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன், அதைப் பயன்படுத்தி, பலனடைந்த பெருமையை எகிப்தியர்கள் தட்டிக் கொண்டு போய்விடுகிறார்கள். கிளியோபாத்ரா தனது மேனி எழிலைப் பராமரிக்க, கற்றாழைக் கூழைப் (ஜெல்) பயன்படுத்தியதாக, பழைமையான எகிப்திய புத்தகமொன்றில் எழுதப்பட்டிருக்கிறதாம். எகிப்தியர்கள் கண்கண்ட மருந்தாக இதைப் பயன்படுத்தியதால், 'பாலைவனத்தின் லில்லி' என்ற பாராட்டைப் பெற்ற கற்றாழை, அரேபிய வணிகர்கள் மூலம் உலகம் முழுக்க எடுத்துச் செல்லப்பட்டது. இன்று ஐந்நூறு வகைக் கற்றாழைகள் உலகின் எல்லா தட்பவெட்பச் சூழ்நிலைகளையும் ஏற்று வளர்வதிலிருந்தே இதன் மகிமையை உணர முடியும்.

தீப்புண், வயிற்றுப்புண் என்று எல்லாவகைப் புண்களையும் ஆற்றுவதற்கும், தலையில் தேய்த்துக் குளிப்பதற்கும், வயிற்றுப்போக்கை நிறுத்தவும் கற்றாழையைப் பயன்படுத்துவதுதான் நமது பாட்டி வைத்தியம். ஆயுர்வேதம் ஒருபடி மேலே சென்று, உடலில் இருக்கும் நச்சுத்தன்மையைப் போக்கவும், தோல்நோய்களைத் தீர்க்கவும் பயன்படுத்திக் கொண்டது. இப்படிப்பட்ட கற்றாழை போன்ற தனித்துவம் மிக்க மூலிகைகள் தொழில் புரட்சிக்குப் பிறகு, அலோபதி மருத்துவத்தின் வருகையால், தனது முக்கியத்துவத்தை



இழந்து விட்டன. இப்போது உலகமே இயற்கை வாழ்வுக்குத் திரும்பும் வேளையில், ஆயுர்வேதத்திற்கும், அலோபதிக்கும் அலோவேரா பாலம் அமைக்கிறது" என்கிறார், சென்னையில் நேச்சுரல் கேர் சென்டர் என்ற ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவி அலோவேரா பற்றிய பிரத்யேக ஆராய்ச்சி

யில் ஈடுபட்டு வரும் டாக்டர் பி. ரவிச்சந்திரன்.

"நோய் இல்லாமல் எப்படி வாழ்வது என்பது ஆயுர்வேதம். நோய் வந்த பிறகு தீர்க்க முயல்வது அலோபதி. இவை இரண்டும் வெவ்வேறு துருவங்கள்தான். ஆனால் சில இடங்களில் இணையும். இதற்கு ஆயுர்வேதத்தில் கையாளும் மூலிகைகளை எப்படிப் பயன்படுத்துவது என்று தெரிய வேண்டும்" என்று சொல்லும் இவர், அலோவேராவின் ஜெல்லை, ஆயுர்வேதத்தில் பிரித்தெடுத்து இரசாயனங்கள், செயற்கை வண்ணம், செயற்கை மணம், எதுவுமற்ற முழுமையான அலோவேரா ஆயுர்வேதத் தயாரிப்புகளைக் கண்டறிந்திருக்கிறார்.

• பி. ரவிச்சந்திரன்





"நவீன மருத்துவம் 1930களில் தான் அலோவேராவை ஆராய்ந்தது. அதில் ஆறு ஆன்டிசெப்டிக் ஏஜென்டுகள், மினரல்ஸ் மற்றும் அமினோ அமிலம் இருப்பதைக் கண்டறிந்தது. அலோவேராவில் உள்ள இந்தப் பொருட்கள், உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை உண்டாக்கும். இதில் தொண்ணூற்று ஆறு சதவிகிதம் என்சைம்கள் நிறைந்த தண்ணீர் இருப்பதால், தோலின் ஈரத் தன்மையை நாற்பத்தெட்டு மணி நேரம் தக்க வைக்கும் என்று கண்டறியப்பட்டது. அரிப்பை நீக்கவும், தோலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும் செய்கிறது. இது தவிர மலச்சிக்கல், வயிற்றுப் போக்கு, வாந்தி என்று இதன் தீவிர மருத்துவ குணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். தலைமுறைகள் மறந்துபோன இந்த ராஜமூலிகையைச் சூடுபடுத்தி, ஜெல்லைப் பிரித்தெடுத்து, பன்னாட்டு நிறுவனங்கள் பல, மருத்துவத் தயாரிப்புகளை நமக்கே அனுப்புகின்றன! இவை உயிரற்ற மருந்துகள். இயற்கையான குளிர்விப்பு முறையில்தான் கூழைப் பிரித்தெடுத்துப் பயன்படுத்த வேண்டும். பத்தாண்டுகள் முயன்று இந்த முறையில் பிரித்தெடுத்த அலோவேரா ஜெல்லில், மற்ற மூலிகைகளைக் கலந்து தயாரிப்புகளை உருவாக்கி, வெற்றி கண்டோம்" என்னும் இவர், தங்கள் தயாரிப்புகளுக்காக, இந்தியன் ஆர்கானிக் சர்டிபிகேஷன் நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறோம் என்கிறார்.

அலோவேரா மல்டிபர்ப்பஸ் ஜெல், ஹேர்கேர், ஃபேஸ்கேர், ஸ்கின்கேர், சர்க்கரையோ, சாக்ரீனோ இல்லாத பற்பசை என இவர்களது எல்லாத் தயாரிப்புகளிலும் நாற்பது முதல் அறுபது சதவிகிதம் வரை அலோவேரா ஜெல் இடம் பெற்றிருப்பது சிறப்பம்சம். மற்றொன்று, கைமுறையில் செய்யப்படும் இவர்களது மருந்துக் கூடத்தில், சிறுநீரகம் பழுதடைந்தவர்களை வேலைக்கு அமர்த்தி, அவர்களின் மறுவாழ்வுக்கு உத்திரவாதம் அளித்திருப்பது.

குறிப்பு: அலோவேராவை மலர்த் தொட்டிகளில், மூலிகை மற்றும் அழகுச் செடியாக வளர்க்க விரும்பினால், உலர்ந்த மண்ணில் நடவு செய்ய வேண்டும். மறந்தும் தண்ணீர் விடக் கூடாது. குறிப்பாக நிழலில் தொட்டி இருப்பது, அதிக ஜெல் நிரம்பிய இதழ்களுக்கு அடிகோலும்.

— ஜெய்

ஐய்யோ முதுகுவலி!




''முதுகு வலி சர்வ சாதாரணமாகிவிட்டது. இதை ஆயுர்வேதத்தில் 'மேரு ரோகம்' என்பார்கள். வாத சிகிச்சை முறைகளை அடிப்படையாகக் கொண்டு, ஸ்நேக பானம் (மூலிகை நெய் கொண்டு செய்யப்படுவது) தைல தேய்ப்பு முறைகள், நோயாளியின் வயிற்றைச் சுத்தம் செய்யும் முறைகள் போன்றவை நல்ல பலனளிக்கின்றன'' என்கிறார்கள் டாக்டர் தன்வந்திரி பிரேம்வேலும் இவரது சகோதரர் டாக்டர் கார்த்திக் வேலும்.

இவர்கள் மதுரை தன்வந்திரி ஆயுர்வேத நிலையத்தை நடத்தி வருபவர்கள்.

''சமீபத்தில் நடந்த ஒரு கருத்தாய்வுப்படி, ஐம்பத்தொன்பது சதவிகிதம் விபத்துகளாலும், ஐந்து புள்ளி எட்டு சதவிகிதம் பிரசவத்தாலும் முதுகு வலி ஏற்படுதுன்னு சொல்றாங்க. ஆயுர்வேதத்துல இந்த வலி, வாதத்தோட தொடர்புடையதாக உள்ளது. 'பத்ரபோடலா ஸ்வேதம்' முதுகெலும்பு வலியைக் குணப்படுத்துவதில் மிக முக்கியமான முறை'' என்கிறார் டாக்டர் கார்த்திக் வேல்.





* கார்த்திக் வேல்



* பிரேம் வேல்

''இடுப்பு எலும்பு நோய்கள், இரத்தக் குழாய் சம்பந்தமான நோய்கள், நரம்பு பலவீன நோய்கள், எலும்பு தேய்மான நோய்கள் இவற்றின் தொடர்பாக முதுகெலும்பு நோய்கள் ஏற்படும். அதிக வேலை அல்லது உடல் உழைப்பு, மன அழுத்தம், மனச்சோர்வு இவை அனைத்தும் முதுகெலும்பு வலியைத் தூண்டும். இதைக் குறைக்கவும், கட்டுப்படுத்தவும் பல முறைகள் இருக்கிறன்றன.

"ஆயுர்வேதத்தில் வாத சிகிச்சை முறைகளில் அடிப்படையான விதிமுறைகளை இதற்குப் பயன்படுத்துகிறோம். உள் வெளி மருந்துகள் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடிகிறது. ஸ்நேக பானம் (மூலிகை நெய்யினைக் கொண்டு செய்யப்படுவது), தைலத் தேய்ப்பு முறைகள், மற்றும் நோயாளியின் வயிற்றினைச் சுத்தப்படுத்தும் முறையும் இதற்குள் அடங்கும். நோயாளிக்கு அளிக்கப்படும் மருந்துகளில் வாதத் தன்மைகள் இருப்பது அடிப்படை விதியாகும். ஸப்த சாரம், ரசனஸ்பதக கஷாயம், புடம் போடப்பட்ட க்ஷீரபலா தைலங்கள், தான்வந்தர தைலங்கள், யோகராஜ குளிகைகள் போன்றவை இந்த வலியினைக் கட்டுப்படுத்தவல்லவை. இதனுடன் பல ஆஸவ அர்ஸ்டங்களும் கொடுக்கப்படும். இந்த சிகிச்சை முறைகள் அனைத்தும் முதுகுத்தண்டை மையமாக வைத்து, ஏற்படும் மிகத் தீவிரமான வலியைக் குறைக்க வல்லவை. ஆனால் சில நோய்களின் வெளிப்பாடாக இந்த முதுகெலும்பு வலியானது தோன்றியிருந்தால், அந்த நோய்களின் கூறுகளை களைந்தெறிய ம். அப்போதுதான் இந்த முதுகெலும்பு வலியினைக் குறைக்க இயலும், என்கிறார் பிரேம் வேல்.

"சரியான ஓய்வு, மிதமான உணவு, சரியான படுக்கை முறை, உடற்பயிற்சி, கவனமாக எடைகளைக் கையாளுதல் போன்றவற்றைப் பின்பற்றினால், முதுகுவலி வராமல் தடுக்கலாம். மலம் சரியாக வெளியேறாமல் இருந்தால் முதுகு வலி வரும். நார்ச்சத்துள்ள காய்கறி, பழங்களை உட்கொள்வது ஆரோக்கியம் தரும்'' என்கிறார்கள்.

- கணேசன்




ஆயுர்வேத அழகி!

நம்ம ஊரில் ஆங்கில மருந்துகள் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருப்பதை போல, லண்டனிலும் ஓர் ஆயுர்வேதக் கம்பெனி ஆயுர்வேத மருத்துவத்தைப் பல வருடங்களாகப் பிரபலப்படுத்தி வருகிறது. 'தி ஆயுர்வேதிக் கம்பெனி ஆஃப் கிரேட் பிரிட்டன்' என்ற நிறுவனம், 'ஆயுர்வேதிக் சாரிடபிள் ஹாஸ்பிடல்' என்ற மருத்துவமனையோடு, தேம்ஸ் வேலி பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து ஆயுர்வேதப் படிப்பையும் சொல்லிக் கொடுகிறது. இதன் நிறுவனர் கோபி வாரியர், கேரளாக்காரர்.

சமீபத்தில் இந்நிறுவனத்தின் சார்பாக நடத்தப்பட்ட 'தி டான்ஸ் ஆஃப் ஆயுர்வேதா' என்ற நாட்டிய நிகழ்ச்சி, லண்டன் மக்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாம். 'நீனாராஜாராணி' என்ற பரதக் கலைஞர், தன்வந்திரி உருவான கதை, வாத, பித்த, கப தத்துவம் போன்றவற்றை, நாட்டிய நாடகமாகச் சொல்லி அசத்திவிட்டாராம்.

— அனு





* பள்ளி மாணவிகள்...

மூலிகை வனம்!

கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சை. இப்படியொரு இடத்தில் நிற்பதே மனத்துக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைத் தருகிறது.

பதிமூன்று ஏக்கர் பரப்பளவில் விரிந்து கிடக்கும் இந்த மூலிகைப் பண்ணையில் நின்றால், புத்துணர்ச்சி வராதா என்ன?

கோவை, தி ஆரிய வைத்திய பார்மஸிக்குச் சொந்தமான மூலிகைப் பண்ணைதான் இது!

கோவையிலிருந்து நாற்பத்தியிரண்டு கி.மீ. தூரம் பாலக்காடு! இம் மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இயற்கையை விரித்து வைத்திருக்கிறது கஞ்சிக்கோடு கிராமம்.

இந்த மூலிகை வனத்தில் தொள்ளாயிரத்து ஐம்பது வகையான மூலிகைச் செடிகள் பயிரிடப் பட்டுள்ளன. இருநூறு வகையான மூலிகைச் செடிகளை வெளியே விற்று வருகின்றனர். அதில் மிக அதிகமாக விற்பனையாவது, மருந்துக் குருக்கை, வெட்டிவேர்.

பதிமுகம் என்கிற மூலிகைச் செடி, சாதாரண ஏழையையும் பணக்காரராக ஆக்கி விடுமாம்! குடிநீரில் பயன்படுத்துவது. தண்ணீரைச் சூடாக்கி அதில் பதிமுகச் செடியின் தண்டுகளை வெட்டிப் போட்டு கொதிக்க விட்டால், தண்ணீர் வயலெட் வண்ணமாக மாறி விடுகிறது. கேரளாவின் பெரும்பாலான உணவு விடுதிகளில், பதிமுகத் தண்ணீரே குடிநீராக வழங்கப்பட்டு வருகிறதாம். குடிநீரும்











• மூலிகைகள்...

• மூலிகை பண்ணை

சுவை, தேக ஆரோக்கியத்துக்கும் உத்தரவாதம். அது சரி, பணக்காரராவது எப்படி?

கேரள மாநிலத்தில் மட்டுமே புழங்கி வந்த பதிமுக மகிமை, கடந்த இரண்டாண்டுகளில் கப்பலேறி அமெரிக்கா, இங்கிலாந்து என பரவத் தொடங்கியது. அவர்களுக்குப் பதிமுகத்தின் மீது மாறாத பதிபக்தி. ஆனால் அந்த மண்ணில் இந்த மூலிகை வளராத ஒரு சூழல். வேறு என்ன செய்வது? பதிமுகத் தண்டுகள் கேரளாவிலிருந்து தற்போது வெளிநாடுகளுக்கு வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மூன்றாண்டுகளுக்கு முன்பாக ஒரு கிலோ பதிமுகத் தண்டின் விலை நாற்பது ரூபாய். இப்போது அதற்குக் கிடைக்கும் விலை கிலோவுக்கு நானூறு ரூபாய். அதன் விதை ஒரு கிலோ, ஆயிரத்தைந்நூறு ரூபாய். நீங்களும் பதிமுகம் பயிரிடத் தயாராயிட்டீங்களா?

சர்க்கரை நோயாளிகளுக்கு என மூன்று முத்தான மூலிகைகள் இந்த மூலிகைப் பண்ணையில் இடம் பெற்றுள்ளன.

• ஸ்டீவியா மூலிகை

இது தென்அமெரிக்காவின் பராகுவேயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூலிகை. காய வைத்துப் பொடிச் செய்து, டீ, காபியில் சர்க்கரைக்குப் பதிலாகக் கொஞ்சமாக... அதி கொஞ்சமாக (அட... ஆமாங்க) சும்மா துளியூண்டு ஸ்டீவியா மூலிகைப் பொடியைத் தூவினால் போதும். சர்க்கரையை விட மூந்நூறு மடங்கு இனிப்பு என ஆய்வுகள் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடுகிறார்கள். இத்தனை இனிப்பான ஒரு விஷயத்தை சர்க்கரை நோயாளிகள் சேர்த்துக் கொள்ளலாமா? அங்குதான் இருக்கிறது சூட்சுமம். இந்த மூலிகைப் பவுடரானது, இரத்தத்தில் சர்க்கரையின் அளவை புதிதாக உயர்த்துவதும் இல்லை. குறைப்பதும் இல்லை. இது சர்க்கரை நோயாளிகளுக்கு 'இனிப்பான' செய்திதானே?

• இன்சுலின் மூலிகை

புளிப்புச் சுவை கொண்டது. டயாபடீஸ் நோயாளிகள் தினசரி ஓர் இலை சாப்பிட்டு வந்தால் போதும். ஒரு மாதத்துக்குள் அவர்கள் உடம்பில் சர்க்கரையின் அளவு ஒரு கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும்.

• சர்க்கரைக் கொல்லி மூலிகை

இதன் இலை ஒருவித அபூர்வமான தன்மை







"எதுக்கு இப்ப உனக்கும் உன் மாமியாருக்கும் பெரிய சண்டை?"

"எதிர்வீட்டு மாமியார் மருமகள் சண்டையை விலக்கி விட என் கணவர் போனது சரியா, தப்பானுதான்!"

- உ. ராஜாஜி

கொண்டதாகும். சர்க்கரைக் கொல்லி மூலிகையின் இலையைப் பறித்து, மென்று, உள்ளே தள்ளினால் போதும். அதனையடுத்து நாம் கிலோ கணக்கில் சர்க்கரையை அள்ளி அள்ளிச் சாப்பிட்டாலும் இனிப்புச்சுவையை நாக்கு உணரவே உணராது. அத்தனையும் சப்பென்றிருக்கும். சுமார் இரண்டு மணி நேரத்துக்கு அதன் "அதிமந்த" சுவை நாக்கில் ஒட்டிக் கொண்டே இருக்குமாம். இதில் விசேஷம் என்னவென்றால், இனிப்பைத் தவிர, மற்றவற்றைச் சாப்பிடும்போது அவ்விதம் இருப்பதில்லை. இதனாலேயே இந்த மூலிகைக்குச் சர்க்கரைக் கொல்லி எனப் பெயர் வந்துள்ளது. சர்க்கரை வியாதிக்கு இது ஒரு சிறந்த ஆயுர்வேத மருத்துவ மூலிகையாக இருந்து வருகிறது.

மூலநோய்க்குப் பயன்படுவது மிருத சஞ்சீவினி. வயிற்றுக் கோளாறுக்குத் தச மூலா. ஆஸ்த்மா, சளி தொந்தரவுக்குத் திரிகடுகம். எண்ணற்ற மூலிகைச் செடிகள் இங்குப் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றில் ஆரோக்கியப் பச்சை மூலிகை என்பது அதிசயம் நிறைந்தது. அதன் காய்களைப் (முந்திரிப்பருப்பு போல நீண்டும், அளவில் சின்னதாகவும் இருக்கும்) பறித்துத் தின்றால் போதுமாம். பசி எடுக்காது, தாகம் தோன்றாது, களைப்பு ஏற்படாது. மலைப் பிரதேசங்களில் இதனை நன்கு அடையாளம் காணத் தெரிந்த மலைவாசிகள், பறித்துத் தின்றுவிட்டு, அப்படியே களைப்பு அடையாமல் கம்பீரமாக மைல் கணக்கில் மலைப் பிரதேசங்களில் நடந்து கொண்டே இருப்பார்களாம்!

அனலி வேகம் என்பது ஒரு மூலிகைச் செடியின் பெயர். விஷப்பாம்புகளில் மூன்று வகை. ஒன்று நல்ல பாம்பு. இரண்டாவது அனலி பாம்பு. மூன்றாவது சங்கு விரையன் பாம்பு. இந்த மூன்று வகையான விஷப்பாம்புக் கடிகளுக்கும் கைகண்ட மருந்து இந்த மூலிகை. அனலி வேகம் மூலிகைச் சாறுடன் வில்வாதி குளிகை கலந்த ஆயுர்வேத மருந்தே பாம்பு விஷத்தை முற்றிலும் வீரியமிழக்கச் செய்து விடுகிறதாம்.

இத்தனை மூலிகைப் பயிர்களையும் இந்த மூலிகைப் பண்ணைக்குள் வளர்த்து முடக்கி வைத்தால் போதுமா? இதன் இயக்குனர் கே.பி. ரவிக்குமார், மூலிகைகள் பற்றிய விழிப்புணர்வையும், ஆர்வத்தையும் பள்ளி மாணவ மாணவிகள் மத்தியில் கொண்டு சென்றுள்ளார். இதற்கென 'ஸ்கூல் கிரீன் ஹெல்த் கிளப்' என்ற ஒன்றும் துவக்கப்பட்டுள்ளதாம்.

"வளர்ந்து வரும் மாணவ சமுதாயத்திடம் மூலிகை வனங்கள் பற்றிய விழிப்புணர்வை இந்த கிளப் உண்டு பண்ணும் என்பதில் ஐயம் ஏதுமில்லை" என்கிறார் கே.பி.ரவிக்குமார்.

மூலிகைப் பாதுகாப்பு ஆவண அகம் ஒன்றும் இங்கு இருக்கின்றது. நூற்றியைம்பது மூலிகைக் குடும்பங்களிலிருந்து நாநூற்றியைம்பது மருந்துச் செடிகளின் பூர்வாங்க ஆவணங்கள், இங்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. சில அபூர்வ மூலிகைச் செடிகள் முற்றிலும் அழிந்து கொண்டே வருகின்றனவாம். அவற்றில் சிலவற்றை அடையாளம் கண்டு, இங்குப் பயிரிட்டு பேணிப் பாதுகாத்து வருகிறது பாலக்காடு - கஞ்சிக்காடு பாரம்பரிய இந்திய மருத்துவ மைய மூலிகைப் பண்ணை!

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நெல்லி ஜூஸ் நெல்லிச் சட்னி



மேற்குத் தொடர்ச்சி மலையில், அதியமானுக்குக் கிடைத்த அபூர்வ அருநெல்லிக்கனியை, அவ்வைக்கு அவன் வழங்கிய வரலாறு எல்லோருக்கும் தெரியும். இன்று அதே மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில், ஆண்டுக்கு ஐந்து லட்சம் நெல்லிக்கனிகளை அறுவடை செய்து வருகிறார் அருண் ஆர். நாகராஜன். அதுவும் இயற்கை வேளாண்மை மூலம்.

நெல்லிக்கனி என்றால் நம் நினைவுக்கு வருவது வெறும் ஊறுகாய் மட்டும்தான். ஆனால் நெல்லிக்கனி ஓர் ஆயுர்வேதப் பெட்டகம். பித்தம் (மயக்கம்) தெளியவைக்கும் சித்த மருத்துவச் சொத்து. ஆயுர்வேத மருத்துவ உலகின் தலைசிறந்த 'ஹெல்த் டானிக்' என்று போற்றப்படும் ச்யவன்பிராஷ், நெல்லியின் பரிசு!

வள்ளுவன் சொல்லும் நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடியாக தொன்று தொட்டு உயிர் காக்கும் நெல்லி, நோய் எதிர்ப்புச் சக்தியை வழங்கும் இயற்கையின் வரம். இதயம், சிறுநீரகம் என்று உடலின் கட்டுப்பாட்டு மையங்களைப் படிப்படியாகத் தாக்கிச் செயலிழக்கச் செய்வது இரத்தக் கொதிப்பு நோய். இதற்கு கண்கண்ட மருந்து நெல்லிச் காய்ச் சூரணமும், நெல்லிக்காய்ச் சாறும்.

'ஆனால் தமிழகத்தில் எங்கே நெல்லிக்கனி போதிய அளவு இடைக்கிறது? கிடைத்தால்தானே மருந்தாகவும் உணவாகவும் பயன்படுத்த முடியும்?' எனக் கேட்பதில் நியாயம் இருக்கிறது. "நெல்லிக்குத் தட்டுப்பாடு நீங்கினால், நோய்களுக்கும் தட்டுப்பாடு வரும்" என்று சொல்லும் அருண் ஆர். நாகராஜன், திண்டுக்கல்லை அடுத்த பட்டிவீரன்பட்டி இளைஞர்.



வறண்டு கிடந்த நிலத்தில் இவர் நெல்லியை நடவு செய்தது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. இப்போது ஏக்கர் ஒன்றுக்கு எண்பதாயிரம் ரூபாய் வருமானம் ஈட்டி வளமுடன் வாழு இவரை, விவசாயிகள் மொய்க்கிறார்கள். ஆயுர்வேத மருந்து கம்பெனிகள் நெல்லிக்கனிகளுக்காக இவரிடம் முன்பதிவு செ கின்றன. எப்படி முடிந்தது இவரால்? நெல்லி விவசாயத்தை இவர் தேர்ந்து கொண்டது ஏன்?

"கொடைக்கானல் மலைப் பகுதியில் நீண்ட காலமாக எ கள் குடும்பத்தினர் காஃபி பயிரிட்டு வந்தோம். காஃபி, பெரு விலை வீழ்ச்சியைச் சந்தித்து வந்த சூழ்நிலையில், நிலங்களை தரிசாக விட்டுவிட வேண்டிய நிலை. இன்னொரு பக்க

பட்டிவீரன்பட்டியில் எங்களுக்கிருந்த நிலம் சரளைக் காடாகக் கிடந்தது. இதைச் சீரமைத்து மரங்களை நடலாம் என்று திட்டமிட்டிருந்தபோதுதான், சேலத்தைச் சேர்ந்த மேத்தா என்ற பெரிய விவசாயி எனக்கு நெல்லியை அறிமுகம் செய்தார்.

“உத்திரப்பிரதேச மாநிலம் ஃபைஸாபாத்தில் உள்ள நரேந்திரதேவ் பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, இருநூறு நெல்லிக் கன்றுகளை எனக்கு வழங்கினார். சுமார் முப்பது ஏக்கர் நிலத்தில் நெல்லியை சோதனை முறையில் நடவு செய்தேன். இந்தப் பகுதியில் உள்ள ஏந்தல் குளத்தில் இருந்து எனது நெல்லிப் பண்ணைக்குத் தண்ணீர் கிடைத்ததால், ஏந்தல் நர்சரி என்று பெயரிட்டேன். என்றாலும் நெல்லியின் மூலம் லாபம் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை அன்று எனக்கு இல்லை. ஆனால் மூன்றாவது ஆண்டிலிருந்தே நெல்லி காய்க்கத் தொடங்கியது. தொடக்கத்தில் ஒரு மரத்திலிருந்து இருபது கிலோ நெல்லி கிடைக்க ஆரம்பித்து, இன்று நூற்றியிருபது கிலோவாக உயர்ந்திருக்கிறது. ஒரு நெல்லிக் கனியின் எடை நாற்பது கிராம் முதல் அறுபது கிராம் வரை இருக்கிறது. ஆயுர்வேதம், சித்தா, அலோபதி என எல்லா மருத்துவ முறைகளுக்கும் தேவை அதிகமிருப்பதால், விற்பனையில் பிரச்னையே இல்லை. நெல்லியின் பயனை நன்குணர்ந்த கேரள மக்கள், பெரு நெல்லிக்கு எத்தனை விலையானாலும் தரத் தயாராக இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் ஷாம்பூ, ஹேர் ஆயில், ஹேர் டை என்று தொழில் துறையிலும் தேவை அதிகரிக்கிறது. இருப்பினும் நெல்லியை வர்த்தக ரீதியாக விற்பனை செய்ய, வட மாநிலங்களைப் போல நெல்லி ஜூஸ், நெல்லிச் சட்னி, நெல்லி மொரபா, நெல்லி ஒயின் போன்ற புதிய ரெசிப்பிகளைப் பிரபலப்படுத்தி வருகிறோம்” என்று சொல்லும் நாகராஜன், ஒரு கிலோ நெல்லியை முப்பது ரூபாய்க்கு விற்று வருகிறாராம்.

• ஆந்திர முதல்வருக்கு நெல்லி பரிசளிக்கும் நாகராஜன்







• ஆர். நாகராஜன்


“தமிழ்நாட்டில் பணத்தை அள்ளிக் கொடுப்பதாகச் சொல்லப்படும் தென்னையைக் காட்டிலும், பெரு நெல்லி மூலம் பல மடங்கு லாபம் பெற முடியும். ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் எட்டாயிரம் கிலோ வரை கிடைக்கும். தற்போது கிடைக்கும் விலையை ஒப்பிடாமல், கிலோ பத்து ரூபாய் என்று வைத்துக் கொண்டாலே, ஏக்கருக்கு எண்பதாயிரம் கிடைக்கும்” என்று சொல்லும் இவர், “வறண்ட நிலங்களில் நெல்லி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு, பிரதிநிதிகளை அனுப்பி, இலவசமாகவே தரமான கன்றுகளை நடவு செய்து தருவதோடு, தொழில் நுட்பத்தையும் வழங்குகிறோம்” என்கிறார்.



- ஸ்ரீ சக்கரம்

ஹோமியோ - சித்த - ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பெறலாம்

திருமணமாகி பல ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்து வரும் தம்பதியருக்கு திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசியில் பிராமணர் தெருவிலும், சென்னை வடபழனியில் 100 அடி சாலையில் டி.எஸ். கௌரி சங்கர் திருமண மண்டபம் எதிரிலும் மருத்துவமனை நடத்திவரும் டாக்டர் ஏ. அர்ஜுனா, டாக்டர் வி.ஏ. ஆண்டாள் தம்பதிகள் ஆணுக்கு அறவே உயிரணு இல்லாதவர்களுக்கு உயிரணு உற்பத்தி செய்தும், உயிரணு உற்பத்தி குறைவாக உள்ளவர்களுக்கு அதை அபிவிருத்தி செய்தும் - மற்றும் பெண்களுக்கு கருப்பையால் உண்டாகும் அனைத்து கோளாறுகளுக்கும் ஹோமியோ-சித்த-ஆயுர்வேத முக்கூட்டு மருத்துவத்தால் ஆண் - பெண் மலட்டுத்தன்மை நீக்கி குழந்தை பிறக்கச் செய்கிறார்கள்.



* கடலூர் மாவட்டம் சேத்தியா தோப்பைச் சேர்ந்த அருள்தாஸ் - பேரி தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குருழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்று மருத்துவ திலகம் டாக்டர் A. அர்ஜுனாவுடன் உள்ளார்கள்.

கடந்த 44 ஆண்டுகளாக இந்த டாக்டர் தம்பதிகள் மேற்குறிப்பிட்ட இரண்டு இடங்களிலும் மருத்துவமனை நடத்தி வருகிறார்கள். "மலட்டுத் தம்பதிகளில் பெண்களில் 30 சதவீதம் பேரும், ஆண்களில் 70 சதவீதம் பேரும் குறைபாடு உள்ளவர்களாகவே எங்கள் மருத்துவமனைக்கு வருகிறார்கள்" என்கிறார்கள் டாக்டர் அர்ஜுனா, டாக்டர் ஆண்டாள் அர்ஜுனா.

பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினைகளை ஒழுங்குபடுத்தியும், கருப்பை ஓவரிகளை வளர்ச்சியடையச் செய்தும், அதிலுள்ள கட்டிகளை கரைத்தும், கருமுட்டை உற்பத்தி செய்து வெடிக்கச் செய்தும், கருக்குழாய் அடைப்பு நீக்கியும் முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பிறக்கச் செய்கிறார்கள்.

முக்கூட்டு மருத்துவத்தால் கருக்குழாய் அடைப்பு நீங்கியும், உயிரணு உற்பத்தி ஆகியும் குழந்தை பெற்ற தம்பியர்!

கும்பகோணம் லதாகுமார் தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்றார்கள்.

இராணுவத்தில் பணிபுரியும் கெஜலட்சுமி - கிருஷ்ணமூர்த்தி தம்பதியருக்கு (பெரம்பலூர் மாவட்டம் உடையார்பாளையத்தில்) உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் குழந்தை பெற்றுள்ளார்கள்.

கல்கத்தாவில் சுரேஷ் - பரணி தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

காயல்பட்டினத்தில் ஜீனத் - அபுபக்கர் தம்பதியினருக்கு உயிரணு உறபத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் பெண் குழந்தை பிறந்துள்ளது.

வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளியில் ரோஜா மலர் - மணி தம்பதியருக்கு (உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும்) ஆண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை சி.ஐ.டி. நகரில் சுமதி - ஆனந்தவேல் தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருப்பை பிரச்னை நீங்கியும் ஆண் குழந்தை பிறந்துள்ளது.

பாண்டிச்சேரியில் சாந்தி - செல்வராஜ் தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும் கருப்பை பிரச்னை நீங்கி முக்கூட்டு சிகிச்சையால் ஒரு பெண் - இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளார்கள்.

சென்னை புதுப்பேட்டையில் பஸிரியா ஜெயலானி தம்பதியருக்கு முக்கூட்டு சிகிச்சையால் தற்போது ஒரு பெண்ணும், பையனும் உள்ளார்கள்.

மதுரையில் கோபால் - சித்ரா, தம்பதியருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

சென்னை ஆவடியில் திருமதி பாபு தம்பதியருக்கு கருப்பை பிரச்னை நீங்கி ஆண் குழந்தை பிறந்துள்ளது.

11. ராணிப்பேட்டை நரசிங்கபுரம் தென்றல் நகரில் லட்சுமிகணேசன் தம்பதியருக்கு ஒரு பெண்ணும், பையனும் பிறந்துள்ளார்கள்.

தஞ்சை ராஜமன்னார் குடியில் நடராஜ என்பவருக்கு அறவே உயிரணு உற்பத்தி இ லாமல் இருந்து முக்கூட்டு மருத்துவத்தா உயிரணு உற்பத்தி ஆகி அவர் மனைவி த போது 10 மாத பூரண கர்ப்பவதியாக உள்ளா

சென்னை வடபழனி குமரன் காலனியைச் சேர்ந்த சண்முகம் என்பவருக்கு அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருந்து சாப்பிட்டு உயிரணு உற்பத்தி ஆகி, புத்திரபாக்கியம் அடைந் துள்ளார்.

சென்னை நெசப்பாகத்தைச் சேர்ந்த பால்சிங் என்பவர் அறவே உயிரணு இல்லாமல் இருந்து 3 மாத முக்கூட்டு மருந்து சாப்பிட்டதிலேயே உயிரணு உற்பத்தி ஆகி புத்திரபாக்கியம் அடைந்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த அறிவழகன் என்பவருக்கு அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருத்துவத்தால் உயிரணு உற்பத்தி ஆகி புத்திர பாக்கியம் அடைந்திருக்கிறார்.

தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி என்பவருக்கு அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருத்துவத்தால் குழந்தை பாக்கியம் அடைந்துள்ளார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் சந்திரசேகரன் என்பவருக்கு உயிரணுவில் 20 மில்லியன் கவுண்ட் இருந்து முக்கூட்டு மருத்துவத்தால் 78 மில்லியன் உயர்ந்து புத்திர பாக்கியம் அடைந்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டில் வைரவநாதன் - கலாவதி தம்பதியர் புத்திர பாக்கியம் அடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம் நசியனூரில் சின்னச்சாமி சம்பூர்ணம் தம்பதியர் கருக்குழாய் அடைப்பு நீங்கி ஆண் குழந்தை பெற்றுள்ளார்.

லண்டனில் இந்திரேசன் - கலாரஞ்சிதம் தம்பதியருக்கு உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் புத்திர பாக்கியம் அடைந்துள்ளார்கள்.

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி தாலுகாவில் செபாஸ்டின் அறவே உயிரணு இல்லாதிருந்து முக்கூட்டு மருத்துவத்தால் உயிரணு உற்பத்தி ஆகியும், அவரது மனைவி மேரி கருக்குழாய் அடைப்பு நீங்கியும், டிசம்பர் மாதத்தில் ஆண் குழந்தை பெற்றுள்ளார்.

மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில் (194, ராஜீவ் காந்தி தெரு, ஜீவா நகர், 1-வது மெயின் வீதி) திரு. விஜயராஜன் - செல்வி தம்பதியருக்கு முக்கூட்டு மருத்துவ சிகிச்சையால் உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் மற்றும் பல கோளாறுகள் நீங்கியும் 29.10.2002-ல் பெண் குழந்தை பிறந் துள்ளது.

மதுரையில் 23 ஆண்டுகள் குழந்தை இல்லாதிருந்த பாத்திமா சம்சுதீன் தம்பதி யினருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

முக்கூட்டு மருந்து வத்தால் மலேசியாவில் வசிக்கும் ஜீனத் - அபுபக்கர் தம்பதிக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

சவுதி அரேபியாவில் சுப்ரமணி - கிருஷ்ணவேணி தம்பதியருக்கு சென்ற மாதம் ஆண் குழந்தை பிறந்துள்ளது- முக்கூட்டு மருத்து




• சென்னை மாங்காட்டைச் சேர்ந்த ராதா கிருஷ்ணன்-சுசீலா தேவி தம்பதிகள் உயிரணு உற்பத்தி ஆகியும், கருக்குழாய் அடைப்பு நீங்கியும் ஆண் குழந்தை பெற்று டாக்டர் அர்ஜுனாவுடன் உள்ளார்கள். மீண்டும் சுசீலாதேவிக்கு இரண்டாவது குழந்தை பிறந்துள்ளது.

வத்தால்.

"எங்கள் மருத்துவமனையில், தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வந்தும், அயல்நாடுகளில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், கனடா, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, சவுதி அரேபியா, துபாய், குவைத், பக்ரைன், ரியாத், ஓமன், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி போன்ற வெளிநாடுகளில் இருந்து வந்தும் சிகிச்சை பெற்று பயனடைந்து வருகிறார்கள்'' என்றார் டாக்டர் அர்ஜுனா.



தன்வந்திரி



தேவாசுர யுத்தம் ஒன்று நடக்கின்றது. அதில் தேவர்களில் ஒரு பகுதியினர் இறந்து கொண்டே வருகின்றனர். அசுரர்களின் கை ஓங்கி வருகின்றது. இறந்த வண்ணமிருக்கும் தேவர்கள் அனைவரையும் உயிர்ப்பிக்க வேண்டுமெனில் அமிர்தம் கிடைத்தால்தான் என்றாயிற்று. அதற்காகப் பாற்கடலைக் கடைய வேண்டும். அப்போது அதிலிருந்து வெண்ணெய் மாதிரி அமிர்தம் பொங்கி வர வேண்டும். என்ன செய்வது அதற்கு?

மீதமுள்ள தேவர்களும், முனிவர்களும் மந்தரமலையை எடுத்து வந்து மத்தாக்கி, வாசுகி எனும் நாகத்தை கயிறாக்கி, கடைய ஆரம்பிக்கிறார்கள். பாற்கடலிலிருந்து தன்வந்திரி மேலெழும்பி வருகிறார். ஒரு கையில் அமிர்தகலசம். மறுகையில் அட்டைப் பூச்சி. ஒருகையில் சங்கு. மறு கையில் சக்கரம். பிறகென்ன அமிர்த கலசத்திலிருந்து அமிர்தத்தினை பரவச் செய்து, இறந்து கிடக்கும் தேவர்களை உயிர்ப்பித்து விடுகிறார் தன்வந்திரி.

சமஸ்கிருதத்தில் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை குறித்து விரிவாகப் பேசப்படும் நூல் தன்வந்திரி ஸம்ஹிதா. ஆயுர்வேத மருத்துவக் குணங்கள் குறித்த நூல் தன்வந்திரி நிகண்டு.

கோவை ஆரிய வைத்திய சிகிச்சாலயத்தின் உள்ளே, தன்வந்திரி கோயில் ஒன்று உள்ளது. தினசரி காலை வேளையில் பூஜை முடிந்தவுடன், தன்வந்திரி பிரசாதம் சிகிச்சாலயத்தின் ஒவ்வொரு நோயாளிகளுக்கும் கொண்டு சென்று தரப்படுகிறது.

அலோபதி (ஆங்கில) மருத்துவக் கடவுள் (கிரேக்கம்) ஹிப்போகிரேட்டிஸ் என்பது போல, ஆயுர்வேதக் கடவுளாக தன்வந்திரி போற்றப்படுகிறார்.



- திருநா

அட்டை : தன்வந்தி

ஓவியம் : தரு

ARTHRITIS * மூட்டுவலி / CALCANEAL SPUR * குதிகால்வலி

▼ குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur) ▼ கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும். ▼ கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும். ▼ கழுத்து வலி (Cervical Spondylitis) ▼ நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area) ▼ இடுப்பு எலும்பும் (Pelvic Bone) தொடை எலும்பு தலையும் (Femoral Head) சேருமிடம். ▼ குதிகால் இணைப்புகளில் வலி. முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்க விளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம். இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருந்தும் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள்.



மதிப்பிற்குரிய டைரக்டர் திரு. S.P. நாயுடு அவர்களுக்கு,

வணக்கம். நான் தங்களிடம் மூட்டு வலிக்காக வைத்யம் எடுத்துக் கொண்டேன். நன்றாக வலி குறைந்து இருப்பதால் புத்துணர்ச்சியுடன் இருக்கிறேன். தற்சமயம் என்னால் வலி இல்லாமல் நன்றாக நடக்க முடிகிறது. கணுக்கால் வலி மணிக்கட்டு வலி எல்லாம் மறைந்து விட்டது. உங்களுடைய விஞ்ஞான பூர்வமான இயற்கை வைத்தியத்தைப் பார்த்து மிகவும் வியப்படைந்தேன். உங்களுடைய அணுகுமுறையும் நோயாளிகளை நர்ஸ்கள் மற்றும் டாக்டர்கள் அவர்களுடைய அன்பு நிறைந்த பராமரிப்பும் மனதிற்கு மகிழ்ச்சியும் உடலுக்கு ஆரோக்கியத்தையும் அள்ளி வழங்குவதாக அமைந்திருக்கிறது. உணவு கட்டுத் திட்டங்களும் பின்பற்றக் கடினமானதாக இல்லை. என்றென்றும் இந்த சந்தோஷமும் ஆரோக்யமும் நிறைந்திருக்க உங்களையும் உங்களுடைய ஆசார்யர்களையும் பிரார்த்திக்கும்.

இப்படிக்கு,

Mrs. Uma Ramamoorthy, W/o. Mr. Ramamoorthy,
Joint Commissioner of Income Tax, E-7, Income Tax Quarters, T. Nagar, Chennai - 17

பார்கின்சன் வியாதிக்கு

(நடுக்குவாத நோய்க்கான)

பக்கவிளைவுகள் இல்லாத சிறந்த மூலிகை மருந்து தரப்படும்.

பார்கின்சன் வியாதியின் குணங்கள்:

- மூளையில் **Basal ganglion** என்ற பகுதியில் செல்களில் சுரக்கும் **dopamine** என்ற ரசாயனம் குறைவதால் மூளை நரம்புகளின் செயல்திறன் குறைகிறது. இதனால் மூளையின் கட்டளை செயல்பட தாமதமாகிறது. மேலும்
- கை நடுக்கம் • விறைப்புத் தன்மை • தசைகளின் செயல்திறன் குறைதல்
- மற்ற வேகக் குறைபாடுகள்

இரண்டு வகையான ட்ரீட்மென்டுகள்

1. எங்கள் ஆஸ்பத்திரியில் 6 விதமான இயற்கை சிகிச்சைகள் தருகிறோம். மேலும் பார்கின்சன் ஹெர்பல் லேகியம் மற்றும் கேப்சூல் தருகிறோம்.
2. எங்களிடம் நேரில் வந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள முடியாதவர்களுக்கு, நோயாளியின் தற்போதைய மருத்துவ நிலையை தெரிந்து கொண்ட பின் பார்கின்சன் ஹெர்பல் லேகியமும், கேப்சூல்களும் அனுப்பி வைக்கிறோம்.

(எங்கள் பார்கின்சன் லேகியம் அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து நாடுகளுக்கு அனுப்பி வருகின்றோம். படுக்கையில் இருந்தவர்கள் எழுந்து உட்கார்ந்து, நடக்கிறார்கள்.)

ஆஸ்துமா / உடல் பருமன் இவைகளுக்கு இயற்கை சிகிச்சை தருகிறோம்.
மற்றும் இதர வியாதிகளுக்கும் எங்களிடம் ஆலோசனை கேட்கலாம்.

அடையார் இயற்கை வைத்திய மையம்

ADYAR NATURE CURE CENTER ™ Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650 (காந்திநகர் பஸ் டெர்மினஸ் எதிரில்)
www.adyarnaturecure.com E-mail: adyarnaturecure@yahoo.com,

குறிப்பு: சாதா, A/c தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டி.வி., போன் வசதியுடன் கிடைக்கும். பிராமணர்களால் தயார் செய்யப்பட்ட சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Kalki issue Dated 28.3.2004

முக்கிய உறுப்புகள் மூன்று



முழுமையான பராமரிப்பின் முகவரி ஒன்று

விக்ரம் மருத்துவமனை, இந்தியாவில் மட்டுமின்றி அமெரிக்கா, ஐரோப்பா, வளைகுடா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளிலும் உள்ள எண்ணற்ற மருத்துவமனைகளால் பரிந்துரை செய்யப்படும் ஓர் **ENT** மருத்துவமனை. மேலும், இரத்தக்கசிவு மற்றும் காயத் தழும்புகள் இல்லாத அதிநவீன லேசர் சிகிச்சைக்காக, **KTP / 532 AURA** மற்றும் **CARL ZEISS SENSERA** மைக்ரோஸ்கோப் கருவிகளை, தென் ஆசியாவிலேயே முதன்முறையாக கோவையில் அறிமுகப்படுத்திய பெருமையையும் பெற்றுள்ளது.



சென்சரா மைக்ரோஸ்கோப்

விக்ரம் மருத்துவமனையைச் சேர்ந்த உலகப்புகழ் பெற்ற அனுபவம் வாய்ந்த மருத்துவ நிபுணர்கள், அறுவை சிகிச்சை, செயல் விளக்கங்கள் மற்றும் சிறப்புரைகளுக்காக உலகெங்கும் அழைக்கப்படுகிறார்கள்.

சிகிச்சைகளில் 32 ஆண்டுகால நிபுணத்துவம் ... அதிநவீன தொழில்நுட்பம் ...
பூரண குணமடைந்த பல தலைமுறைகள்...

காக்லியர் இம்பிளாண்ட் திட்டம் : கேட்கும் திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு **PGV** ரோட்டரி இண்டக்ரல் காது இன்ஸ்டிடியூட்டில் தீவிர பேச்சு பயிற்சி அளிக்கப்படுகிறது. காக்லியர் இம்பிளாண்ட் என்பது கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்ட **பயானிக்** காது ஆகும். இதன்மூலம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களும் கேட்கும் திறனை மீண்டும் பெறலாம்.

சிறப்பு சிகிச்சை முறைகள்

<u>காது :</u> ● காது கேளாமை, தலைசுற்றல், சீழ் வடிதல் மற்றும் முகவாதம் போன்றவற்றிற்கு நுண்ணறுவை சிகிச்சை ● கம்ப்யூட்டர் ஆடியோமெட்ரி (காது பரிசோதனை) மற்றும் டிம்பனோமெட்ரி ● காது கேளாமையை ஆரம்பத்திலேயே கண்டறிய, குழந்தைகளுக்குப் பரிசோதனை ● B.E.R.A. /O.A.E / S.S.E.P ● டிஜிட்டல் ஹியரிங் எய்ட் மையம் ● காக்லியர் இம்பிளாண்ட் மையம் ● நீரிழிவு நோயினால் காது கேட்காமல் போவதை தடுக்கும் பரிசோதனை.

<u>மூக்கு :</u> ● சைனஸ் / மூக்கு சதை வளர்ச்சி சிகிச்சை ● எண்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரி ● முகம் / மூக்கிற்கான பிளாச்... க் சர்ஜரி ● குறட்டை நீக்கலுக்கு லேசர் சிகிச்சை ● ஸ்லீப் லேப் ● தலைவலி/அலர்ஜி சிறப்பு சிகிச்சை மரு...துவ மையம்.

<u>தொண்டை :</u> ● வீடியோ எண்டோஸ்கோப்பி ● குரல்வளை நுண்ணறுவை சிகிச்சை ● குரல் மாற்று சிகிச்சை/வழக்கமான குரலை தக்க வைக்கும் சிகிச்சை ● தைராய்டு மற்றும் கழுத்து கட்டி சிகிச்சை ● பேச்சு–மொழி சிகிச்சை ● மாஸ்டர் ENT சிறப்பு பரிசோதனை ● முழுமையான புற்று நோய் தடுப்பு பரிசோதனை

மருத்துவ ஆலோசனை பெற விரும்புவோர் முன்பதிவு செய்ய வேண்டியது அவசியம்

விக்ரம் மருத்துவமனை & ENT ஆராய்ச்சி மையம்
69, மேற்கு வெங்கடசாமி ரோ... எஸ். புரம், கோயமுத்தூர் – 641 002. தமிழ்நாடு. இந்தியா. போன் : +91-422- 2550633
2546387, 2550133 மொபை... 0063 ஃபேக்ஸ் : +91-422 - 2545384 E-mail : vikram_hospital@yahoo.com
● டாக்டர் P. G. விஸ்வநாதன் M. S. ... S. D.L. ... டாக்டர் S. பழனிநாதன் M.B., M.S.(E.N.T)
● டாக்டர் அருணா விஸ்வநாதன் M.B. M. ... ● டாக் ... னா விஸ்வநாதன் M.B., M.S.(E.N.T), F.A.G.E.
<u>வருகை மருத்துவர்கள்</u> ● டாக்டர் W.J. ... L.D. ... M.B., M.S.(இந்தானி)